விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

நீரோகா
இன்றைய சுப்பர் பரிசு
ரூ.2,927,966.50
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

சுடர் 31 கதிர் 054 வள்ளுவர் ஆண்டு 2047 தை 05, செவ்வாய்க்கிழமை 19.01.2016

## தமிழக மீனவர் 4 பேர் விடுதலை

மேலும் 15 பேர் இன்று விடுதலையாவர்



மன்னார், ஜன. 19

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்க மறியலில் பக். 24

முச்சந்தி முரளி



30 வருசமா இதைத்தானே சொல்லுறியள்

# மீண்டுமொரு போர் ஏற்படாத வகையில் சமாதான அடித்தளம்

## அனைவரையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி மைத்திரிபால அழைப்பு



கொழும்பு, ஜனவரி 19

நாட்டின் தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தி, மீண்டும் நாட்டில் ஒருபோர்ஏற்படாதவகையில்அடித்தளத்தை அமைக்க, அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டு மக்களிடம் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பக். 25

## ஆளும் கட்சியினருடன் நாளை சந்திப்பு நடத்துக

வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுப்பினர்கள் கடித மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

ஆளும் கட்சியுடனான சந்திப்பை நாளை புதன்கிழமை நடத்துமாறு, வடக்கு மாகாண முதலமைச்சரிடம், அமைச்சர்கள் – ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டாகக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். இருப்பினும், இந்தக் கோரிக்கைக் கடிதத்தில், வடக்கு மாகாண முதலமைச் பக். 06

## யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் கோலாகலமான முறையில், யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் 8 அமர்வுகளாக இடம்பெறவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு வைபவத்தின் போது யாழ். பல்கலைக்கழக பக். 06

## ஈரானிடமிருந்து மீண்டும் எண்ணெய் இறக்குமதி

எரிபொருள் விலையை மேலும் குறைப்பதற்காக

கொழும்பு, ஜன. 19

ஈரான் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ள நிலையில், ஈரானிடமிருந்து மசகு எண்ணெயை மீளவும் இறக்குமதி செய்வது தொடர்பில் இலங்கை ஆராய்ந்து வருவதாகப் பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். பக். 25

# மாற்று இடங்கள் வேண்டாம் சொந்த நிலங்களே வேண்டும்

## முல்லைத்தீவு எல்லைக் கிராம மக்கள் போராட்டம்



முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் அரசால் அபகரிக்கப்படும் தமிழ் மக்களுடைய காணிகளுக்காக மாற்றுக் காணிகள் வேண்டாம் எனத் தெரிவித்தும், தங்களது சொந்தக் காணியைத் தமக்குத் தருமாறு கோரியும் நேற்று குறித்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பக். 24



## யாழ்.-கொழும்பு சொகுசு பஸ் வவுனியாவில் கோர விபத்து

ஒருவர் சாவு; 4 பேர் படுகாயம்

வவுனியா, ஜன. 19

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ் ஒன்று வவுனியாவில் கோர விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் பக். 25

## வலி.வடக்கு மக்களின் மனதில் கவலையை விதைத்தார் ரணில்

நல்லாட்சியில் அரசின் கரும்புள்ளி இது என்று மீள்குடியேற்ற, புனர்வாழ்வுச் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாக்குறுதியால் சந்தோசத்தில் திளைத்திருந்த வலி. வடக்கு மக்களின் மனதில் கவலையை விதைத்து விட்டுச் சென்றுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சியில் அரசின்கரும்புள்ளியாக இது அமைந்து பக். 24

**பரணகமவின்**

சிரிப்புக்குப் பின்னால் ஒளிந்திருந்தது என்ன? பக். 12

## உலக்கையால் அடித்து ஒருவர் கொலை; 3 குற்றவாளிகளுக்குச் சாவுத் தண்டனை

யாழ். மேல்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

குடும்பஸ்த்தரை உலக்கையால் அடித்துக் கொலை செய்துவிட்டு அவரது வாகனங்களைத் திருடிச் சென்ற குற்றவாளிகள் 3 பேருக்கு யாழ்.மேல்நீதிமன்று நேற்றுச் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. அவர்களில் ஒருவர் தப்பிச் சென்று வந்து தலைமறைவாகியுள்ளதனால், அவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் சர்வதேசப் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் நீதிமன்று தெரிவித்துள்ளது.

மிருசுவிலில் 2006 டிசம்பர் 15 ஆம் திகதி இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த முருகேசு சத்தியநாதன் என்பவர் உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்டு அவரது ஹைஏஸ் வாகனம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் முதலாம் எதிரியாகிய சூரியகுமார் அஜந்தனும், பக். 25

## புதிய அரசமைப்புக் குறித்து வடக்கில் பெப். 5 கருத்தறிவு

கொழும்பு, ஜன. 19

புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை அறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு, அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் வடக்கில் பக். 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நவம்பர் மாத நிதிச் செலவு குறித்த விவரங்கள் இல்லை

*வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில்*

யாழ்ப்பாணம், ஜன. 19
வடக்கு மாகாண சபைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் 214 லட்சம் ரூபா செலவு செய்யப்படவில்லை. அத்துடன் நிதி செலவீடு தொடர்பிலான தகவல்கள் வடக்கு மாகாண சபையின் இணையத்




தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ள போதும், நவம்பர் மாதத் தகவல்கள் அதில் இடம்பெறவில்லை.

வடக்கு மாகாண சபைக்கு கொழும்பு அரசால் கடந்த ஆண்டு, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையாக ஆயிரத்து 440 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. அதில் டிசெம்பர் 31ஆம் திகதி வரையில் ஆயிரத்து 418.59 மில்லியன் ரூபா நிதியே செலவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 21.41 மில்லியன் (214 லட்சம்) மீளவும் கொழும்பு அரசின் திறைசேரிக்குச் சென்றுள்ளது.

முதலமைச்சரின் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 269.15 மில்லியனில் 262.45 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 193 மில்லியன் ரூபாவில் 192.3 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 323 மில்லியன் ரூபாவில் 323 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது. மீன்பிடி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 277.3 மில்லியன் ரூபாவில் 277.19 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 377.5 மில்லியன் ரூபாவில் 363.65 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவரங்கள் வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்திலிருந்து ஒக்ரோபர் மாதம் வரையில் நிதிச் செலவீடு தொடர்பான விவரங்கள் ஒழுங்காக தரவேற்றம் செய்யப்பட்டு வந்தன. அதன் பின்னர் இந்த மாதமே டிசெம்பர் மாதத்துக்குரிய செலவீடு தொடர்பான விவரங்கள் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நவம்பர் மாதத்துக்குரிய விவரங்கள் இதுவரையில் தரவேற்றம் செய்யப்படவில்லை. (ற-5)

# யாழில் இஞ்சி பயிரிடல் செய்தோருக்கு ஏமாற்றம்

அச்சுவேலி,ஜன.19
யாழ்.மாவட்டத்தில் இஞ்சி பயிர்ச் செய்கையில் முதலீடு செய்தவர்கள் பெரும் ஏமாற்றத்துக்கும் பொருளாதார இழப்புக்கும் உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இஞ்சிப் பயிர் செய்கையின் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணப்பாட்டுடன் பலர் முதலீடு செய்தனர். ஒவ்வொருவரும் பல லட்சம் ரூபாவுவை செலவு செய்திருந்தனர். இஞ்சி அறுவடையின்போது கிலோ ஒன்று ஆயிரம் ரூபாக்கு குறையாத விலையில் விற்பனை செய்ய முடியும் என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. உத்தேச அறுவடை ஆயிரத்தால் பெருக்கப்பட்டு வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது இஞ்சியின் விலை கிலோ ஒன்று 300 ரூபாக்கு குறைவான விலையில் சில்லறை விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் யாழ். மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட இஞ்சிப் பயிர் உரிய முறையில் வளர்ச்சி அடையவோ உரிய விளைச்சலைக் கொடுக்கவோ இல்லை என்றும் இஞ்சிப் பயிர் வளர்ந்து வரும் போது இடையில் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி சேதமடைந்துள்ளது என்றும் இஞ்சிப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்த பலர் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்ததாவது–

இஞ்சிப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்பவர்களுக்கு விவசாயத் திணைக்களம் முன்கூட்டியே எச்சரிக்கை செய்திருந்தது. அவ்வாறு செய்ய விரும்பினால் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமிடத்து தற்பொழுது இஞ்சிப் பயிர்ச் செய்கைக்கு முதலீடு செய்த செலவில் 25 வீதமான செலவுடன் ஏற்பாடு செய்து தரப்படும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இதனைக் கருத்தில் கொள்ளாமல் பலர் பெருமளவில் இஞ்சிப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்து பொருளாதார இழப்புக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளாகி உள்ளனர் – என்றார். (ற-11)

## நிமோனியா காய்ச்சலாலேயே காரைநகர் வாசி உயிரிழப்பு

*பொலிஸார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த காரைநகர் வாசி நிமோனியாக் காய்ச்சலாலேயே உயிரிழந்தமை உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். அதையடுத்து அவரது உடல் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த கார்த்திகேசு தவராசா (வயது -47) என்பவர் வவுனியாவில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வந்த நிலையில், அவர் பணிபுரியும் முதலாளியிடம் சம்பளம் கேட்ட போது இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் தவராசா தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனால் அவர் வவுனியாவில் உள்ள வைத்தியசாலையில் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து 2 நாள்கள் சிகிச்சை பெற்றுள்ளார். அதன்பின்னர் அவர் காரைநகருக்குத் திரும்பியுள்ளார். பின்னர் காய்ச்சல் ஏற்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு கிரியை நடக்கவிருந்த நிலையில் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அவர் தாக்கப்பட்டதனால் உயிரிழந்திருக்கலாம் என்றும் அதற்கான சம்பவமாக வவுனியாவில் உள்ள வர்த்தக நிலைய முதலாளிக்கும் இடையில் நடந்த சம்பவம் பற்றியும் பொலிஸாருக்குக் கூறப்பட்டதால் அவரது உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தது.

நேற்று உடற்கூற்றப் பரிசோதனை மேற்கொண்டபோது அவர் நிமோனியாக் காய்ச்சலாலேயே உயிரிழந்துள்ளார் என்று தமக்குக் கூறப்பட்டது எனப் பொலிஸர் தெரிவித்தனர். (ற-4)

## நினைவுப் பேருரை

யாழ்.பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு சேர்.பொன் இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்வுகள் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் 'பௌத்த தாது கோபங்களின் புனருத்தாரணம், இலங்கையில் மத தேசியவாதமும் தொல்லியலும்' என்ற விடயதானம் தொடர்பில் நினைவுப் பேருரையை களனிப் பல்கலைக்கழக தொல்லியலுக்கான மேற்பட்டப்படிப்புகள் நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் ஜெகத் வீரசிங்க நிகழ்த்தவுள்ளார்.

அன்று மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 22 ஆம் திகதி பி.ப3 மணிக்கு சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரை 'வட இலங்கையில் போருக்குப் பின்னரான சூழமைவினுள் மனித நேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்' என்ற விடயதானம் தொடர்பில் இடம் பெறவுள்ளது.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக கல்வித்துறையைச் சேர்ந்த கலாநிதி ச.அனுஷ்யா நிகழ்த்தவுள்ளார். (ற-ரி2)

# சர்வதேச முதலீட்டைக் கவர கிழக்கின் முதலீட்டு அரங்கம்

சர்வதேச முதலீட்டாளர்களைக் கவரும் வகையிலான கிழக்கின் முதலீட்டு அரங்கம் - 2016 என்னும் மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த மாநாடு கிழக்கு மாகாண சபையால் இரண்டாவது தடவையாக நடத்தப்படுகின்றது.

இலங்கை முதலீட்டு சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒத்துழைப்புடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடனும் இந்த அரங்கம் நடைபெறவுள்ளது. சர்வதேச வர்த்தகம், அபிவிருத்தி மூலோபாய அமைச்சு மற்றும் கிறிஸ்தவ விவகார சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண சபை இந்த முதலீட்டு அரங்கை ஏற்பாடு செய்துள்ளது என்றும் இந்த முதலீட்டு அரங்கானது கொழும்பு கலதாரி ஹோட்டல் கிரான் போல் மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

முதலீட்டுக்கான சூழலையும் வேலை வாய்ப்பையும் உருவாக்குவதை மையமாகக் கொண்டு இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மையமாகக்கொண்ட ஒரு பெரிய நிகழ்வாகவும் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கான சர்வதேச முதலீட்டாளர்களை நேரடியாக ஈடுபடுத்தும் முயற்சியாகவும் இது அமைகின்றது. மத்திய கிழக்கு நாடுகள், கொரியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஐக்கிய அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகள் உட்பட 250 சர்வதேச முதலீட்டாளர்கள் உள்ளடங்கலாக சுமார் 500 முதலீட்டாளர்கள் இந்த அரங்கில் பங்கேற்பதற்கு உறுதி அளித்துள்ளனர் . கைத்தொழில் வர்த்தகத்துறையில் மேம்பாடு அடைந்த நாடுகளின் முதலீட்டாளர்களும் கலந்து கொள்வார்களெனவும் நம்பப்படுகிறது.

கொழும்பு, திருகோணமலையில் அமைக்கப்படும் தகவல் மையங்கள் முதலீட்டாளர்கள் தாம் எந்தத் துறையில் முதலீடு செய்யலாம் என்பது தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும். சுற்றுலாத்துறை, விவசாயத்துறை, வர்த்தகத்துறை, மீன் வளர்ப்பு, கால்நடை, மீன்பிடி போன்ற துறைகளில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்களுக்குசந்தர்ப்பங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்– என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மலிக் சமரவீர, பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஆகியோர் பங்கேற்றனர். (ற)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு மாகாணத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிப்பதற்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையை நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிப் புத்தகத்தைத் தொலைத்த பெண்ணின் கணக்கிலிருந்து 5 லட்சம் ரூபா பணம் திருட்டு

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

வங்கிப்புத்தகத்துடன் இணைத்து அடையாள அட்டையைத் தொலைத்த யாழ்ப்பாணப் பெண் ஒருவருடைய வங்கிக் கணக்கில் இருந்து 5 லட்சம் ரூபா பணம் போலியாகத் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டையை வைத்து அந்த வங்கியின் கொழும்புக் கிளையில் திருட்டுத்தனமாகப் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றுள்ளார். இதன்போது அவர் தனது கைப்பையில் வங்கிப்புத்தகத்துடன் இணைத்து அடையாள அட்டையையும் வைத்துள்ளார். கொழும்பு சென்றவர் அங்கு தவறுதலாக வங்கிப் புத்தகத்தை தொலைத்ததை அறியாது இருந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பணி நிமித்தம் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர், பணத்தேவையின் பொருட்டு வங்கிப்புத்தகத்தைத் தேடிப் பார்த்துள்ளார். இதன்போதே அது தொலைந்தமை தெரியவந்துள்ளது.

வங்கிப்புத்தகம் தொலைந்தமை தொடர்பில் தகவல் தெரிவிக்கச் சென்றபோதே அவருக்கு அதிர்ச்சி காத்திருந்துள்ளது.

அவரது வங்கிக்கணக்கில் இருந்து 5லட்சம் ரூபா பணம் மீள எடுத்துக்கொள்ளப்பட்டமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் வங்கி அதிகாரிகள் விசாரணை செய்தபோது, கொழும்பு 1இல் உள்ள கிளையில் இருந்து பணம் பெற்றுக்கொண்டமை தெரியவந்துள்ளது.

மேலும் தொலைந்த அடையாள அட்டையை வைத்துப் போலியான அடையாள அட்டை தயாரிக்கப்பட்டே இந்தப் பணம் பெற்றுக்கொண்டமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-107)

# பெண் எம்.பிக்கள் மீது பாலியல் துன்புறுத்தல்

## அதிகாரிகளிடம் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 19

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வயது முதிர்ந்த ஆண் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல் சிங்கள ஊடகத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை தொடர்ந்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒழுக்கத்துடன் செயற்படுமாறு அரசின் உயர் மட்டத்தினரும் அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்தத் துன்புறுத்தல்கள் தொடர்பில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டில் மிகவும் வயது முதிர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இளம் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கைகளை அடிக்கடி பிடித்து வாழ்த்துச் சொல்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காணும் எல்லா சந்தர்ப்பங்களிலும் வயது முதிர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கைகளைப் பிடித்து வாழ்த்துச் சொல்லி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உடல் உறுப்புக்கள் பற்றி ஆபாசமாகக் கேலி கிண்டல் செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

75 வயதான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்ற நூலகத்திற்கு அருகாமையில் வைத்துப் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஆபாசமாகக் கிண்டல் செய்துள்ளதாகவும் அந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஆத்திரமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் 30ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, அங்கயன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ந-9)

# போதைப் பொருளுடன் கைதான 2 இளைஞர்களுக்கு கடூழியச்சிறை

## *இருவருக்கு அபராதம்*

போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களுக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தினால் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் என்பன விதிக்கப்பட்டன.

யாழ். போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் போதைப் பொருள்களை நுகர்ந்த மற்றும் போதைப் பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொம்மைவெளி, குருநகர் மற்றும் ஏழாலையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கடந்த வருடம் செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாத காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்கள் பகுப்பாய்வுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. பகுப்பாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் பொலிஸார் நேற்றுக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தனர்.

எதிரிகள் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்குக் குற்றவாளிகள் எனத் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து 2 கிராம் 860 மில்லிக்கிராம் கஞ்சாவை வைத்திருந்த பொம்மைவெளியைச் சேர்ந்த இளைஞருக்கு, ஹெரோயின் கலந்த சிகரெட்டைப் புகைத்த குருநகரைச் சேர்ந்த இளைஞருக்கு நான்கு மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் கஞ்சா சுருட்டை உடைமையில் வைத்திருந்த ஏழாலை மற்றும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த இளைஞர் களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும் நீதிவான் சி.சதீஸ்தரனால் விதிக்கப்பட்டது. (த-103)

**NPK Computer Repairing**

வீடுகளுக்கு வந்து விரைவாக
திருத்திக் கொடுக்கப்படும்.
இரண்டு வருட உத்தரவாதத்துடன்
பொருள்களும் வழங்கப்படும்.
தொடர்பு: 0777 064151

**சமையல்காரர் தேவை**

ஸ்ரான்லி வீதியில் உள்ள அசைவ உணவகம் ஒன்றிற்கு நல்ல அனுபவமுள்ள சமையல்காரர் தேவைப்படுகின்றார். தகைமை உள்ளவர் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 410 3245

**விற்பனைக்கு**
தொடர்பு: 077 711 5876

மிக அண்மையில் கொள்வனவு
செய்யப்பட்ட மிக குறைந்த
பாவனைக்கு உட்பட்ட Scanner
Canon Lide- 110
விற்பனைக்கு உண்டு.

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை**

* வயரிங், பிளமிங்
* வயரிங், பிளமிங் உதவியாளர்
* வெல்டிங்
* மேசன்மார்

077 344 3945
(67773)
(11,17,18)

**வீடு வாடகைக்கு உண்டு** 077 278 7854

சண்டிலிப்பாய், கல்வளை வீதி,
இலக்கம் 58/4, என்னும் முகவரியில் 3 அறைகள் கொண்ட
வீடு வாடகைக்கு உண்டு.
(67777)
(11,17,18)

**SUPER BALL** சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 450
சீட்டிழுப்பு திகதி 2016.01.18

வெற்றி இலக்கங்கள்
02 19 44 71 O

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 46,048,840/=

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1229
சீட்டிழுப்பு திகதி 2016.01.18

வெற்றி இலக்கங்கள்
01 26 27 34 X

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,601,560/=

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 2727 திகதி 18.01.2016

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
07 15 19 56 W
போனஸ் இல. 40
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 22,678,000/-

2016.01.20 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 23.01.2016 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

23.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகும் தரம் 3, 4, 5 மாணவர்களுக்கு!**

**கணித விவேக வழிகாட்டி**

ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான பாடங்களுடன்
இலகுவான வசனநடையில் தொகுக்கப்பட்ட
புலமைப்பரீட்சை வினாக்களையொத்த பயிற்சி
வினாக்கள், விடைகள் அடங்கியது.

தரம் 3 விலை : 300/-
தரம் 4 விலை : 350/-
தரம் 5 விலை : 450/-

கணித விவேக வழிகாட்டி
ஆக்கம் I.L.M. ஸபான்

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு: யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/1, ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ. பே : 077 6258778

**தரம் - 5 பிரபல ஆசிரியர் அம்பிகைபாகன் பரீட்சைத் திருத்தற்சேவை**



இலங்கையின் மூத்த முன்னனி ஆசிரியர் அம்பிகைபாகனின் பரீட்சைத் திருத்தற் சேவை தற்போது நாடு பூராக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதன்படி மாதாந்தம் ஒளிஅரசியில் வெளிவரும் மாதிரி வினாத்தாளை உங்கள் பிள்ளைகளை நேரம் கணித்து சுயமாக செய்ய வைத்து அதனை கொழும்பு முகவரிக்கு அனுப்பினால் அம்பிகைபாகனின் தலைமையில் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு புள்ளியிடல் திட்டத்துடன் மீண்டும் உரியவர்களின் முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும். இச் சேவை பிள்ளைகளின் திறமையை பெற்றோர் சுயமாக மதிப்பீடு செய்வதற்கு நடுநிலையாக உதவும் ஒரு செயற்திட்டமாகும்.

(மேலதிக தகவல்களுக்கு - 0776569617, 0714273035)
வினாத்தாளும் மேலதிக விபரங்களும் 2016 ஜனவரி மாத ஒளிஅரசியில் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள – முஸ்லிம் கலவரத்தை உருவாக்க சதித்திட்டம் வகுப்பு

## அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.19

தமது நாட்டில் சிங்கள, முஸ்லிம் கலவரத்தை உருவாக்க மேற்கொள்ளும் சதி முயற்சிகளுக்கு இந்த அரசு ஒருபோதும் இடமளிக்கக்கூடாதென்றும், இவ்வாறான பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன் நேற்று முன்தினம் குருநாகலில் இடம்பெற்ற பேராளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் கூறியதாவது:-

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்காக மர்ஹூம் அஷ்ரபினால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமூகத்திற்கு மாற்றமாக செயற்பட்ட ஒரே ஒரு காரணத்துக்காகவே, அகில இலங்கை மக்கள் காங்கிரஸை நாம் உருவாக்கினோம். மர்ஹூம் அஷ்ரபின் கண்ணீராலும் வியர்வையினாலும் உருவாக்கப்பட்ட அந்த அமைப்பு அவரின் மறைவின் பின்னர் பிழையான பாதையிலே பயணிக்கத் தொடங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தை ஜனநாயக ரீதியாக ஒன்றுபடுத்தி ஆயுதப் போராட்டத்துக்கோ, பிரிவினைவாதத்துக்கோ அந்தச் சமூகத்தின் இளைஞர்கள் பிரவேசித்து விடக்கூடாது என்ற நோக்கத்துக்காக மர்ஹூம் அஷ்ரப் அப்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தார்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் என்றுமே ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் கொண்டவர்கள் அல்லர். சிங்கள இளைஞர்கள் ஆயுதம் தூக்கியபோதும், தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்காக ஆயுதம் தூக்கியபோதும் அவர்கள் நடுநிலையாக நின்று சிந்தித்துச் செயற்பட்டவர்கள்.

எமது மூதாதையர்கள் போல நாமும் நாட்டுப்பற்றுடன் வாழ்ந்தவர்கள். டி.பி.ஜாயா தொடக்கம் அதன் பின் வழி வந்த அத்தனை முஸ்லிம் தலைவர்களும், அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தால் என்ன, சுதந்திரக் கட்சியில் இருந்தால் என்ன, நாட்டுப்பற்றுடன் வாழ்ந்து தமது சமூகத்தையும் வழிநடத்தியவர்கள்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் இந்த நாட்டை ஆக்கிரமித்த போது, சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து எமது முஸ்லிம் தளபதிகள் இந்த நாட்டைப் பாதுகாக்கப் போராடியவர்கள். அவ்வாறான ஒரு சமூகத்தை இன்று கேவலப்படுத்த சில பிற்போக்குவாதிகள் முனைந்து வருகின்றனர்.

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும், தலிபான்களும் ஊடுருவியுள்ளதாகவும், அதற்கு இலங்கை முஸ்லிம்கள் துணை போகின்றனர் என்றும் வீண் கட்டுக் கதைகளைப் பரப்பி, இங்கு கலவரங்களை உருவாக்கத் திட்டமிடுகின்றனர். நாங்கள் தமிழ்த் தீவிரவாதத்துக்கோ, பௌத்த தீவிரவாதத்துக்கோ, இஸ்லாமிய தீவிரவாதத்துக்கோ ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

அதனை கடந்த காலங்களில் செயலில் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இஸ்லாம் எமக்குக் காட்டிய வழியில் நாம் வாழ்க்கை நடத்துபவர்கள். நாம் எவருக்கும் பயந்தவர்களும் அல்லர்.

இறைவனைத்தவிர, எவருக்கும் தலை வணங்குபவர்களும் அல்லர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பொறுத்தவரையில், அதன் தலைமை எங்கு பிழை நடக்கின்றதோ அதனைத் தட்டிக் கேட்கும். கடந்த காலங்களில் ஆட்சியாளர்களையும், விடுதலைப் புலிகளையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருப்திபடுத்திய காரணத்தினாலேயே நமது சமூகம் இவ்வாறான கீழ் நிலைக்குச் சென்றது.

ஆட்சியின் பங்காளியாக இரண்டு ஜனாதிபதிகளை உருவாக்கிய சக்தியைப் பெற்ற நமது முஸ்லிம் சமூகம், பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் போக்கின் காரணமாக மலினப்படத்தொடங்கியது. ரணில்–பிரபா ஒப்பந்தத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை ஒரு குழுவாகவும், வடபுலத்திலிருந்து அடித்து விரட்டப்பட்ட முஸ்லிம்களை இடம்பெயர்ந்தவர்கள் எனவும் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டமைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தலையசைத்தது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பொறுத்தவரையில் இந்த நாட்டில் பயங்கரவாதம் தலைத்தூக்கியபோது அதனை ஒழிப்பதற்கு அப்போதைய அரசுடன் ஒத்துழைத்தது. அதன்மூலம் வடக்கிலே வாழ்ந்த முஸ்லிம் சமூகம் மீண்டும் அங்கு திரும்புவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் இந்த நாட்டில் கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜகங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் சமூகத்தின் நன்மைக்காக உயிரையும் துச்சமெனக் கருதாது, நாம் அந்த அரசாங்கத்திலிருந்து வெளியேறி மைத்திரிக்கு ஆதரவளித்தோம்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைபோன்று நாம் தொடை நடுங்கிகளாக மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள் எனக் கூறிவிட்டு, முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டதை அறிந்து மைத்திரிக்கு வாக்களிப்பதாக நாம் அறிக்கை விடவில்லை. எமது கட்சியைப் பொறுத்தவரையில் தேசியப்பட்டியலில் நாம் தீர்க்கமான முடிவை மேற்கொண்டுள்ளோம். செயலாளராக இருந்த வை.எல்.எஸ்.ஹமீட் கட்சியுடன் முரண்பட்டு, கட்சி நடவடிக்கைகளை சீர்குலைத்ததனாலேயே நாம் இந்த செயலாளர் மாநாட்டைக் கூட்டி புதிய யாப்புக்கு அங்கீகாரம் வழங்குமாறு கேட்கின்றோம் என்று அமைச்சர் ரிசாத் தெரிவித்தார். (த–சி)

# பாலியல் தொழிற்சாலையாக இலங்கை மாறிவிடும் அபாயம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.19

அரசின் புதிய சட்டவரைவினால், ஆசியாவின் பாலியல் தொழில் நிலையமாக இலங்கை மாறிவிடுமென்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

குறித்த சட்டவரைவு கொண்டு வரப்பட்டால் புத்த பகவான் கூட சிறையில் வாட நேரிடும்.

ஏனெனில், சட்ட வரைவுக்குப் பிக்குமாரின் ஒழுக்கம் என்ற ஆடையை அணிவித்துப் பிக்குகள் அரசியலுக்கு வருவதை தடுக்கும் சூட்சுமமான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புத்த பகவான் கூட அந்த காலத்தில் அரசியல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளார். அரசர்களுக்கு ஆலோசனை வழங்கி, நாடுகளுக்கு இடையிலான மோதல்களில் தலையிட்டு அரசியல் செய்தார்.

தாய்லாந்தில் 95 வீதமான பௌத்தர்கள் வாழ்கின்றனர். எனினும் அது ஆசியாவின் பாலியல் தொழில் நிலையமாக மாறியுள்ளது.

இவ்வாறான சட்டவரைவைக் கொண்டு வருவதன் ஊடாக, இலங்கையும் தாய்லாந்தைப் போல ஆசியாவின் பாலியல் தொழில் நிலையமாகவோ அல்லது மதுபான சாலையாகவோ மாறிவிடும்.

தேரவாத பிக்குகளுக்காக கொண்டு வரப்படும் இந்தச் சட்டவரைவு ஊடாக தேரவாத பிக்குகள் மகாயான பிக்குகளாக மாற ஊக்கப்படுவதை காண முடிகிறது.

பிக்கு சமூகம் என்பது பெரிய அமைப்பு, இதனால், பிக்கு ஒருவர் ஒழுக்கம் தவறி நடந்து கொண்டால், அவரைச் சங்க சாசனத்தில் இருந்து விலக்கும் அதிகாரம் பிக்குமாருக்கே அன்றி வேறு நபர்களுக்கு இல்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் குறிப்பிட்டுள்ளார். (த்)

# வவுனியா இந்துவின் வைர விழா இன்று

யாழ்ப்பாணம், ஜன.19

வவுனியா இந்துக் கல்லூரியின் வைரவிழா இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என கல்லூரிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

முற்பகல் 9. 30 மணிக்கு நடைபெறும் இந்த விழாவுக்குக் கல்லூரி அதிபர் திருமதி ஜீ.நடராஜா தலைமை வகிக்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக இராஜாங்கக் கல்வி அமைச்சர் வே. இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான அ.செல்வம் அடைக்கலநாதனும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸ்தான், இ.சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதனும், எம்.பி. நடராஜ்ஜும், இ.இந்திர ராஜாவும், ம.தியாகராஜாவும், விசேட விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும், வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் செ. அன்ரன் சோமராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த்)

# மருத்துவ முகாம் நாளை புற்றளையில்

யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களமும் யாழ். வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் புற்றளை சனசமூக நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மருத்துவ முகாமில் புலோலி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சமுகமளித்து தமது நோய் தொடர்பான பரிசோதனைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
காணி கட்டடம் கிணற்றடி விற்பனை
அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான யாழ்-காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தின் எதிர் பக்கமாகவும் சுன்னாகம் வர்த்தக வங்கிக்கு அருகில் அமைந்துள்ள " பணிக்கலாவத்தையும் வாரிகலட்டியும் கிணற்றடியும்" என குறிப்பிடுகின்ற ஆதன இலக்கம் 3507 உடைய 05 பரப்பு 12.5 குளி கொண்ட காணி கட்டடம் கிணற்றடி விற்பனைக்கு உண்டு.

விற்பனை தொடர்பில் மீளளிக்க முடியாதவகையில் ரூபா 1000/= னையும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5000/= ஐயும் சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப்பத்திரத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலமாக பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். என்னும் விலாசத்திற்கு 03.02.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னரான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் பின்னர் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

வேண்டிய விவரங்களை விண்ணப்பப்பத்திரத்துடன் பெற்றுக் கொள்ள முடியும்.

18.01.2016 பொது முகாமையாளர்.

வேலையாள்கள் தேவை
077 760 7068
கட்டட பெயின்ரிங் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

வீடு விற்பனைக்கு
தொடர்பு: 077 322 0722
மானிப்பாய் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூன்று அறைகள், இரண்டு குளியல் அறைகள் உடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் [illegible] பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

# கல்விப் பணிப்பாளர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள்

## அதிகாரிகள் விசாரணைக்குப் பின்னடிப்பு என்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 19

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுக்கள் உள்ள போதும் அவற்றை அதிகாரிகள் விசாரணை செய்யாது இழுத்தடித்து வருகின்றனர் என்று குற்றஞ் சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், விரைவில் விசாரணையை முன்னெடுக்குமாறும் கோரியுள்ளது.

துணுக்காய் வயலக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுக்கள் கடந்த வருடம் சுமத்தப்பட்டுள்ளன. சில வாரங்களுக்கு முன்னரும் ஆசிரியர் இடமாற்றம் மற்றும் கொடுப்பனவு தொடர்பில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன் தவறிழைத்திருந்தார் என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இதுவரை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மாலினி வெனிற்றன் மீதான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்து விசாரணை செய்வதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கூறுகிறார். ஆனால் அவ்வாறான எந்தவொரு விசாரணையும் இதுவரை இடம்பெறவில்லை. எனவே விரைவில் அந்த விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்றையதினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்
31ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் B.Sc(Spl)
பட்டத்தைப் பெறும் வரணியைச் சேர்ந்த

**செல்வி**
**பிரேமினி வேலுப்பிள்ளை**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்களைப்
பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

தவசீலன் (கண்ணன்) குடும்பம் (நோர்வே)
பரணீதரன் குடும்பம் - வரணி
இரவீந்திரா (குரு)குடும்பம் (ஆஸ்திரேலியா).
சித்தப்பா குடும்பம் (கைதடி)
எம்.எஸ்.மாமா குடும்பம் (வரணி)
அழகு மாமா குடும்பம் (லண்டன்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**தொழில் நிர்வாகமாணி**
பட்டத்தினைப் பெறும் எமது
செல்வப்புதல்வி

**அருமைத்துரை**
**சங்கீதா**
B.B.A (MKG Spl)

அவர்களை உளமார பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா (அஜசாந் குடும்பம்)
அக்கா (ஜெனற்றின் குடும்பம்)
வண்ணாங்கேணி, பளை.

(64199) (14,18)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



19.01.2016 இன்று யாழ் பல்கலைக்கழகத்தில்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில் BBA பட்டத்தைப் பெறும்

**அருமைத்துரை சங்கீதா**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
நிமால் - தயா குடும்பம் (பிரான்ஸ்)
ஜெனோ - தர்ஷா குடும்பம் (பிரான்ஸ்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**முது கல்வியியல்மாணி**
பட்டத்தினைப் பெறும் எமது
கல்விநிறுவனத்தின் தமிழ் ஆசான்

**திரு கணபதிப்பிள்ளை**
**சந்திரலிங்கம்**
M.Ed (Hons)

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
ஆட்ஸ் அக்கடமி, புத்தூர்.

(64195) (14,16)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



வட்டு வடக்கு,
சித்தன்கேணியைச் சேர்ந்த
**திரு. திருமதி**
**பரமேஸ்வரன் மாலா**
தம்பதிகளின் செல்வப் புதல்வி

**Dr.ஹேமச்சந்திரா**
**பரமேஸ்வரன்**
**BSMS**

அவர்கள் யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின் 31ஆவது
பட்டமளிப்பு விழாவில் இன்று
19.01.2016 சித்தவைத்திய சத்திரசிகிச்சை இளமாணி
பட்டத்தினைப் பெற்றுக்கொள்கின்றார். அவரை கற்பகன்
அருள்பெற்று மருத்துவத்துறையில் சாதனைகள் புரிந்திட
வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

(64196) (11,17,18)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

**திருமதி J.கிறிஸ்ரபெல்**
B.Com, P.G.D.E (Merit)
M.Ed(Hons), SLPS.2-II
(அதிபர் - யாழ்.புனித சாள்ஸ் ம.வி)



19.01.2016
செவ்வாய்க்கிழமை
யாழ்.பல்கலைக்
கழகத்தின் 31 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
எமது பாடசாலை அதிபர்
**திருமதி J.கிறிஸ்ரபெல்**
அவர்கள் கல்வி
**முதுமாணி**
(M.Ed)பட்டத்தைப்
பெறுவதையிட்டுப் பெரு
மகிழ்ச்சியடைகிறோம்.
இவர் மேலும் பல
பட்டங்களைப் பெற
பாடசாலைச் சமூகம்
சார்பாக
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்

வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.பத்மநாதன் பட்டதாரிகளுக்கான பட்டங்களை வழங்கி கௌரவிப்பார்.

ஆயிரத்து 521 பட்டதாரிகள் நேரடியாகச் சமுகம் கொடுத்து தமது பட்டங்களைப் பெறவுள்ளதுடன் 114 டிப்ளோமாப் பட்டம் பெறும் மாணவர்களது பட்டங்களும், வெளிவாரியாகப் பட்டம் பெறும் 247 மாணவர்களது பட்டங்களும் அவர்கள் சமுகமளிக்காத நிலையில் பட்டமளிப்பு விழாவில் வேந்தரால் உறுதி செய்யப்பட்டு பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

இன்று நான்கு அமர்வுகளாக இடம்பெறவுள்ள பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், முதலாவது அமர்வின்போது 170 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர். முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் 193 மாணவர்களும் பிற்பகல் 1.45 மணிக்கு மூன்றாவது அமர்வின்போது 196 மாணவர்களும், மாலை 3.30 மணிக்கு நான்காவது அமர்வில் 201 மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர். (த-ரி2)

## ஆளும்

சரைக் கடந்த சனிக்கிழமை தனித்து இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடிய மூன்று உறுப்பினர்களும், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஓர் உறுப்பினரும் கையெழுத்திடவில்லை.

அதிகாரப் பகிர்வு யோசனைகள் விடயத்தில் வடக்கு மாகாண சபையின் பங்குபற்றுதல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுதல், வினைத்திறனான மாகாணசபை ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பிலும் அவசரமாகப் பேச வேண்டியிருப்பதால், இந்தச் சந்திப்பை ஒழுங்கு செய்யுமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் - அமைச்சர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில், நேரம் போதாமை காரணமாக முதலமைச்சர் பதிலளிக்கவில்லை. 17 ஆம் திகதிக் கூட்டத்தில் பதில் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூட்டம் இடம்பெறுவதற்கு முதல் நாள் - கடந்த சனிக்கிழமை - ஆளும் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் முதலமைச்சரைத் தனித்து இரகசியமாகச் சந்தித்துப் பேசியிருந்தனர். இதனையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த கலந்துரையாடல் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், யாழ்.பொது நூலகத்தில் நேற்றுக் காலை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கு அதிகாரப் பகிர்வு தொடர்பிலான செயலமர்வு இடம்பெற்றது. இந்தச் செயலமர்வின் முடிவில் ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கான சந்திப்பு ஒன்று திடீரென ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளமாட்டோம் என்று தெரிவித்து இரண்டு உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். குறித்த உறுப்பினர்கள், முதலமைச்சரைக் கடந்த சனிக்கிழமை தனித்து சந்தித்துப் பேசியிருந்தவர்கள். மேலும், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுக்கவில்லை. ஏனைய உறுப்பினர்கள், அமைச்சர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்துள்ளனர்.

இதன்போது நாளை புதன்கிழமை ஆளும் கட்சியுடனான சந்திப்பை நடத்தக் கோரும் கடிதம் வரையப்பட்டு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-5-101)



## கண்ணீர் அஞ்சலி



வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சியில் ஆரம்பக்கல்வி
சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக்
கடமையாற்றும்
**திரு சுந்தரம் சிவபாலன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கனகமணி சுந்தரம்**
15.01.2016 அன்று காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

(63626),
(14,15)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 02 . 1944

மறைவு 19 . 01 . 2008

**அமரர் இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்**

பாசத்தை தோள் மீது சுமந்த
அன்பு உள்ளம் கொண்ட அப்பாவே!
எட்டு வருடங்கள் ஓடி மறைந்தாலும்
தவிக்கின்றன நம் உள்ளம் உம் பாசத்திற்காக!!!
இன்ப வெள்ளத்தில் நாம் நீந்தினோமே நீங்கள்
இருக்கையில். இன்று துன்பக் கடலில் தத்தளிக்கின்றோம். உம் பிரிவால்
ஓடமாய் இருந்து நம்மை கரை சேர்த்தீர்
இன்று அந்த கரையே உம்மை தேடுகிறது
மறுபடியும் ஓடமாய் வாரும்.
நம்மை கரை சேர்க்க இந்த பாரினிலே.

மேரி இல்லம்,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி

றொபின்சன்
(மகன்)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 01 . 03 . 1964

உதிர்வு 06 . 12 . 2015

கடந்த 06.12.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்
தலைவர்
அமரர்
**சின்னக்குட்டி உதயராசா(சின்னையா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.01.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரம் வீரகத்தி சண்முகம்**

ஆறாது எம் துயரம்
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
மாறாது எம் மனதில்
மதிப்பான உமது உருவம்
நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் இல்லையப்பா
பேறாகப் பெற்றவனே
பிரிந்திருக்க மாட்டோம்
யாம் நினைத்திருப்போம் எந்நாளும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.**

மலர்வு 07.02.1934

உதிர்வு 09.02.2014

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விசுவாசம் கார்த்திகேசு நடராசா



நெடுந்தீவு கிழக்கு, 13ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவாசம் கார்த்திகேசு நடராசா 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல ஆயுர்வேத வைத்தியர் கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வயானை தம்பதியரின் மருமகனும், வள்ளியம்மையின் கணவரும், கம்ஷவதனி (ஆசிரியை - யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), குமுதினி, விந்தன் கனகரத்தினம் (வடமாகாணசபை உறுப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA),றஞ்சினி (பரிசாரகர், ஆதாரவைத்தியசாலை- ஊர்காவற்றுறை),பத்மினி, யோகமலர் (மறைந்த மாவீரர்), வரதராசன், சாந்தினி (மறைந்த மாவீரர்), டெனிஸ்ராஜன் (முன்னாள் உறுப்பினர், கரைச்சிப் பிரதேசசபை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (TNA), சறோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிறிகணேசராஜா, பெஞ்சமின் யோகராஜா மற்றும் உஷாந்தினி (உஷா), நாகமூர்த்தி, தர்மராசா, ஆனந்தி (உபதபாலதிபர் - நெடுந்தீவு),யசிந்தா, ஜெயபாலன் (பணியாளர், யாழ்.தினக்குரல் பத்திரிகை) ஆகியோரின் மாமனாரும், நிசாந்தன், நிதர்சன், நிதர்சினி, சஞ்சிகா, ஜீவராஜ், சத்தியராஜன், உஷாந்தினி, நிலோஜினி, ஏஞ்ஜலின் விதுஷா, ஏஞ்ஜலின் லவணிக்கா,ஏஞ்ஜலின் வெரோணிக்கா, மார்க் அன்ரனி, ஜெயராஜ், விதுராஜ், ரமேஷ்ராஜ், ரஜீப்ராஜ், லிவினியா, சரண்ராஜ், பரன்ராஜ், சரணியா, ஆன் டிலஷ்சினி, ஆன் டில்ஷா ஆகியோரின் பேரனும், அபிஷா, தருண் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான திருமதி மேரிதிரேசா அமிர்தம்,திருமதி கனகம்மா, திருமதி சிவகாமிப்பிள்ளை, திருமதி லக்சுமி, திருமதி பொன்னம்மா, நாகலிங்கம், அமரசிங்கம், கிருஷ்ணபிள்ளை, பூவிலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.01.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு கட்றான் சல்லி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K.N விந்தன் கனகரத்தினம்
(மகன்- வடமாகாணசபை உறுப்பினர்- யாழ்.தீவக அமைப்பாளர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA)

13ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு கிழக்கு.

(சி28717)(11,16)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலை மன்னார் பழைய பாலத்தடி பிரதான வீதி பல ஆண்டுகளாக செப்பனிடாத நிலையில் உள்ளதால் கடற்றொழிலுக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அதையடுத்து குறித்த வீதியை பொதுமக்களும், கடற்படையினரும் இணைந்து நேற்றுமுன்தினம் செப்பனிட்டனர். (ற-56)

# இளவயதுக் கர்ப்பம் மன்னாரில் குறைகிறது

## பிராந்திய சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு

மன்னார், ஜன.19

போரின் பின்னரான காலங்களுடன் ஒப்பிடும் போது 2015ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் இள வயதுக் கர்ப்பம் குறைவடைந்துள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போரின் பின்னர் மன்னார் மாவட்டத்தில் இளவயதுக் கர்ப்பம் அதிகரித்திருந்தது. தற்போது அதனுடைய எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அடுத்த ஆண்டுகளில் குறித்த இள வயதுக் கர்ப்பம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் உட்பட்ட பிரதேசங்களில் 2014ஆம் ஆண்டு109 இளவயதுக்கர்ப்பிணிகள் இனம் காணப்பட்டனர். எனினும் 2015ஆம் ஆண்டு குறித்த 5 சுகாதார வைத்திய அதிகாரிகளுக்குட்பட்ட பிரதேசங்களிலும் 97 இளவயதுக் கர்ப்பிணிகளே இனம் காணப்பட்டுள்ளனர்.

> அடுத்த ஆண்டுகளில் இளவயது கர்ப்பம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று தெரிவிக் கப்பட்டது.

மன்னார் மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதி போரால் பாதிக்கப்பட்டுள்ளதால் குறித்த பிரதேசத்தில் ஏற்பட்ட வறுமை மற்றும் ஏனைய காரணிகளால் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்திருந்தன. அதனாலேயே இளவயதுக்கர்ப்பம் அதிகரித்திருந்தது.

இதனை இனிவரும் காலங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டுகளில் இளவயதுக் கர்ப்பம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

## அரசமைப்பு வரைவுக்காக நிபுணர்கள் குழு நியமனம்

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜனவரி.18

கல்விமான்கள், சமூகசிந்தனையாளர்கள் என பதினெட்டு உறுப்பினர்களை உள்வாங்கி அரசமைப்பு வரைவுக்காக நிபுணர் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சமூக ஆய்வாளர் பி. முத்துலிங்கம், பேராசிரியர் எம். சின்னதம்பி, பேராசிரியர் சந்திரசேகரன், பேராசிரியர் டி. தனராஜ், பேராசிரியர் மூக்கையா, கலாநிதி எஸ். சந்திரபோஸ், சட்டத்தரணி கணபதிபிள்ளை, விரிவுரையாளர் எஸ். விஜயசந்திரன், விரிவுரையாளர் கௌரி பழனியப்பன், சிரேஷ்ட அரச பணியாளர் எம். வாமதேவன், ஆய்வாளர் கௌதம் பாலசந்திரன், வணபிதா பொன்கலன், விரிவுரையாளர் உமாதேவி துரைராஜ், தொழில் அதிபர் சந்திரா சாப்டர், சமூக ஆய்வாளர் ரமேஷ் நந்தகுமார், முன்னாள் பிரதியமைச்சர் புத்திரசிகாமணி, அன்டன் லோறன்ஸ், சண். பிரபாகரன் ஆகியோர் இந்த புதிய அரசியலமைப்பு வரைபுக்கான நிபுணர் குழுவினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் தவிசாளராக பி. முத்துலிங்கம்,செயலாளராக அன்டன் லோரன்ஸ், அழைப்பாளராக சண் பிரபாகரன் ஆகியோர் பணியாற்றவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிபுணர் குழு தயாரித்துத் தரும் யோசனைகள் அடங்கிய அறிக்கை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயற்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான அமைச்சரவை உப குழுவுக்கும், நாடளுமன்றஅரசியலமைப்புப் பேரவைக்கும் சமர்ப்பிக்கப்படும்.

அதேபோன்று புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயன்முறையின் போது இந்த யோசனைகளைத் தயாரிக் கப்படும் உத்தேச புதிய அரசியலமைப்புக்குள் உள்வாங்கி கொள்வதற்கான பிரயத்தனங்களை தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கவுள்ளது.

நமது நாட்டில் தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ள அறிவுசார் கல்விமான்களும், சமூக சிந்தனையாளர்களும், உள்வாங்கப்பட்டுள்ளமையானது மலையக தமிழ் மக்களை முக்கியத்து வப்படுத்துவதுடன், வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்து ஏனையஏழுமாகாணங் களி லும் வாழ்ந்து வருகின்ற 16 தமிழ் மக்கள் சார்ந்து அதிகாரப் பகிர்வு உட்பட்ட அரசியல், சமூக, கலாசார அபிலாசைகளைஉள்ளடக்கிய தான வரைபை வலுவானதாக உருவாக்கும் பணி இந்த நிபுணர் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர்ந்து ஏற்கனவே உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில்உள்வரும்வட்டாரங்களின் எல்லை மீள்நிர்ணயம் தொடர்பில் நாம் அமைத்துள்ளகுழுநுவரெலியா, கொழும்பு, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், மாத்தளை, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று தமது பணிகளை முடிவுக்குகொண்டுவந்துள்ளதுடன் தனது அறிக்கையையும் தயாரித்துள்ளது. இந்த அறிக்கை உள்ளூராட்சி வட்டார எல்லை மீள்நிர்ணய குழுவிடம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாம் இணைந்து ஏற்படுத்தியுள்ள புதிய அரசு மூலம் நாட்டில் ஏற்பட்டு வருகின்ற எந்த ஒரு அரசியல் மாற்றத்திலும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே மலையகம் உட்பட்ட ஏழு மாகாணங்களிலும் வாழும் 16 லட்சம் தமிழ் மக்கள் புறந்தள்ளப்படுவதையோ பாதிக்கப்படுவதையோ நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (ற-ஐ-ரி2)

## பிரதிப் பிரதம செயலர் பதவிக்கு விரைவில் புதியவர் நியமனம்

மானிப்பாய், ஜன.19

வடமாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலர் பதவிக்கு விரைவில் புதியவர் ஒருவர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

வடமாகாணத்தில் சிரேஷ்ட நிலையில் உள்ள இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்த ஒருவரே நியமனம் செய்யப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

பிரதிப் பிரதம செயலாளராகக் கடமையாற்றி, ஓய்வுபெற்றுச்செல்லும்செல்வி எஸ்.துரைராஜா வினது இடத்துக்கே புதியவர் நியமனம் செய்யப்படவுள்ளார்.இதேவேளை வடமாகாணத்தில் முக் கிய சில சிரேஷ்ட நிலை பதவிகளுக்கும் சிரேஷ்ட அலுவலர்கள் நியமிக்கப்பட வுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற-50)

## செப்புக் காசை விழுங்கிய முதியவர் ஆஸ்பத்திரியில்

சாவகச்சேரி, ஜன.19

ஒரு சதம் செப்பு நாணயத்தை வாய்க்குள் வைத்துக் கொண்டு படுத்திருந்த 93 வயது முதியவர் காசை விழுங்கிய நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நுணாவில் கிழக்கில் இடம் பெற்றது..

சலக் கடுப்புக்கு செப்புக் காசை வைத்திருந்தால் குணமாகும் என்று கூறியதைக் கேட்டு ஒரு சதம் செப்பு நாணயத்தை தேடி எடுத்து வாயினுள் வைத்துக் கொண்டு முதியவர் உறங்கினார் என்றும் நித்திரையின் போது அவர் காசை விழுங்கிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## ஏகாதசி தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜன.19

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை புதன் கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். மு.ப 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும். மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயண சுவாமி பூமாதேவி சிறிதேவி சமேதராக அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை நடைபெறும். (ற-160)

## மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்கள் தறிப்பு

### அதிகாரிகள் அசமந்தம் என பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.19

இராணுவத்தால் அண்மையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பலாலி வயாவிளான் மற்றும் தையிட்டி பகுதிகளில் உள்ள தமது காணிகளில் உள்ள இயற்கை வளங்களைக் கூடப் பாதுகாக்க முடியாதுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அங்கு[illegible] களைக்[illegible] கின்றனர் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த வீடுகளின் கூரைகள், யன்னல்கள், கதவுகள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டமையை அரச அதிகாரிகளும், பொலிஸாரும் நன்கறிந்த நிலையில் அது குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்காது தற்போதும் அசமந்தமாகவே [illegible] என்றும் அந்த மக்கள் குற்[illegible]னர்.

காணிகளின் உரிமையாளர்கள் காணிகளைத் துப்புரவு செய்யும்போது கிடைக்கும் மரம் தடிகளை தற்போது தாம் வசித்து வரும் இடங்களுக்கு கொண்டு செல்வதற்குக்கூட பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில், திருடர்கள் இரவுடன் இரவாக பெறுமதி மிக்க மரங்களை எவ்வாறு தறித்து எடுத்துச் செல்கின்றனர் என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதுகுறித்து யாரிடம் முறையிடுவது என்று தெரியாத நிலைமையே காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு பிரதேச செயலர் ஒருவருக்கு விரைவில் மாற்றம்

### நிர்வாக முரண்பாட்டை அடுத்து என தகவல்

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலர் ஒருவர் விரைவில் இடமாற்றப்படவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற நிர்வாக முரண்பாடுகள் காரணமாகவே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேச செயலர் தொடர்பில் அண்மையில் அதிகாரி ஒருவர் மாவட்ட அரச அதிபருக்கு எழுத்து மூலம் முறையிட்டிருந்தார். குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு அரச அதிபர் குழு ஒன்றை நியமித்திருந்தார். அந்தக் குழு தனது அறிக்கையை அண்மையில் அரச அதிபரிடம் கையளித்திருந்தது.

> முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு அரச அதிபர் குழு ஒன்றை நியமித்திருந்தார். அந்தக் குழு தனது அறிக்கையை அண்மையில் அரச அதிபரிடம் கையளித்திருந்தது.

அந்த அறிக்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே குறித்த பிரதேச செயலர் இடமாற்றப்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது, முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததும், அது குறித்துவிசாரணை செய்யப்பட்டமையும் உண்மையே- என்றார்.

இவை தொடர்பான விவரங்கள் உத்தியோகபூர்வமாக வெளிவரும் என்றும், நிர்வாக மாற்றங்களை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாது பகிரங்கப்படுத்துவது நிர்வாக நடைமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-101)

## முல்லை. மீனவர்களுக்கு 150 இயந்திரப் படகுகள்

### இந்திய துணைத் தூதரக உதவியுடன் விரைவில் வழங்குவதற்கு ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத் தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்தியத் துணைத் தூதரகத்தின் பங்களிப்புடன் 150 படகுகளும், இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முதற்கட்ட ஒப்பந்த நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றது என்றும்- விரைவில் படகுகள் வழங்கப்படும் என்றும்- தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு படகுத் தொகுதியின் பெறுமதி சுமார் 6 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

> முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக 300 அங்கத்தவர்களின் விவரங்களை நீரியல் வளத் திணைக்களம் சேகரித்துள்ளது.

குறித்த படகுகள் ஒவ்வொன்றும் இரு மீனவர்களுக்கு உரித்தான வகையில் விநியோகிக்கப்படவுள்ளது. அதற்கான முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக 300 அங்கத்தவர்களின் விவரங்களை நீரியல் வளத் திணைக்களம் சேகரித்துள்ளது. உள்ளூர் மீனவர் சங்கங்களின் ஊடாக இந்த விவரங்கள் சேகரித்து வழங்கப்பட்டுள்ளது. (ந-101)



வவுனியா கோயில்குளம் சிறி அகிலாண்டேஸ்வரி அருளகத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த வெள்ளிக்கிழமை நடப்பட்டது. அடிக்கல்லை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் நட்டார். இந்தக் கட்டடம் 150 சிறார்கள் தங்கும் வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆதரவற்ற சிறார்களுக்கு அருளகம் சிறந்த பணி செய்கின்றது- என்றார். (ந-402)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று மன்னாரில்

மன்னார், ஜன.19

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களில் மன்னாரிலேயே முதன்முறையாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

கடந்த வாரங்களில் மன்னர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் நிறைவடைந்த நிலையில் இன்று குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்துக்கானஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற உள்ளது என்று மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் இணைத் தலைவர்களாக வர்த்தகவாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிமலநாதன் மற்றும் கே.கே. மஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. கூட்டம் மாவட்டம் சார்ந்த அபிவிருத்தி திட்டங்கள், விடுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-21)

## வாய்க்கால் மணலை அகழ்ந்தால் கைது செய்கின்றனர் பொலிஸார்

### செட்டிகுளம் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜன.19

நீர்ப்பாசன வாய்க்கால்களைச் சுத்தப்படுத்தி அவற்றில் உள்ள மணலை அகழ்ந்து கொண்டு செல்லும்போது பொலிஸார் கைது செய்கின்றனர். அதனால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் வாய்க் கால்களைச் சுத்தப்படுத்த முடியாதுள்ளது.- இவ்வாறு வவுனியா செட்டிகுளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

> வேலைத் திட்டங்கள் குறித்துத் தமக்கு முன்னதாக அறிவித்து விட்டு மேற்கொண்டால் கைது செய்யப்படுவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெள்ள இடரைக் கட்டுப்படுத்துவதற்கு நீர்ப்பாசன வாய்க்கால்களை துப்புரவு செய்து அதனுள் உள்ள மணலை வெளியிடங்களுக்கு கொண்டுசெல்லும் போது பொலிஸார் கைது செய்கின்றனர். இதனால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரிகள் மணல் கொள்ளைகள் நடைபெறுகின்றன. அதனாலேயே இவ்வாறான கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தனர்.

வேலைத் திட்டங்கள் குறித்துத் தமக்கு முன்னதாக அறிவித்துவிட்டு மேற்கொண்டால் கைது செய்யப்படுவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர் வாய்க்காலை சுத்தப்படுத்தும்போது பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமாறும், அது குறித்து பிரதேச செயலகம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தும் என்றும் குறிப்பிட்டார். (ந-21)

## அனைவரும் ஒத்துழைத்து செயற்பட்டால் முல்லை. வித்தியானந்தா பல்கலையாகும்

### முன்னாள் அதிபர் இராசநாயகம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.19

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரி எவ்வாறு பல்கலைக் கழகமாக உருவாகியதோ அதேபோல் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியும் பல்கலைக் கழகமாக பரிணமிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.- இவ்வாறு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.இராசநாயகம் தெரிவித்தார்.


முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி தேசிய பாடசாலையின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பாடசாலையை நிர்மாணித்த பேராசிரியர் நூற்றாண்டு தூர நோக்கு சிந்தனையுடனே நிறுவினார். இவரின் சிந்தனையில் இன்று கல்லூரியில் பல வெற்றிகளையும் சாதனைகளையும் நிலை நாட்டியவாறு 65 ஆண்டுகளை கடந்து நிற்கின்றோம். எதிர்காலச் சந்ததியினரும் இக்கலூரி ஊடாக பல வெற்றிகளையும் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று சாதனைகள் பல புரிய ஒவ்வொரு பழைய மாணவரும் உறுதுணையாக அமைய வேண்டும்.

25 ஏக்கர் நிலப்பரப்பும் பல்வேறு துறை சார்ந்த கட்டட பௌதிக வளங்களையும் போதிய ஆளணி வசதிகளையும் தன்னகத்தே கொண்ட இந்தக் கல்லூரியானது பல்கலைக்கழகமாக பரிணாமிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்- என்றார்.

பல்வேறு துறைகளில் வெற்றியீட்டிய சாதனை படைத்த,சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கமலாம்பாள் இராசநாயகம் வழங்கினார். (ந-21,102)



## கடையில் திருட்டு

வவுனியா, ஜன.19

வவுனியா பண்டாரிக்குளம் ரான்ஸ் போமர் சந்திப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் பணம் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

கடையின் பின்புறக் கதவை திறந்து 10 ஆயிரம் ரூபா திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் பொலிஸாருக்கு யாழில் பற்றாக்குறை

## பெண்கள், சிறார்கள் தொடர்பான விசாரணைகளில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். மாவட்டத்தில் போதிய பெண் பொலிஸார் நியமிக்கப்படாததால் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான விசாரணைகளின்போது ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில் மீள நியமிக்கப்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் சடுதியான குறைவு காணப்படுகின்றது என்று யாழ். பிராந்தியத்துக்குரிய பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

தற்போது 'ஏ' தர பொலிஸ் நிலையில் இருந்து 'சீ' தர பொலிஸ் நிலையம் வரை ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரே கடமையாற்றுகின்றார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் இருவரும், இளவாலையில் இருவரும், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒருவரும், நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒருவரும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒருவரும் கடமையாற்றுகின்றனர். யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய பொலிஸ் நிலையங்களிலும் இதே நிலமையே உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் விடுமுறையில் சென்றால், மற்றையவரை அருகில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் தங்குமாறு பொலிஸ் மா அதிபரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனால் இரவு வேளைகளில் பெண்கள், சிறுவர் தொடர்பான விசாரணைகளை ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன்போது சில விடயங்களை கூறுவதில் பெண்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

> "தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களிலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2க்கும் குறைவாகவே உள்ளது."

தென்னிலங்கையில் 'சி' தர பொலிஸ் நிலையங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கூட இங்குள்ள தலைமைப்பீட பொலிஸ் நிலையங்களுக்கு நியமிக்கப்படவில்லை என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஆளணிப் பற்றாக்குறை குறித்து பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எனினும் இதுவரை அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களிலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2க்கும் குறைவாகவே உள்ளது.

அதேவேளை, கடந்த ஆண்டு பொலிஸ் கல்லூரியில் இருந்து வெளியேறிய 10 தமிழ் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு காலி, மாத்தறை பகுதியில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரு-107)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.19

மாவிட்டபுரம் ஸ்ரீ மாவை சித்தி விநாயகர் ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம் திகதி மாலை மணவாளக் கோல நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.

மாவை ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ து.இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-9)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.19

மாவிட்டபுரம் மாவைக் கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மாவை மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேஸ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாவிட்டபுரம் கிராம அலுவலர் கே.அஜந்தன், யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன், சமாச வெளிக்கள அலுவலர் கோ.கௌரிதாசன் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் செல்வி சி.ஆரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ரு-9)

## வீதிகளை திருத்துமாறு கோரிக்கை

மானிப்பாய், ஜன.19

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு உரித்தான 6 வீதிகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாத இந்த வீதிகளில் கற்கள் வெளிக் கிளம்பியுள்ள நிலையில் உள்ளன.

2.45 கிலோமீற்றர் நீளமான சுழிபுரம் நெல்லியான் வீதி, ஒரு கிலோமீற்றர் நீளமான செட்டியார்மடம் சங்கரத்தைசங்கானை வீதி, 3 கிலோமீற்றர் நீளமான சுழிபுரம்சங்கானை வீதி என்பன முன்னுரிமை பிரகாரம் உடன் மீள்புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரு-50)

## சிறப்புரை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் ஞாபகார்த்தமாக வடக்குப்போருக்குப்பின்னரான சூழலில் மனிதநேய விழுமியம் பேணலும், கல்வியின் பங்களிப்பும் எனும் தலைப்பில் சிறப்புரை எதிர்வரும் 22 ஆம் திகதி நிகழ்த்தப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீட கல்வித்துறை தலைவர் கலாநிதி திருமதி அனுசியா சத்தியசீலன் உரை நிகழ்த்தவுள்ளார். (ரு-50)

## சட்டத்தரணிகள் இன்றி முன்னிலையாகாதீர்கள்

### மல்லாகம் நீதிமன்றில் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.19

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணிகள் இன்றி வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலையாக வேண்டாம் என்று மாவட்ட நீதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து வழக்குகள் உட்பட சிறு வழக்குகளுக்கும் சட்டத்தரணிகளை ஏற்படுத்துமாறு கூறி வழக்கு விசாரணைகளுக்கு வருவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

அத்துடன் மீள வழக்கு கூப்பிடப்படும் போது சட்டத்தரணியுடன் வருமாறு பணிக்கப்படுகிறது.

இந்தப் புதிய நடைமுறையால் நீதிமன்றுக்கு வருபவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நிலை உள்ளது. ஏனைய நீதிமன்றங்களில் இல்லாத புதிய நடைமுறை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் அன்றாடம் கூலி வேலை செய்யும் அப்பாவி பொதுமக்கள் நீதிமன்ற விசாரணை என்று வரும் போது அதிக பணத்தைச் செலவிடவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் ஒருவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் போது எந்தவொரு சட்டத்தரணியும் இன்றி நீதிமன்றில் குற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் இது தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ரு-107)

## சிக்கன கூ.சங்க அங்கத்தவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான கடன் வசதி

யாழ்ப்பாணம், ஜன.19

வடமாகாண சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் போரால் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்துக்கான கடன் வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து கடந்த ஆண்டில் சம்மேளனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தன.

இந்த சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடையும் நிலையில் புதிய கடன் வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது என்று சம்மேளனத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கான வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து உதவிகள் பெறப்படவுள்ளன.

இந்த உதவிகளைக் கொண்டு சம்மேளனம் சமாசங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட வாழ்வாதாரம் இன்றிக் காணப்படும் மக்களின் சுய தொழிலுக்கான கடன் வசதிகளை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்தப் புதிய கடன் திட்டங்கள் இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்படுவதோடு இந்தக் கடன் வசதி மூலம் அங்கத்தவர்கள் நன்மையடைவார்கள்.

குறிப்பாக வடக்கில் கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள அங்கத்தவர்கள் இந்தக் கடன் திட்டத்தின் மூலம் சுயதொழில்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை சம்மேளனம் மேற்கொள்ளும்.

இந்தச் சம்மேளனம் கூடுதலாக மக்களுக்கான திறந்த மனப் பாங்குடன் சேவையாற்றுவதே அதன் நோக்கம் என்று சம்மேளனத்தின் தலைவர் கூறினார். (ரு-ஐ-17)

## புனித யாகப்பர் ஆலயத்தை புனரமைத்துத் தர வேண்டும்

### பலாலி தெற்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19

கடந்த மார்ச் மாதம் இராணுவத்தால் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பலாலி தெற்கு (ஜே/252) உள்ள புனித யாகப்பர் ஆலயத்தை புனரமைத்து வழிபாடுகளுக்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிகவும் தொன்மையான இந்த ஆலயம் போர் காரணமாக பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் யன்னல்கள், கதவுகள் கழற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கூரை முழுமையாகச் சேமதடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. குறித்த பகுதி விடுவிக்கப்பட்டு தற்போது 10 மாதங்கள் கடந்துள்ளது. அந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்தவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாவர். அதனால் ஆலயத்தை சீர்படுத்தித் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரு-107)

## மத்தியஸ்த சபை கூட்டம் இடமாற்றம்

வவுனியா, ஜன்.19

வவுனியா வடக்கு மத்தியஸ்த சபைக் கூட்டம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் புளியங்குளம் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என மத்தியஸ்தசபையின் தவிசாளர் தா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச மத்தியஸ்த சபைக் கூட்டம் இதுவரை காலமும் புளியங்குளம் இராமனூர் தனிநாயகம் அடிகளார் வித்தியாலயத்தில் நடைபெற்று வந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணிக்கு புளியங்குளம் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைமாற்றுக்கால நீதிச் செயற்பாட்டை முன்னெடுக்க செயலணி

## நியமித்தது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஜன. 19
இலங்கையில் இடைமாற்றுக் கால நீதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைச் செயலணிக்கு அரசு ஏறத்தாழ இறுதிவடிவம் கொடுத்துள்ளது.
தலைவராக சட்டத்தரணி மனோரி முத்தட்டுவேகமவையும் செயலாளராக கலாநிதி பாக்கிய சோதி சரவண முத்துவையும் உள்ளடக்கிய 11பேர் கொண்ட செயலணியை வெளிவிவகார அமைச்சு நிய மித்துள்ளது.
சட்டத்தரணி மனோரி முத் தட்டு வேகம கடந்த இரு தசாப்த காலப் பகுதியில் பொறுப்புக் கூறல் பொறிமுறைகள் பலவற்றில் பங்கேற்றுள்ளதுடன் இலங்கையின் நன்கறியப்பட்ட மனித உரிமை ஆர்வலராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.
கலாநிதி பாக்கியசோதி சர வண முத்து உலகறிந்த மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் ஆர்வலராகவும் திகழ்வதுடன், மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின்நிறைவேற்றுப்பணிப் பாளராகவும் விளங்குகின்றார்.
இந்தச் செயலணியானது தேசிய அளவில் பரந்துபட்ட கலந்தாலோசனைகளை நடத்தி போரின் இறுதிப்பகுதியில் இடம் பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நம்பகரமான் உள்ளகப் பொறி முறைகளை அமைப் பதற்கான பரிந்துரைகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

> ஐ.நா. தீர்மானத்தை நிறை வேற்றுதல் மற்றும் கடந்த காலத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உண்மைகளை வெளிக் கொண்டுவருதல் தொடர்பில் அவர் இலங்கை அரசை வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது

பிரதமர் அலுவலகத்தின் நல்லிணக்கப் பொறிமுறைகளை கூட்டிணைப்பதற்கான செயலகத்தின் நெருங்கிய பங்களிப்புடன் வெளிவிவகார அமைச்சின்ஐக்கிய நாடுகள்பிரிவின்கீழ் இந்தஆலோசனைச் செயலணி அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
செயலணி எவ்வளவுகாலப் பகுதியில் பணிகளைத் தொடங் கும் என கலாநிதி சரவணமுத்துவிடம் வினவியபோது,
இது தொடர்பில் நிச்சயமான காலவரையறையை தரமுடியாவிடினும் இம்மாதத்துக்குள்ளான செயலணியின் கலந்தாலோசனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு சில வாரகாலப்பகுதியில் நிறைவுக்கு கொண்டுவர எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். கடந்த வருட ஜெனிவா அமர்வின்போது இணை அனுசரணை வழங்கிய ஐ.நா. மனித உரிமை பேரவைத் தீர்மானத்தை எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்பாக இலங்கை அரசு நடைமுறைப்படுத்தும் என இலங்கைக்கு பயணம் செய்திருந்த பிரித்தானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹியுகோ ஸ்வயர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். ஜூன் மாதத்துக்கு முன்பாக இது சாத்தியமாகுமா என்ற கேள்விக்கு பதிலளித்த கலாநிதிசரவணமுத்து, பிரித் தானிய அமைச்சர் கூறிய கருத்து எதை மன தில் நிறுத்தியது என் பதை நான் அறியவில்லை. இருப் பினும் ஜூன் மாதமளவில் ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான பொறி முறைகளை இலங்கை அமைத் துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கள் உள்ளன. ஆலோசனைச் செயலணியும் இதன் ஒரு பாகமாகவே அமைந்துள்ளதுஎனக்குறிப்பிட்டார்.
ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நடைமுறையை நேரில் அறிந்து கொள்ளும் வகையிலேயே மனித உரிமை ஆணையாளர் இளவரசர்ஜெயிட்ராட்ஹூஸைன்பெப்ரவரி மாத முற்பகுதியில் பயணம் செய்யவுள்ளதாகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது. இதன் போது ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுதல் மற்றும் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகஉண்மைகளைவெளிக் கொண்டுவருதல் தொடர்பில் அவர் இலங்கை அரசை வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-சி)



குருநாகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாணம் ஏறாவூர் பிரதான வீதியெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. அதுபோல் கிழக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களிலும் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றது. (ற-ஜ)

## பாடசாலை மாணவர்களுக்கு 13 நாள் போனஸ் விடுமுறை

கொழும்பு, ஜன.19
பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்தில் பதிமூன்று நாள்கள் விடுமுறை போனஸாக கிடைத்துள்ளது என்று கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
அரச பாடசாலைகள் ஒரு வருடத்தில் 210 நாள்கள் நடத்தப்பட வேண்டும் என்பது கல்வி அமைச்சின் விதிமுறையாகும். எனினும் இந்த வருடத்தில் 197 நாள்களே நடத்தப்படவுள்ளன.
இந்த வருடத்தில் வரும் சனி, ஞாயிறு, அரச வங்கி வர்த்தக பொது விடுமுறை தினங்கள் மற்றும் பாடசாலைத் தவணை விடுமுறைகளை கவனத்தில் கொண்ட வகையில் 210 நாள் களுக்கு பாடசாலைகளை நடத்த முடியாது என கணிப்பிடப்பட் டுள்ளது.
எனவே 197 நாள்களுக்கே பாடசாலைகள் நடத்தப்படல் வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மீதி 13 நாள்கள் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த 13 நாள்களும்அரசபாடசாலைமாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் போனஸ் விடுமுறை நாள்கள் என்று கருதப்படுகிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

## இந்த ஆண்டில் இரு தேர்தல்கள்

கொழும்பு, ஜன.19
இந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின் றன.
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளதுடன், சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது என்று உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.
பெரும்பாலும் ஜூன் மாதத்துக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும், புதிய அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு இந்த ஆண்டு பூர்த்தியாகும் முன்னதாகவே நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
அரசியல்கட்சிகள், சிவில் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு அது குறித்துப் பேச்சு நடத்தித் தெரிவுக்குழு ஒன்றின் ஊடாக இந்த யோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டு நிறைவேற்றி அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.
புதிய அரசியல் அமைப்பு அறிமுகம் செய்யப்படுவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த எவ்வித தடையும் ஏற்படுத்தாது என அரசு தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசியலமைப்புக் குறித்த யோசனை நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## கொழும்பு துறைமுகத்தில் இந்திய, சீனக் கப்பல்கள்

கொழும்பு, ஜன 19
நல்லெண்ண அடிப்படையில், சீனப் போர்க்கப்பல்கள் மூன்றும் இந்தியப் போர்க் கப்பல்கள் இரண்டும் கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.
லியுஷோஷ், சன்யா, குயின் ஹாய்ஹு ஆகிய சீனக்கப்பல்களும் தரங்கனி மற்றும் சுதர்சினி ஆகிய இந்தியக் கப்பல்களுமே கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.
சீனக்கப்பல்கள், எதிர்வரும் 21ஆம் திகதிவரை தரித்து நிற்கும் எனத் தெரிவித்துள்ள கடற்படை, இந்தியக்கப்பல்கள் இன்று பயணமாகின்றன எனத் தெரிவித்துள்ளது. (து)

## தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்த கிராமங்களில் உடற்பயிற்சி மையங்கள்

கொழும்பு, ஜன.19
தொற்றாத நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு கிராமத்துக்கும் உடற் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.
இருதய நோய்கள், நீரிழிவு, புற்றுநோய்கள், சுவாச நோய்கள் போன்ற தொற்றாத நோய்கள் மூலமாக தொற்று நேய்கள் அதிகரித்துள்ளமையானது சுகாதார அமைச்சு முகம் கொடுத்துள்ள பெரும் பிரச்சினை யாக வுள்ளது.
நாம் உணவாகக் கொள்ளும் உணவுகள் காரணமாகவே நோய்கள் ஏற்படுவதாகவும், உடற் பயிற்சிகளைச் செய்வதன் மூலமாக அதனைக் குறைத்துக் கொள்ளமுடியுமெனவும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.
புகைப்பிடிப்பதால் மற்றும் மதுபானங்களை அருந்துவதால் பெரும்பாலானோர் நோய்களை ஏற்படுத்திக் கொள்வதாகவும், குறிப்பிட் அளவுப்பிரமாணத்துக்கு மேலதிகமாக சீனி மற்றும் உப்பை உண்பதால் சிலர் நோய்களை உருவாக்கிக் கொள்வதாகவும், சீனிப்பாவனையைக்குறைத்துக் கொள்வது தொடர்பாக அரசு சுற்றறிக்கை யொன்றையும் கூட வெளியிட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஐ-22)

## விவசாய விதைகள் நாட்டுக்குள் சட்டவிரோதமாக இறக்குமதி

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19
நாட்டுக்குள்விவசாயவிதைகளை சட்டவிரோதமாக இறக்குமதி செய்யும் மாபியா செயற்பாடுகள் அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபே கோன் தெரிவித்துள்ளார்.
விவசாய விதைகள் தொடர்ந்தும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன என்றும் கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.
சர்வதேசசந்தையுடன்போட்டியிடக் கூடிய மட்டத்திலான பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்எனவும்அவர்குறிப்பிட்டுள்ளார்.
நாட்டில் அரிசி உற்பத்தி வெகுவாக அதிகரித்துள்ளதெனவும் அதனால் அரிசியை அரசியல் மேடைகளில் கருப்பொருளாக எடுத்துக் கொள்ளும் காலம் நிறைவடைந்துள்ளதாகவும் இதனால் நாட்டின் விவசாயம் மிகவும் அபாயமான காலத்தை எட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடறுப்பை இல்லாதொழிக்க வெளிநாட்டிலிருந்து இறைச்சி

## நிதியமைச்சருக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஜன. 19
நாட்டில் மாடறுப்பை முழுமையாக இல்லாமல் செய்வதற்காக இறைச்சிக்காகத் தேவைப்படும் உணவுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யுமாறுதான் நிதி அமைச்சர் ரவி கருணாநாயகவிடம் கோரியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறை பயாகலை இந்து கல்லூரியில் நேற்று நடைபெற்ற 2016 ஆம் ஆண்டு தைப்பொங்கல் பண்டிகை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதன் மூலம் மாத்திரம் இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா என்பது



கேள்விக்குறியாக இருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, உலகில் அனைத்து அரசியல் அமைப்புக்களையும் விட த்ரிபிடகய, பகவத்கீதை, குர்ஆன் மற்றும் பைபிள் போன்ற புனித வேதநூல்கள் மூலம் உலக மக்கள் அனைவரயும் மிகவும் இலகுவாக ஒன்றிணைக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (து)

### நிலக்கரி கொள்வனவில் முறைகேடு?

கொழும்பு, ஜன. 19
இலங்கையின் மின்சார உற்பத்திக்கான நிலக்கரிக் கொள்வனவில், தவறான முறையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது. குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டிய நிலக்கரிக்குப் பதிலாக, அதிக விலையுடைய நிலக் கரிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக, ஆவணங் கள் தெரிவிக்கின்றன.

1.9 மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரிக்கான ஒப்பந்தம் சுவிஸ் சிங்கப்பூர் ஓவர்சீஸ் என்டர் பிறைஸஸ் (தனியார்) நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு மெற்றித் தொன் னுக்கு 58 அமெரிக்க டொலர்கள் எனும் விலையிலேயே, இவ் வொப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், லங்கா நிலக்கரி நிறுவனம், இதைவிடக் குறைவான மூன்று ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே, தனக்கான நிலக்கரிகளைக் கொள்வனவு செய்து வருகின்றது.

அதில் ஓர் ஒப்பந்தத்தின்படி, ஒரு மெற்றிக் தொன்னுக்கு 55.70 அமெரிக்க டொலர்களும், மற்றையதுக்கு மெற்றிக் தொன்னுக்கு 51.29 அமெரிக்க டொலர்களும், மூன்றாவதற்கு, 49.85 அமெரிக்க டொலர்களுமாக, அந் நிறுவனம் செலுத்தி வருகின்றது.

சுவிஸ்–சிங்கப்பூர் நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்கும் முடிவை, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் செயற்குழுவே எடுத்துள்ளது. குறைவான ஏலத்தொகையை விட 8.15 அமெரிக்க டொலர்கள் அதிகமான விலைக்கே, இந்தக்கொள் வனவுக்கு முடிவெடுத் துள்ளது.

இதன்படி, 1.9 மில்லியன் மெற்றிக் தொன்னுக்காக இலங்கை, 15.485 மில்லியன் அமெரிக்க டொலர்களை, அதிகமாகச் செலுத்தவுள்ளது.

இந்த முடிவுக்கு எதிராக, கொள்வனவு முறைப்பாட்டுச் சபையிடம், ஏனைய நான்கு ஏலத் தொகையாளர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து, சிங் கப்பூரைச் சேர்ந்த சுவிஸ் சிங்கப்பூர் நிறுவனத்தின் கொள்வனவை நிறுத்தி, புதிய ஏலத்தை நடாத்துமாறு, அமைச் சரவைக்கு அச் சபை பிரேரித்திருந்தது. எனினும், அந்த ஏலம் நிறுத்தப்படாததோடு, புதிய ஏலமும் கோரப்படவில்லை. மாறாக, சுவிஸ் சிங்கப்பூர் நிறுவனத்துக்கே அந்த ஏலத்தை வழங்குமாறு, கொள்வனவுச் செயற்குழு பரிந்துரை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (து)

### மொரட்டுவை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன 19
மொரட்டுவை பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் 11 பேர், வகுப்பிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராகவும் அவர்கள் மீதான தடையை நீக்குமாறு கோரியும் அப்பீடத்தைச் சேர்ந்த சுமார் 2,000 மாணவர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மொரட்டுவை பல்கலைக்கழ கத்துக்கு முன்பாக கல்கிஸை–கொட்டாவை வீதியை மறித்து இவர்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டமையால் அவ்வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. (து)

### கடற்படை மூலம் மூன்று மில்லியன் வருமானம்

கொழும்பு, ஜன 19
இலங்கை கடற்படை மூலம் இரண்டு மாத காலப்பகுதியில் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்ச்சைக்குரிய அவன்ட் கார்ட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகள் கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்பிறகான இரண்டுமாத காலப் பகுதியில், கடற்படையினர் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த 14ஆம் திகதி பெரிய நிதி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கடற்படையினர் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் சராசரியாக கடற்படையினர் மாதமொன்றுக்கு 130 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவன்ட் கார்ட் நிறுவனத்திடம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் சராசரியாக மாதாந்தம் 45 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. (து)



களனிவெலி ரயில் மார்க்கத்தினூடாக முதற் தடவையாக புதிய ரயில் பஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நேற்று முற்பகல் நடந்த நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. கொஸ்கமவிலிருந்து ஹோமாகம மற்றும் மகரகம ஊடாக ரயில் பஸ் சேவையில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே போக்குவரத்து நடவடிக்கைக்குப் பொறுப்பான பிரதிப் பொதுமுகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார். (து)

# சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வின்றேல் போராட்டம்

## ஆசிரியர் அதிபர்கள் தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 19
நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் சம்பள நிலுவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படுமென ஆசிரியர் அதிபர்கள் தொழிற் சங்கத்தின் ஒருங்கிணைப்புக் குழுப் பொதுச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில், கடந்த 1997ஆம் ஆண்டு சம்பள நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டுஅரசசேவையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டபோதும், தற்போது 19 வருடங்களாகியும் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் உள்ளது.

அத்துடன், இன்று ஆசிரியர்களுக்கு கற்பிக்க நேரம் இல்லாமல், வவுச்சர்களை நிரப்புவதற்கும், மருந்துகொடுக்கும் போது அவற்றுக்கான விண்ணப்பங்களை நிரப்பவதற்கும், செயற்றிட்டங்களை செய்வதற்குமே நேரம் சரியாக உள்ளது. பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்க எமக்கு நேரமில்லை. கல்வியமைச்சருக்கு நாம் இதுகுறித்து எழுத்து மூலம் அறிவித்தும் அவர், அதற்கு எவ்வித பதிலும் வழங்கவில்லை.

ஒவ்வொரு முறையும் வரும் அரசுகளிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்து, மனுக்களைக் கையளித்து, ஆர்ப்பாட்டம் நடத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்துவிட்டு ஆட்சிக்கு வந்த, நூற்றிற்கு 6 வீதம் கல்விக்கு நிதியொதுக்கீடு செய்துள்ளதாக தம்பட்டம் அடிக்கும் இந்த குழப்பம் நிறைந்த அரசு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால், எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எமது பிரச்சினைகள் குறித்து எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளோம். அதன் மூலமும் தீர்வு கிடைக்காவிட்டால் மாபெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக குறிப்பிட்டார். (து)

# அரசின் ரயில் சேவை தனியார் மயமாகிறது

## ரயில் பொது ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 19
ரயில் சேவையை தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் மீண்டும் இடம்பெறுவதாக அகில இலங்கை ரயில் பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக ரயில் பெட்டிகளைத் திருத்தும் மற்றும் இயந்திரங்களை பழுது பார்க்கும் விடயங்களை தனியார் நிறுவனத்திற்கு வழங்க அரசு நாடாளுமன்றத்தின் அனுமதியினைப் பெற்றுள்ளதாக இந்தச் சங்கத்தின் செயலாளர் எஸ்.பீ.விதானகே தெரிவித்துள்ளார்.

மேலும், ரயில் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கான திறன் ரயில்வே திணைக்களத்திற்கு இருந்தும், பழுதுபார்ப்பதில் கால தாமதங்கள் ஏற்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை தாம் ஏற்றுக்கொள்கிறோம்.

இதனடிப்படையில் இங்கு காணப்படும் வளப்பற்றாக் குறையே இதற்கான காரணம். ஆனால், இதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும் என அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தக் குறைபாட்டை அரசு நிவர்த்தி செய்வதை விட்டு இதை தனியார் நிறுவனத்திற்கு வழங்கவுள்ள செயற்பாடானது வருந்தக்கூடிய செயல் என்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மொழி, மதங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து

அச்சுறுத்தல் எதுவும் இன்றி, அவரவருக்குப் பிடிக்கும் மதங்களை, மக்கள் பின்பற்றும் சுதந்திரம் மிகமிக அவசியமானது. உலகளாவிய மட்டத்தில் மத சுதந்திரம் நிலைக்கவும் நீடிக்கவும், வகை செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டு இருப்பவர் மதகுரு எவரும் அல்லர்; அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவே.

உலக மத சுதந்திர தினமான நேற்று, தாம் விடுத்த செய்தி ஒன்றில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

பல்வேறு நாடுகளிலும், மதரீதியாக ஒடுக்கப்பட்டு வரும் மக்களை மனதிற் கொண்டு, அவர் இந்தக் கருத்தை முன்வைத்திருப்பார் என்று கொள்ளலாம்.

மனித உரிமைகளை, ஒவ்வொருவரும் இன, மத, பால், சாதி வேறுபாடு இன்றிக் கடைப்பிடிக்க, அனைத்துலக நாடுகள் ஒன்றிணைந்து, ஐக்கிய நாடுகள் சபை ஊடாகப் பட்டயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மதவெறி காரணமாகக் கொலைகளில் ஈடுபடுவோர், சிறுபான்மை இன மக்கள் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொள்வோர், தேச மட்டத்தில் மத மற்றும் வேறு காரணங்களை முன்வைத்துச் செயற்படுவோர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும், அமெரிக்க ஜனாதிபதி அச்சொட்டாகச் சுட்டிக்காட்டி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில், அமெரிக்க ஜனாதிபதியின் கருத்து, மத ரீதியாக மட்டுமன்றி, இனரீதியாக ஒடுக்கப்படும் மக்களுக்கும் பொருத்தம் உடையது.

இதேவேளை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உலக நாடுகள் ஒன்றிணைந்து, ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் பட்டயங்களை உருவாக்கி உள்ளமையும்--

அந்தப் பட்டயங்களுக்கு இசைவாகத் தத்தமது நாடுகளில் சட்டங்களை இயற்றி இன, மொழி, மத உரிமைகளைப் பிசகின்றிச் செயலாக்குவது--

ஒவ்வொரு நாட்டு அரசினதும், தவிர்க்கக் கூடாத கடமையும் பொறுப்பும் ஆகும்.

மிகக் குறிப்பாக, சிறுபான்மை இனங்களின், அவற்றின் மொழிகளின், மதங்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு எந்த வகையிலும், விதத்திலும் பாகுபாடோ அல்லது வேற்றுமையோ காட்டாமல் இருப்பதற்கான கடுமையான சட்டங்களும் அவற்றின் ஊடு தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும்.

மொழி, மதம், பண்பாடு போன்ற மக்களுக்கு உரிய, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத, வாழ்வியல் அலகுகளைத் தட்டி வீழ்த்தவோ, அன்றி அழித்துத் துடைக்கவோ மாற்றார் எவருக்கும் உரிமை இல்லை என்பதையும்--

உலகின் மனிதர்கள் எல்லோரும் ஒருவருக்கு மற்றவர் சகோதரரே என்ற நிலையும், இன, மத, பேதங்கள் துடைத்து எறியப்பட வேண்டும் என்ற கோட்பாடும்--

அதன் செயல் வடிவங்களிலும் மேலோங்குவதற்கு வழி செய்யப்படுவதும்--

தேசங்களினதும் அவற்றின் தலைமைத்துவங்களினதும் முதன்மைப் பொறுப்பாகும்; தட்டிக்கழிக்கக் கூடாத கடமையும் ஆகும்.

# பரணகமவின் சிரிப்புக்குப் பின்னால் ஒளிந்திருந்தது என்ன?

சி.கதிர்காமநாதன்



2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காணாமற் போனவர்கள், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம விசாரணைகள் இடம் பெற்றபோது ஒருநாள் சிரித்தார். அவரின் சிரிப்புக்குப் பின்னால் பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன. சரி முதலில் அவர் சிரித்த சூழ்நிலையைப் பார்ப்போம்.

காணாமற் போனோர் பற்றிய முறைப்பாடுகள், விசாரணைகள் பற்றி எத்தனை விதமான கதைகள், அழுகைகள், கதறல்கள்.. கேட்டுக் கேட்டு அங்கே இருக்கும் அறிவுசார்ந்த பெரியவர்கள், புத்திஜீவிகள் என்ன நினைத்திருப்பார்கள்?

இப்படி எங்களை நம்பி, கதை கதையாய் அழுது புலம்பி, கண்ணீர் விட்டுச் சொல்கிறார்களே. ஆமிக்காரர்கள் பிடிச்சுக் கொண்டு போனாங்கள், பொலிஸ்காரர்கள் பிடிச்சாங்கள், மாற்றுக் கட்சியினர் பிடிச்சுக் கொண்டு போனார்கள். கண்ணெதிரே சுட்டாங்கள். தூக்கிக் கொண்டு போனார்கள். கடத்திக் கொண்டு போனார்கள்... கத்தினோம்... கதறினோம்... ஒரு பிரயோசனமுமில்லை.

பறிகொடுத்த உறவுகள் அனைவரும் அட்சரம் பிசகாமல், நடந்தவற்றை நேரம் காலம் தவறாமல்..., எங்களால் சிலரை அடையாளம் காட்ட முடியும். பயப் படாமல் சளைக்காமல் சொல்லும் வலிமை எப்படி வந்தது? இவர்கள் அனைவரும் சொல்லும் விடயங்கள் உண்மைதானா?

தலைவர் பரணகம ஏன் சிரித்தார்? அப்போது நடந்த விடயம் தான் என்ன? காணாமற் போனோர் முறைப்பாட்டில் தனது மகனை 2008 இல் பறிகொடுத்த தாயார் தனது முறைப்பாட்டைப் பதிவு செய்து கொண்டிருந்தார்.

தலைவர் பரணகம கேட்டார்.

இவ்வளவு காலமாய் உங்கட மகன் உயிரோட இருக்கிறார் என்பதை நம்புகிறீர்களா?

அருமையான கேள்வி.. சிந்தனையைத் தூண்டும் கேள்வி... பகுத்தறிவைப் பயன்படுத்தும் கேள்வி, உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கு, குறிப்பாகஅந்தத் தாயாருக்கு எப்படியான மன நிலையை உருவாக்கியிருக்கும்?

தலைவர் பரணகம பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அவரால் மட்டுமே இப்படிக் கேட்க முடியும். கேட்கும் துணிவும் அவருக்கிருந்தது. இப்படியான கேள்வியைத் தமிழ்த் தலைவர்களால் கேட்க முடியவில்லை? கேட்டால் என்ன நடந்திருக்கும்? எல்லோரும் மூடை முடிச்சுக்களைக் கட்ட வேண்டிய நிலைமை வந்திருக்கும்.

இனி விடயத்துக்கு வருவோம்.

தலைவர் கேட்ட கேள்விக்கு அந்தத் தாயார் என்ன சொன்னார்? சாத்திரம் பார்த்தபோது... சாத்திரியார் மகன் உயிரோட இருப்பதாகக் கூறினார். அதுதான் நான் மகன் உயிரோட இருப்பதாக நம்புகிறேன்.. என்றார்..

அப்போதுதான் தலைவர் பரணகம சிரித்தார்.

அம்மா சாஸ்திரத்தை நம்பித்தான் முன்னாள் ஜனாதிபதி ஆட்சியைத் துறக்க வேண்டி வந்தது. நீங்களும் சாஸ்திரத்தை நம்பிக் கொண்டு இராமல் ஆக்கபூர்வமான விடயத்தைப் பாருங்கோ.

இந்த நேரத்தில் அவர் சிரித்தது யாருக்காக? பதவியைப் பறிகொடுத்த மகிந் தவுக்காகவா? மகனைப் பறி கொடுத்த அந்தத் தாயாருக்காகவா? இருவரும் சாத்திரத்தை நம்பி மோசம் போய்விட்டார்களா?

ஒருவருக்கு இழந்த பதவியை மீளப்பெறும் வாய்ப்புக்கள் ஏற்படலாம்.... அந்த மகனைப் பறிகொடுத்த தாயாருக்கு....?

அப்படியானால் என்னதான் விடை.

சிலர் சிறைச்சாலையில் கண்டேன், முகாமில் கண்டேன், புனர்வாழ்வு முகாமில் பார்த்தேன் என்று சொல்கிறார்களே... 2008 இலிருந்து எத்தனை வருடங்கள் உண்டோடி விட்டன.

எப்போது இலங்கை அரசால் இதற்குத் தீர்வு கிடைக்கப் போகின்றது?

இன்னும் நம்பிக்கை யையும், உயிரையும் வைத்துக் கொண்டு அலைந்து திரியும் இந்த மக்களுக்குத்தலைவர் பரண கமவின் குழு வினரால் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

முதலில் இந்த மக்கள் சொல்லும் விடயங்கள் உண்மை என்று ஏற்றுக்கொண்டு இருப்பார்களா? அல்லது இது பொய்யான அழுகை, புலி ஆதரவாளர்களால் புனையப்பட்ட கதைகளுடன் கூடிய நாடகம் என நினைப் பார்களா? இது நாடகம்.. பொய் யென்றால்... எனது தாயாரை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டாமென்று கலங்கிய நாமலின் உணர்வும் பொய்யாகிப் போய் விடுமே? அல்லது உடனடியாகக் காணமற் போனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தால்.. அடுத்த கட்ட அரசியல் பிழைப்பு என்னாவது...?

தலைவர் மக்ஸ்வெல் பரணகம ஏன் சிரித்தார்? மறுபடியும் அவர் சொன்ன வேறு விடயங்களைப் பார்ப்போம்.

ஆணைக்குழுவுக்கு வருபவர்கள் பலர் சாத்திரங்களை நம்பித்தான் வருகிறார்கள் ... சாத்திரங்களை நம் பாதீர்கள் இறைவனை நம்புங்கள் என்றார். தலைவர் மக்ஸ்வெல் பரணகம வின் பதவிக் காலம் அடுத்த பெப் ரவரி மாதத்துடன் அவரது காணாமற்போனோர் ஆணைக்குழுவின் பதவிக் காலம் முடி வடைவ தாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(யாவும் சிந்தனை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# இழுத்தடிக்கப்பட்டுவரும் வித்தியா கொலை

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் விசாரணைகள் முழுமையாகப் பூர்த்தி அடையாத நிலையில் சந்தேக நபர்களால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே பொலிஸார் தமது கடமைகளில் ஒழுங்காக இல்லை என்ற தகவல்கள் அடிக்கடி வெளியாகும் நிலையில் கடமைசெய்த பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பொலிஸ் துறைக்கே ஒரு சவாலாகும். கடந்த ஜனவரி 11 ஆம் திகதி வித்தியா கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர்கள் திரும்பவும் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் எங்களைக் கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கொல்வோம் எனக் கூறியுள்ளனர் போலும். தங்களை வேண்டுமென்றே கைது செய்ததாகவும், இனிமேல் அவர் புங்குடுதீவுக்கு வரக்கூடாது எனவும் தம்மைக் கைதுசெய்த பொலிஸாரை இல்லாமல் செய்துவிட்டு மீண்டும் சிறைக்கு வருவோம் என்று ஆத்திரம் மிகுதியால் கூறியுள்ள்னர். கோபி என்ற தமிழ்ப் பொலிஸாரின் மீதே இந்தக் கோபமும் ஆத்திரமும்.

இது குறித்து ஊடகங்கள் சிலவற்றிலும் தகவல் வெளியாகி இருந்தது.

**வித்தியாவுக்கு நேர்ந்த கதி**

கடந்த மே மாதம் பாடசாலைக்குச் சென்றபோது மாணவி வித்தியா மிகவும் மோசமான வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டார். தற்செயலாக நிகழ்ந்த கொலையல்ல எனவும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கலாம் எனவும் கருத்துக்கள் நிலவியதுண்டு. இந்தக் கொலை வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. வழக்குத் தொடர்ந்தும் விசாரணைகள் பிற்போடப்பட்டு இழுத்தடிக்கும் ஒன்றாகவே சென்றுகொண்டிருக்கிறது. எனினும் 90 வீதம் விசாரணைகள் இடம் பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச கூறுகிறார்.

இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகள் அதி உச்ச தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும் எனப் பொதுமக்களால் வலியுறுத்தப்பட்டுவந்தது. மாணவி வித்தியா வன்புணர்வு படுகொலைக்கு உள்ளான தகவல் தெரிந்ததும் புங்குடுதீவு மட்டுமன்றி வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் மட்டுமன்றி நாட்டின் பெரும்பான்மை மக்களும் கூட கொதித்தெழுந்தனர். ஆர்ப்பாட்டங்கள், முழு அடைப்பு என நாடே கொந்தளித்தது. மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளால் கருத்து வேறுபாடுகளுடன் வாழ்ந்துவந்த இனங்கள் ஒற்றுமையாக இன வேறுபாடுகளை மறந்து கொதித்தெழுந்த ஒரு போராட்டமாக இது காணப்பட்டது.

> இந்தக் கொலை வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது. வழக்குத் தொடர்ந்தும் விசாரணைகள் பிற்போடப்பட்டு இழுத்தடிக்கும் ஒன்றாகவே சென்று கொண்டிருக்கிறது.

**கிளர்ந்தெழுந்த மக்கள்**

நீதி விசாரணை வேண்டும். மரண தண்டனை வேண்டும் என்ற கோசங்களையும் தாண்டி கைது செய்யப்பட்டவர்களைத் தங்களிடம் ஒப்படையுங்கள் தாங்களே தண்டனையை நிறைவேற்று வோம் என்று கிளர்ந்தெழுந்த மக்களும் உண்டு. அந்த அளவுக்கு மக்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணிய இந்தக் கொலை வழக்குத் தொடர்ந்தும் தவணை போடப் பட்டு வருவதே சந்தேக நபர்களுக்கும் எரிச்சல் ஊட்டுவதால் அவர்கள் கைது செய்த பொலிஸாரில் சினமுற்றிருக்கலாம். அதன் விளைவு தான் அவர்களது பொலிஸாருக்கான அச்சுறுத்தலாக மாறியுமிருக்கலாம்.

வழக்கு இழுபட்டுச் செல்வதற்கு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டிய விசாரணை அறிக்கைகள், மன்றில் இன்னமும் ஒப்படைக்கப் படாதிருப்பதே காரணமாகும். சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் இது தொடர்பாக கடந்த 11ஆம் திகதி இடம் பெற்ற விசாரணையின் போது மன்றில் தெரிவித்துள்ளார். வழக்குகள் தாமதப்படாதிருக்க சட்டமா அதிபர் திணைக்களம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்வது வழமையான ஒன்றே. கைது செய்யப்படுபவர்கள் எல்லோருமே குற்றவாளிகள் என்பதல்ல – கிடைக்கும் தகவல்களைக் கொண்டு ஒருவரைக் குற்றவாளி என தீர்மானிக்க முடியாது. உரிய ஆதாரங்கள் நீதி விசாரணைகளின் பின்னரே சந்தேக நபர் குற்றவாளியா? சுற்றவாளியா? என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும். இப்படி இருக்க சந்தேகத்தின் பெயரில் கைது செய்து விட்டார்கள் என்பதை தவறான கண்ணோட்டத்துடன் அணுக முயற்சிப்பதும் அதற்காக பழிவாங்க சபதம் எடுப்பதுவும் நீதிக்கு முரணானதே. எந்த ஒரு சந்தேக நபரும் இதைக் கவனத்தில் கொள்வது அவசியம். கைது செய்தார் என்பதற்காக சந்தேக நபர் கைது செய்தவரையே காவு கொள்வேன் எனப் புறப்பட்டால்.....? இதுவே தமிழ் நாட்டுப் பொலிஸாக இருந்தால் என்கவுண்டரில் போட்டுத்தள்ளிவிட்டுப் பேசாமல் போயிருப்பார்கள்.



**ஜனாதிபதியின் உறுதிமொழி**

வித்தியா கொலை வழக்கு ஜனாதிபதி வரை கவனத்தில் கொள்ளப்பட்ட ஒன்று. அவரது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய மைத்திரிபால சிறிசேன இந்த வழக்கை விரைந்து முடிக்கக் கூடியதாக 'ரயல் அட்பார்' எனப்படும் விசேட நீதிமன்றத்தை அமைக்கவுள்ளதாகக் கூறி இருந்தார். வழக்கு இழுபடாது விரைந்து முடிக்க வேண்டும் என்று விரும்பிய அனைவருமே ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்குறித்து நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தனர் எனினும் அப்படி எதுவும் இதுவரை இடம்பெற்றதாக இல்லை.

## நல்லாட்சியில் இலங்கை ஜனாதிபதி

அண்மையில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் வலி. வடக்கில்701 ஏக்கர் காணியை விடுவித்து தமிழர்களின் மனங்களில் இடம் பிடித்தது மட்டுமல்லாது அவரது நேர்மை, திறனையும் உணர்த்தியுள்ளது. மேலும் ஓர் அளவுக்கு அவர் கூறுவதை செயலிலும் காட்டியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் இடம் பெயர் முகாம்களுக்குச் சென்று நேரடியாக அவதானித்து அந்த மக்களுடன் உரையாடிய பொழுது ஆறு மாத காலத்தில் உங்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவேன் எனக் கூறியிருந்தார். அதற்கமைவாக மேற் கூறியவற்றை செயலில் காட்டி நிரூபித்துள்ளார். இது மட்டு மல்லாமல் கடந்த ஒரு வருட அவரது ஆட்சியில் தமிழர்களுக்கு அவர் செய்தது ஏராளம். கடந்த 8ஆம் திகதி தனது ஒரு வருட ஆட்சி முடிவுக் கொண்டாட்டத்தில் கூட இவர் ஏனைய ஜனாதிபதிகள் போல் இனவாதத்தைக் கக்காமல் மாறாக தன்னைக் கொல்ல வந்த முன்னாள் போராளியையே பெரு மனதோடு மன்னித்து விட்டுள்ளார். இது மட்டுமல்லாது தமிழர் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்கியுள்ளார். மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியையும் தனது அரசில் அங்கம் வகிக்கச் செய்து தனது நல்லெண்ணத்தைக் காட்டியது மட்டுமல்லாமல் முன்னைய அரசியலில் இருந்து ஊழல், மோசடிகள் போன்றவற்றில் ஈடுபட்டவர்களைக் கூட பழி வாங்காது நல்லாட்சியே தனது குறிக்கோள் என ஆட்சியைத் தொடர்கின்றார். ஆகவே பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் பட்ட துயரங்களுக்கும் உயிர் உடைமை இழப்புகளுக்கும் இறைவனால் உவந்தளிக்கப்பட்டவர் தான் இந்த மைத்திரிபால சிறிசேன. கடந்த 25 வருடங்களாக வலி.வடக்கு மக்கள் வீடு இழந்து சொத்து சுகம் இழந்து நாதியற்றுநலிவுற்று வாடியிருந்து அவர்கள் விட்ட கண்ணீருக்கு இறைவன்கொடுத்த பரிசு தான் இன்றைய ஜனாதிபதி அவர்கள். இதே நேரம் தமிழர்களுக்கு என்றும் நிறைய செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் காத்துக்கிடக்கின்றன. இன்னும் விடுவிக்கப்படாத ஆறாயிரம் ஏக்கர் காணி அடுத்து தமிழர்களின் உரிமைப் பிரச்சினையான அரசியல் தீர்வு இவைகளையும் படிப்படியாக நிறைவேற்றி அடுத்த 2017ஆம் ஆண்டு தமிழர்களின் தைத் திரு நாளாம் தைப்பொங்கல் தினத்தன்று பலாலி ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் பொங்குவராயின் ஐயா நாமும் ஒரு அகப்பை பிடிப்போம் கூடவே என்பதில் ஐயமில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை. என்று வைக்கப்படும்.

சிவஸ்ரீ இரா[...]
குளக்கட்டு விநாயகர் தே[...]
மடத்தடி வீதி, கொடிகாமம்.

## இளம் பிஞ்சுகளுக்கு உதவுவோம்

அண்மையில் –கேப்பா பிலவில் ஒரு முன்னாள் பெண் போராளியொருவர் கணவரைப் பிரிந்து, கண்பார்வை இழந்து, வறுமை இன்னொரு புறம் வாட்ட இந்த நிலையிலும், தீப்பிடித்து இறந்த செய்தி கேட்டு நிச்சயமாக உருகாதோர் இருக்க மாட்டார். அவரின் வாரிசுகள்,வெறும் இளம் குருத்துக்கள் அவர்களின் எதிர் காலம், கல்வி இவைகளை எண்ணிப் பார்க்கவே கலக்கமாக இருக்கிறது.இருக்கும் இடத்தில் இருந்தால் நடப்பவை என்னவோ? கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு இப்படியொரு பேரிடி நடந்திருந்தால் அந்தக் குஞ்சுகளை அரவணைக்க எம்மவர்கள் இருந்தார்கள். ஆகவே இதைச் சிறு விடயமாகக் கருதாமல் அரசியல்வாதிகளும் சமூக ஆர்வலர்களும் சிரமேற்கொண்டு கவனிக்கப்பட வேண்டும். அந்த இளம் பிஞ்சுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது ஒவ்வொரு மனிதனின் கடமையுமாகும்.

சிவஸ்ரீ இராம .ஸ்ரீதரக்குருக்கள்,
குளக்கட்டு விநாயகர் தேவஸ்தான
பிரதமகுரு, மடத்தடி வீதி,
கொடிகாமம்.

## வெடிகளும் பொங்கல் பானைகளும்

நடந்து முடிந்த பொங்கல் விழாவில் வெடிகள் முக்கிய பங்கை வகித்தன. தென்னிலங்கையைச் சேர்ந்த வெடிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வெடிகளின் விற்பனையால் கொள்ளை இலாபம். எம்மவர்கள் காசைக் கரியாக்க அவர்கள் அதனை சம்பாதித்துக் கொண்டனர். மேலும் என்றுமில்லாத அளவுக்கு அலுமினியத்தால் உருவாக்கப்பட்டபொங்கல் பானைகள் பார்க்கும் இடமெல்லாம் விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்தன. ஆனால் வழக்கமாகப் பானைகளை விற்பனை செய்து வருகின்ற கடைக்காரர்கள் தமக்கு இந்த முறை பொங்கல் வியாபாரம் படுமோசமாக அமைந்து விட்டதாகக் கூறுகின்றனர். சுன்னாகம் சந்தைப் பகுதியில் 16 வருடங்களாக வீட்டு உபயோகப் பொருள்களை விற்பனை செய்கின்ற கடைக்காரர் ஒருவர் தாம் இந்தமுறை 600 பானைகளைக் கொள்வனவு செய்ததாகவும் 50 பானைகளை மட்டுமே விற்க முடிந்ததாகவும் கவலையுடன் தெரிவித்தார். கொள்வனவு செய்த பானைகளுக்குரிய பணத்தை எவ்வாறு கொடுப்பது என்பது பிரச்சினையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முறையற்ற வியாபார நடவடிக்கைகள் தம் போன்றவர்களைப் பெரிதும் பாதித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ந.சகாயராசா, உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தானியங்கி வாகனம் கண்டுபிடிப்பில் அமெ.

வொஷிங்டன், ஜன.19
அமெரிக்க அதிகாரிகள் சுயமாக ஓடும் கார்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக 10 ஆண்டுகள் இடம்பெறவுள்ள ஆராய்ச்சியில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிடத்திட்டமிட்டுள்ளனர் என வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வட அமெரிக்க சர்வதேச வாகனக் கண்காட்சியில் போக்குவரத்துத் துறைச் செயலாளர் அந்தோனி, தானியங்கி வாகனங்கள் மூலம் உயிர்களைக் காப்பதுடன், நேரமும் மிச்சமாவதுடன் எரிபொருள் சிக்கனத்தையும் பேணக் கூடியதாகவிருக்கும் எனத் தெரிவித்தார்.
இன்னும் 6 மாதங்களில், 21ஆம் நூற்றாண்டுக்கான வாகனங்கள் உற்பத்திக்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். தானியங்கி வாகனங்கள் இதற்கான தேர்வாக இருக்கும் என அமெரிக்க அரசின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆனால் வாகன உற்பத்தியில் ஒவ்வொரு அமெரிக்க மாகாணங்களும் வெவ்வேறு சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றன. மேலும் 83 சதவீத விபத்துகள் வாகன ஓட்டிகளின் தவறுகளால் இடம்பெறுகின்றன. சாரதி அற்ற வாகன உற்பத்தியில் அதிக திறனை முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உற்பத்தி மூலம் விபத்துகள் தடுக்கப்படுவதுடன், வாகனத்தைக் கொள்வனவு செய்வது இலாபகரமாக அமையும் என போக்குவரத்துத்துறைச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (த-ரி4)

# புளொரிடாவை தாக்கியது புயல்

***பல வீடுகள் தரைமட்டம்***

அமெரிக்காவின் தென்மேற்கு புளொரிடா மாகாணத்தில் நேற்று முன்தினம் பெரும் புயல் மற்றும் சுழல் காற்று தாக்கியது. இதனால் இருவர் உயிரிழந்ததுடன், பல வீடுகள் தரைமட்டமாகின.
மனாட்டே பகுதியில் வீசிய சுழல் காற்று மணிக்கு 127 கிலோமீற்றர் வேகத்தில் வீசியது. இருவர் உயிரிழந்ததுடன், 5 பேர் காயமடைந்துள்ளனர் என நகரஅதிகாரி தெரிவித்தார். இதனால்மக்களின்இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
300 அடி அகலமான சுழல் காற்று நகரைச் சூறையாடியது என தேசிய வானிலை சேவைகள் மையம்தெரிவித்தது. மேலும் மணிக்கு 132 கிலோமீற்றர் வேகத்தில், 350 அடி அகலமான சுழல் காற்று சரசொடா நகரைத் தாக்கியது. இந்த நகரத்தின் தீயணைப்பு துறையினரும், அவசர நடவடிக்கை மையத்தினரும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட 3 மில்லியன் டொலர் பெறுமதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 17 ஆயிரம் பேருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக புளொரிடாவின் மின்சார சபை தெரிவித்துள்ளது. மேலும் மின்சாரம் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் பல இடங்களில் சூறாவளியும், சுழல் காற்றும் வீசியது. (த-ரி4)




# 150 பேரைக் கொன்

## சிரியாவின் டீர் அல் சோர் நகரில் சே

தமஸ்கு, ஜன.19
ஐ.எஸ். அமைப்பினர் சிரியாவின் டீர் அல்-சோர் நகரில் தமது வன்முறைச் செயற்பாடுகளை அரங்கேற்றியுள்ளனர். படுகொலைகளையும், குண்டு வெடிப்புகளையும் நிகழ்த்திக் குறைந்தது 150 பேரைக் கொலை செய்ததுடன், 400 பேரைக் கடத்தியுள்ளனர். ஒரே நேரத்தில் 400 பேர் கடத்தப்பட்டனர் எனச் சர்வதேச ஊடகம் ஒன்
மிகப் பெரிய கடத்தலா
சிரியாவில் இருக்கும் ம
குழுவின் அறிக்கைய
அரச படையினரும்
விக்கப்பட்டது.
கார்க் குண்டுத் தாக்கு

# இந்தோனேசிய குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்கள் நிலை மோசம்



ஜகார்த்தா, ஜன.19
இந்தோனேசியாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். குண்டுத்தாக்குதலில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்தமையால் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
தாக்குதலை நடத்தியவர்கள் அனைவரும் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பினரால் நடத்தப்பட்டதாகப் பொறுப்பேற்கப்பட்டது. தாக்குதலில் காயமடைந்த 20 பேரில் பலரது நிலைமை கவலைக்குரிய விதத்தில் உள்ளது. இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.
தாக்குதலை நடத்தியவர்கள் டியான் ஜோனி, ஆலி, அகமத் முகசான், அபிப் சுனகிம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். வர்த்தக மையத்தில் முதலில் குண்டுவெடிப்பு ஆரம்பிக்கப்பட்டது. கட்டடத்தில் இருந்து வெளியே ஓடிவந்த மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. போராளிகளில் இருவர் தற்கொலைக் குண்டுதாரிகளாக குண்டுவெடிப்பை நிகழ்த்தினர்.

> "தாக்குதலை நடத்தியவர்கள் அனை வரும் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பினரால் நடத்தப்பட்டதாகப் பொறுப்பேற்கப்பட்டது."

இடம்பெற்ற தாக்குதலில் அரச ஊழியரையும், வெளிநாட்டவரையும் குறிவைத்தே தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட 12 பேர் கைது செய்யப்பட்டனர். குறைந்தது 11 இணையத் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்பன முடக்கப்பட்டன.
தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் இந்தோனேசிய, மலேசிய தயாரிப்புகள் ஆகும். ஆசியாவில் இருந்து நூற்றுக்கணக்கானோர் ஐ.எஸ். இல் இணைந்துள்ளனர் என இந்தோனேசிய அதிகாரி தெரிவித்தார். கடந்த 10 வருட காலங்களில் இடம்பெற்ற தாக்குதலில், இந்த தாக்குதல் மிக மோசமானது என தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

# ஆங்கிலம் தெரிந்தால் மட்டுமே அகதிகளுக்கு இனிப் புகலிடம்

***பிரிட்டன் பிரதமர் அதிரடி அறிவிப்பு***




லண்டன், ஜன.19
பிரிட்டனுக்குப் புகலிடம் கோரி வருபவர்களுக்கு ஆங்கில மொழித்திறன் இருக்க வேண்டும் அல்லது வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றி விடும் வகையில் திட்டங்களை அறிமுகப் படுத்தப் போவதாக பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்தார்.
தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இது பிரிட்டன் நாடு, இங்குள்ள மக்களிடம் எளிய முறையில் பழகவும், வேலைவாய்ப்பினை அமைத்துக்கொள்ளவும் ஆங்கில மொழியை வளர்த்துக் கொள்வது மிக அவசியம்.
ஆங்கில மொழியைப் பேசத்தவறும் புலம்பெயர்ந்தவர்களுக்காக 20 மில்லியன் பவுண்ட் மதிப்பீட்டில் பயற்சி வகுப்புகள் தொடங்க உள்ளன. இந்த பயிற்சி வகுப்புகளில் பங்கேற்ற பிறகும், ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளவில்லை என்றால், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் சூழல் ஏற்படலாம் எனக் கூறியுள்ளார். அதே சமயம், பிரிட்
னுக்கு வரும் இஸ்லாமிய தாயார்க
குறித்தும் பிரதமர் கமெரூன் பே
யுள்ளார்.
பிரிட்டன் நாட்டில் இஸ்லாமியப் பெண்க
எப்படி வாழலாம், என்ன உடை உடு
தலாம், யாரை விரும்பலாம் என்
தனிப்பட்ட உரிமைகளை அவர்கே
தெரிவு செய்துக்கொள்ளலாம். அதே ச
யம் இஸ்லாமியத் தாயார்கள் உள்நா
மக்களிடம் நெருங்கிப் பழகி சமூக ந
லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டு
இஸ்லாமியத் தாயார் மற்றும் அவர
மகன்களுக்கு உள்ள இடைவெளி
குறைத்து விட்டு அவர்களிடம் நெருங்
பழகுவதன் மூலம், இளம் இஸ்லாமி
இளைஞர்கள் தீவிரவாதத்திற்கு தூ
டப்பட மாட்டார்கள் என பிரதமர் க
ரூன் வலியுறுத்தியுள்ளார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ன்றதுடன் 400 பேரை கடத்தியது ஐ.எஸ்

...சோகம்

...ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதுடன், ...தலாக இது விமர்சிக்கப்பட்டுள்ளது. ...தும் மனித உரிமைகள் கண்காணிப்பு ...கையில், 85 பொதுமக்களும், 50 ...நும் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரி...

...ாக்குதல், தற்கொலை படைத் தாக்கு தல் உட்பட பல வெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தி அல்-ஜீரா பகுதியை இந்த அமைப்பு ஆக்கிரமித்துள்ளது. இந்தத் தாக்குதலின் ஆரம்பத்தில் 6 தற்கொலைக் குண்டு தாரிகள் அரச படைகளின் பாதுகாப்பைத் தகர்க்க அனுப்பப்பட்டனர். ஆனால் இந்த முயற்சி தோல்வி அடைந்தது. இதன் பின்னர் பெரும் தாக்குதல்கள் இடம் பெற்றன. ஆனால் உள்ளூர் ஊடகமான சனா, பெண் கள், சிறுவர்கள், முதியோர்கள் உட்பட 300 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளது. டீர் அல்-சோர் நகரம் ஈராக்கிற்கு அண்மையான பகுதி யாகும். இதன் மூலம் ராக்காவிற்கு தொடர்பு ஏற் படுத்த முடியும். சம காலங்களாக ராக்கா பகுதியில் அரசு படைகளுக்கும் போராளிக் குழுவிற்கும் இடையில் பெரும் போர் இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# விண்வெளியில் முதல் தடவையாக மலர்ந்ததுள்ள பூ

வொஷிங்டன், ஜன.19

விண்வெளியில் முதல் தடவையாக பூ பூத்துள்ளது. பூச்சிய புவியீர்ப்பு விசையில் இந்த நிகழ்வு இடம் பெற்றள்ளது. சர்வதேச விண்வெளி மையத்தில்சினியாத்தாவரத்தின் முதல் பூ பூத்துள்ளது என்ற வரலாற்று செய் தியை அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் கெலி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட புகைப்படத்தில் செம்மஞ்சள் வண்ணத்தில் 13 இதழ் களுடன் பூ காணப்படுகிறது. விஞ்ஞா னிகள், புவியீர்ப்பு அற்ற இடத்தில்



தாவரங்கள் எவ்வாறு வளர்கின்றன என்பதை அறியக் கூடிய சந்தர்ப்ப மாக இது அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதற்கு முன் னர் லட்டியூஸ், கோதுமை என்பன விளைவிக்கப்பட்டன.

தாவரம் வளர்வதற்கு மிகவும் கடுமை யான சூழலாக விண்வெளி காணப்படு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சாதா ரண வளர்ச்சிக்காலத்தை விட இங்கு அதிகமான காலத்தை வளர் வதற்காக தாவரம் எடுத்துக் கொள்கின்றது. இதற்கான காலம்கிட்டத்தட்ட 60 - 80 நாள்கள் என குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவை தொடர்பான ஆராய்சிகள் இடம்பெற்று வருகின்றன. (த-ரி4)

...ம
...ம்

...பிரிட்ட ...ார்கள் ...பேசி

...ண்கள் ...உடுத் ...என்ற ...ர்களே ...தே சம ...நாட்டு ...க நல் ...ண்டும். ...அவரது ...ளியை ...ருங்கி ...ாமிய ...தூண் ...கமெ ...-ரி4)

# செல்லப் பிராணிகளுக்கு ஸ்பெயினில் வழிபாடு

மட்ரிட், ஜன.19

ஸ்பெயினில் செல்லப்பிராணிகளுக்கான வழிபாடுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

செல்லப் பிராணிகளின் உரிமையாளர்கள் அவற்றுக்கு வண்ண வண்ண ஆடைகளை அணிவித்து அந்தப் பிராணி களுடன் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். மத்திய மட் ரிட்டில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் செல்லப் பிரார்ணிகளுடன் வாசலில் காத்திருந்தனர். குரு வானவர் அவர்கள் மீது புனித நீரைத் தெளித்து அவர்களை ஆசீர்வதித்தார். இந்தச் சடங்கு செல்லப்பிராணிகளும், அவற்றின் உரிமையாளர்களும் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற நம்பிக்கையில் நடத்தப்படுவதாக அதில் கலந்துகொண்ட வர்கள் தெரிவித்தனர். அத்துடன் அங்கு விற்கப்படும் ரொட்டிகளை, 3 எனும் எண் ணிக்கையில் வாங்கினர். இது சம்பிரதாய முறையாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் ஆசீர்வாதத்தையும், ஆரோக்கியத்தையும் தருவதாக நம்பப்படுகிறது. 19 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த சடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (த-ரி4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த நிலையில் எம் இந்துக் கோயில்கள்

மிருசுவில் தமிழ்தாசன்



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஔவையின் வாக்கு. மனித சமூகமானது ஆலய வழிபாட்டைத் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வருகின்றது. மனத்தை ஒரு வழிப்படுத்தி இறைவனை வணங்குதல் பொருட்டே ஆலயங்கள் அமைக்கப்பட்டன. கோயில் இல்லாத தெய்வமும் தெய்வம் இல்லாத கோயிலும் வெறும் அர்த்தமற்றவைகளாகவே கருதப்படும். கடவுளை மனதில் நிறுத்தி எப்படித்தான் வணங்கி னாலும் ஓர் ஆலயத்துக்குச் சென்று தெய்வ சந்நிதானத்தில் நின்று இறைவனின் திருக்காட் சியைப் பார்த்து மனம் குளிரக் கும்பிடுவதுபோல மனநிறைவு ஏற்படுவதேயில்லை. அதுமட்டுமல்ல ஆலய தரிசனம் மூலமாக எங்களுக்கு ஒருவித சாந்தியும் மன அமைதியும் உண்டாகின்ற தென்பதையும்எவரும்மறுப்பதற்கில்லை. இத்தனை நன்மைகளும் ஒருங்கே கிடைப்பதால்தான், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என அர்த்தபுஷ்டியாக கூறி யி ருக்கின்றார் எங்கள் ஔவைப் பிராட்டியார். எனவே ஆலய வழிபாடென் பது மானிட சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக் கின்றது என்பது முற்று முழுக்க உண்மையானதே!

இது உண்மையென்பது ஒரு புறமிருக்கட்டும். அதற்காகத் திரும்பும் திக்கெல்லாம் கோயில்களைக் கட்டி வைத்திருப்பதும் ஓர் ஆரோக்கியமான செயற்பாடென்று ஒப்புக்கொள்ள முடியாது. உதாரணமாக ஒரு கிராமத்தில் பழைமை வாய்ந்த புராதன பெருமைகளைக் கொண்ட முருகன் கோயில் ஒன்று இருக்கின்றபோதும் அதனை மேலும் நன்கு பராமரித்துப் பூசை வழிபாடுகளைச் செய்து முருகனிடம் அருள் கடாட்சத்தைப் பெறுவதைவிட்டு, அதற்குப் பக்கத்திலே மற்றுமொரு முருகன் கோயிலை அமைத்துக் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) என ஏராளமான பொருள் செலவில் விழா நடத்திப் பெருமைப்பட்டுக்கொள்பவர்கள் எம் மத்தியில் அனேகமானோர் இருக்கின்றார்கள். போதாதற்கு அந்தக் கோயிலுக்குப் புதிய முருகன் கோயில் என்று நாமமும் சூட்டி மகிழ்ந்து கொள்வர். காலம் காலமாக அருளாட்சி புரியும் முருகன் கோயிலை உதாசீனப்படுத்திவிட்டுப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய முருகனிடமே பக்தி கொள்பவர்கள் எம்மத்தியில் இல்லாமலில்லை. ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் அதுவும் சுமார் நூறுயார் தூர இடைவெளியில் இன்னுமொரு கோயில்! மீண்டும் முருகன் கோயில் கட்டுவதற்கு அவசியம் தான் என்ன! இத்துடன் திருப்திப்படுகின்றார்களா! இல்லவேயில்லை. இன்னும் சற்றுத் தூரத்துக்குள் பிள்ளையார் கோயில் அதனை அண்டியது போன்று ஓர் அம்மன். பக்கத்தில் சிவன், நாச்சிமார், வீரபத்திரர், வைரவர் என்று அனைத்துக் கோயில்களும் ஒன்றுடன் ஒன்று சேர அமைக்கப்பட்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். ஒரு சிறிய கிராமத்துக்கு இத்தனை கோயில்கள் தேவைதானா! ஓர் ஊருக்கு இரண்டொரு கோயில்கள் இருந்தால் போதும். அவைகளைச் சீருடனும்சிறப்புடனும் பராமரிப்புதுடன் அவ்வப்போது பூசைகள், அபிஷேகங்கள், விழாக்கள் அனைத்தையும் ஊர் மக்கள் ஒன்றிணைந்து மிகச் சிறப்பாக நிறை வேற்றலாம். பார்க்கும் இடமெல்லாம் கோயில்கள் என்றால் ஊரில் வாழும் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்ட மக்களால் எல்லா ஆலயங்களையும் திருப்தியாகவோ சிறப்பாகவோ பராமரிக்க முடியாது. இரண்டு மூன்று பிள்ளைகளை ஆசையாய் அருமையாகப் பெற்று வளர்க்கும் பெற்றோருக்கும் பத்துப் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பெற்றோருக்குமிடையில் நிறையவே வேறுபாட்டைக் காணமுடியும். சிறிய குடும்பத்தைக்கொண்ட பெற்றோர் தமது குடும்பத்தை மிக இலகுவாகப் பராமரிக்க முடியும். (தொடரும்)



# உங்களுக்கு 2016 எப்படி?

## கடகம்

உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் கடக ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். கடகராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.

**ஜூன்**

தன ஸ்தானமான 2-ல் குருவும், லாப ஸ்தானமான 11-ல் சூரியன் சுக்கிரனும் சஞ்சாரம் செய்வதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் உண்டாகும். சுப காரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாகச் செயல்பட முடியும். நெருங்கியவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை நிலவும். தொழில், வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் திறம்படச் செயல்பட முடியும். விநாயகப்பெருமானை வழிபடுவது உத்தமம்.

**ஜூலை**

விரய ஸ்தானமான 12-ல் சூரியன், சுக்கிரன், புதன் சஞ்சாரம்செய்வது வீண் செலவுகளை ஏற்படுத்தும் என்றாலும் 2-ல் குரு சஞ்சரிப்பதால் பணவரவுகள் சிறப்பாக இருக்கும். உங்களுக்குள்ள பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கப்பெறும். எடுக்கும் காரியங்களில் எதிர்நீச்சல் போட்டாவது வெற்றியினைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டால் எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றல் உண்டாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களும் எந்த எதிர்ப்புகளையும் சமாளித்து ஏற்றம் பெறுவார்கள். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். துர்க்கையம்மனை வழிபாடுசெய்வது உத்தமம்.

**ஓகஸ்ட்**

மாதக்கோளான சூரியன் சாதகமின்றிச் சஞ்சரித்தாலும், புதன் 2-ல் சஞ்சரிப்பதால் சுபகாரியம் கைகூடும். கடந்த கால பிரச்சினைகள் படிப்படியாக விலகி முன்னேற்றம் ஏற்படும். கடன்கள் சற்றுக் குறையும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புகள் தோன்றிமறையும். 2-ஆம்தேதிமுதல்குரு 3-ல்சஞ்சரிக்கவுள்ளதால் குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஓரளவுக்கு லாபம் அமையும். பெரிய முதலீடுகளில் செய்ய நினைக்கும் காரியங்களைத் தள்ளிவைப்பதும் கூட்டாளிகளிடம் கவனமுடன் இருப்பதும் நல்லது.

**செப்ரெம்பர்**

இம்மாதம் 9-ஆம் தேதி முதல் ருண ரோக ஸ்தானமான 6-ல் செவ்வாய் சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் 3-ல் சூரியன் சஞ்சாரம் செய்யவிருப்பதும் உங்கள் பலத்தை அதிகரிக்கும் அமைப்பாகும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். உடல் ஆரோக்கியத்தில் கவ்னம் செலுத்துவதால் மருத்துவச் செலவுகளை குறைத்துக் கொள்ள முடியும். நெருங்கியவர்களால் ஓரளவுக்கு சாதகப் பலனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி நிலவினாலும் நஷ்டம் ஏற்படாமல் சமாளிக்க முடியும்.

**ஒக்ரோபர்**

முயற்சி ஸ்தானமான 3-ல் சூரியன், 6-ல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்களுக்குள்ள மறைமுக எதிர்ப்புகள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் கொடுக்கல்- வாங்கல்களில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைக ளுக்குப் பின் அனுகூலம் உண்டாகும். புதிய வாய்ப் புகள் தாமதமாகும். குலதெய்வ வழிபாடு மேற் கொள்ளவும்.

**நவம்பர்**

சுக ஸ்தானமான 4-ல் சூரியனும் சமசப்தம ஸ்தானமான 7-ல் செவ்வாயும் சஞ்சாரம் செய்வதால் தேவையற்ற அலைச்சல், டென்ஷன்கள் உண்டாகும். எதிலும் நீங்கள் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்துச் செயல்படுவதே நல்லது. பணவரவுகளில் நெருக்கடிகள் இருக்கும். புத்திர வழியில் நிம்மதிக் குறைவுகள் உண்டாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு தேக்க நிலை ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். மன நிம்மதி குறையும். தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.

**டிசெம்பர்**

குடும்ப ஸ்தானமான 2-ல் ராகு 7-ல் செவ்வாய் சஞ்சரிப்பது சாதகமற்ற அமைப்பு என்றாலும் மாதப் பிற்பாதியில் 6-ல் சூரியன் சஞ்சாரம் செய்யவிருப்பது ஓரளவுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புகள் தோன்றிமறையும். முன்கோபத்தையும் பேச்சையும் குறைத்துக்கொண்டு நிதானமாக செயல்பட்டால் ஓரளவ்க்கு நற்பலனைப் பெறமுடியும். குடும்பத்தில் எதிர்பாராத வீண் விரயங்க்ள் ஏற்படும். வீண் பழிகளை சுமக்கக்கூடிய காலமென்பதால் எதிலும் கவனம் தேவை. முருகப்பெருமானை வழிபடுவது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# புரியாத வயதில் சரியான புலமைக்குப் பரீட்சை ஒரு பரிகாரம் ஆகுமா?

உலகத்திலே சாதனை படைத்தவர்கள் என்று போற்றப்படுபவர்களின்பின்னணியிலே பரீட்சைகளோ, பதவிகளோ, செல்வச் செழிப்புக்களோ இருந்ததில்லை. மாறாகச்சாதனையாளர்களின் குடும்பப் பின்னணியானது மிகவும் வறுமையானதாக அல்லது மிகவும் எளிமையானதாக, அல்லது நோதல் பட்டவர்களாக, அல்லது அடிமைப்படுத்தப்பட்டவர்களாக, அல்லது அலட்சியப் படுத்தப்பட்டவர்களாக, அல்லது நெருக்கீடுகளைச் சுமந்தவர்களாக, இன்னும் சொல்லப்போனால் வேண்டப்படாதவர்களாக இருந்திருக்கின்றார்கள். இலங்கையிலே கல்வியைப் பொறுத்தவரையில் இனி வருங்காலம் சாதனையுள்ள சந்ததியொன்றைப் பிரசவிக்க வேண்டுமாயின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையையும், அதற்கேற்ற வயதையும், அந்தப் பரீட்சை தந்த வலியையும், அந்தப் பரீட்சையால் எற்பட்ட தோல்விகளையும், கண்டிப்பாக மாற்றியே தீர வேண்டும். மாற்றாவிட்டால் அந்தப்பரீட்சையால் ஏற்பட்ட வலிகளை இந்த நாட்டு மக்கள் அனைவருமே சுமக்க வேண்டும். காரணம், மன அழுத்தங்களும், உள நெருக்கீடுகளும், தோல்விகளும், இயலாமையும், முன்னிலைப்படுத்தாமையும், பொறுப்பளிக்காமையும், அடக்குமுறையும், அடிமைத்தனமும் பிள்ளைகளில் ஊடுருவும் போது அல்லது பரவும் போது அல்லது தொனிக்கும் போது அல்லது விளங்கும்போது இளமைப்பருவம் எடுக்கும் தீர்மானங்கள் ஆரோக்கியமானதாக இருக்காது என்பதுவே அதுவாகும். இவ்வுலகில் ஏற்பட்ட, ஏற்படுகிற, ஏற் படப் போகும், அத்தனை பிரளயங்களுக்கும் மூல காரணம் மனிதன். மண்ணைப்புண்படுத்தியமையே ஆகும். அதேபோலகுழந்தைகளைக் கருவிலிருந்து பாடசாலைவரை நாம் படுத்திய அகோரமான வாட்டுதல்களே, அவர் களைத் திசை மாறிப் போவதற்கும் நெருக்கீடு செய்வதற்கும் அடிப்படையாக அமைந்து விட்டது.

### சுமையாக மாறிவரும் கல்வி

வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு, வீதிக்குவீதி எல்லா நாடுகளிலும் கல்வி ஒரு சுமையாக மாறி வருகிறது. கல்வி ஒரு விருப்பமான சாதனமாக மாற்றியமைக்கப்படவில்லை. மாறாகத் திணிக்கப்படுகிறது. பிள்ளை பிறக்க முதலே எந்தப் பள்ளிக் கூடம் என்று தாயும் தந்தையும் தீர்மானித்து விடுவார்கள். பிறந்த ஒரு வயதிலேயே ஆனா என்று பாடம் செல்லிக் கொடுக்கத் தொடங்கியே விடுவார்கள்.

இரண்டாவது வயது முடிவடைய முன்னரே குழந்தைகளை முன்பள்ளிக் காப்ப கத்தில் 8மணிக்கு முன்பதாகவே, சின்னத் தவ்வல் என்றும் பாராமல், அழ அழக் கொண்டுபோய் விட்டுவிட்டு, தலை தெறிக்க அப்பாவும் அம்மாவும் வீதியில் சவாரி செய்து, வேலைக்கு ஓடிப்போய் ஒப்பம் வைக்கும்போது சிவப்புக்கோடு அடிக்கப்பட்டுவிடும் வீடும். அப்படி, வீதியும் அப்படி வேலையும் அப்படி, பிள்ளையும் அப்படி, அந்தாளும் சுடுதண்ணி, சாப்பாடும் அப்பிடி இப்படி. நுளம்புகளும் ஒரே தொல்லை. முகடெல்லாம் ஒழுக்கு. சாப்பாடு என்ற பெயர். வீட்டு வேலை கடை வேலை. காயாத உடுப்புகள். கொடியெல்லாம் காகங்களின் கும்மாளம். பிள்ளைக்கு ஐந்தாமாண்டு புலமைப்பரீட்சையை எண்ணி பாடங்களைத் தீர்த்தினால், பிள்ளை எப்படிப் படிக்கும்? சரி அப்படித்தான் படித்தாலும் என்னவாக வர நினைக்கும்? நாலு வயதில் படுகின்ற பாட்டைப் பார்த்தால், அது சொல்லுந் தரம் அன்று. பிள்ளையைக் கொண்டுபோய் சும்மா சொல்லக் கூடாது. ரியூசன் வகுப்பில் இருத்தினால் சரி போதும் என்று எண்ணும் பெற்றோர்கள் இருக்கும் வரை நாடும் வீடும் குழப்பத்திலேயே இருக்கும். இந்தக் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் மூல காரணம் ஒன்பது, பத்து வயதுகளில் ஏதுமறியாப் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி கல்வியைத் திணிப்பதே ஆகும்.

199 புள்ளிகள் எடுப் பதற்காக அதிகாலை 5மணியில் இருந்து இரவு 10 மணிவரைபிள்ளைகளை வாட்டி வதக்கி, கசக்கிப் பழிந்து தற்கொலை செய்யுமளவுக்குப் புலமைப்பரீட்சையை ஐந்தாம் ஆண்டில் நடத்துவது என்பது முற்றாக நிறுத்தப்பட்டு, எட்டாம் ஆண்டில் அதாவது பதின் மூன்று வயதில் நடத்துவதே மிக மிக பொருத்தமாக அமையும்.

### பொருத்தமா?

தன்னையும், உலகையும், பெற்றோரையும், நவீனத்தையும், கல்விப் பெறுமானத்தையும் உணரும் வயது பத்திலும் பார்க்க பதின்மூன்று மிகவும் பொருத்தமானது. எண்ணையும் எழுத்தையும் விளங்கி தன்னை துலங்கச் செய்யும் வயது பதின்மூன்று ஆகும். விளங்காத ஒன்றை, புரியாத ஒன்றைச் சமிக்காத வண்ணம் பிள்ளைகளுக்குச் சரிக்கட்டி பெரும்தோல்விகளையும், ஏமாற்றங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் மன உளைச்சல்களையும் பற்பல தாக்குதல்களையும் பொருத்தமற்ற தண்டனைகளையும் வேண்டாத பயணங்களையும் விரும்பத்தகாத உறவுகளையும் வர்த்தகமான பயிற்சிப் பரீட்சைகளையும் வலுவிழக்க வைத்திடும் உணவுப் பண்டங்களையும் வயிறார உண்ண விடாத அவசர வகுப்புக்களையும் பிஞ்சு வயதில் பலாத்காரமாகத் திணிப்பதற்கு எமக்கும் உங்களுக்கும் எப்படித்தான் மனம் வந்தது? ஐம்பது கிலோ சிமெந்துப் பைக்கற்றை ஐந்தாம் ஆண்டுப்பிள்ளையைத் தூக்க வைத்தால் பிள்ளை நசிந்து செத்து விடுவதுபோல, போதும் போதும் என்று படிப்பு, ஒரு பலாத்காரமாகத் திணிக்கப்படுகிறது. இதைத் தட்டிக் கேட்கவோ தலை நிமிர்ந்து கோட்கவே ஒருவராலும் முடியாமல் இருக்கிறது. இஃது ஒரு மனிதாபிமான மனித உரிமைப் பிரச்சினை. உளவியல் வல்லுநர்கள் ஒன்றாக, ஏகமனதாக ஒரு பிரேரணையை முன் வைத்தால் அரசு செவிசாய்த்தே தீரும். சமய அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்த இப் பரீட்சை இந்த வயதுக்குப் பொருத்தமில்லை என்று உரத்துக் கூறலாம் அல்லவா? கூறக் கூடாது என்று யாருமே தடுக்க மாட்டார்கள். ஆதலால் நாம் யாவரும் சேர்ந்து ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையை எட்டாம் ஆண்டில் நடத்துவதற்கு அரசைக் கோருவதற்கு ஆவன புரிந்திட வேண்டும். இதுவும் ஒரு தர்ம கைங்காரியமாகும்.

> கிட்டத்தட்ட ஒருலட்சம் மாணவர்களின் உளத் தாக்கம் வருடம் தோறும் சீர் செய்யப்பட வேண்டும். இது கவனிக்கப்படாத பட்சத்தில் எம் நாடு எந்த விதத்திலும் மீட்சி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை மீட்சிக்கு ஒரேயொரு வழி எட்டாம் ஆண்டில் அப்புலமைப் பரீட் சையை நடத்தி பிள்ளைகளுக்கு வாழ் வளிப்பதேயாகும்.

பிள்ளைகளுக்காக நாம் தானே போராட வேண்டும். நாம் தானே கதைக்க வேண்டும். அவர்களின் வலியை நாமாக உணர்ந்து, அவர்களின் உயர்வுகளுக்கு நாம் குரல் கொடுப்பது காலதேவனின் கட்டளையாகும்.

### உதயன்

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி உதயனில் ஆசிரியத் தலையங்கம் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரீட்சை பல தரப்புக்களின் கருத்துத் தேவை என்ற தரப்பிலே இறுதி முடிவை நாடளாவிய முறையில் கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர் அமைப்புக்கள் மற்றும் சிவில் சமுகத்தவர்கள் புத்திஜீவிகள் அனைவரினதும் கருத்துக்களை அறியமுற்படுத்துவது அவசியம் என விதந்துரைக்கப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. கல்விமான்கள் தொடக்கம் பாமர மக்கள் வரை இப் புலமைப் பரீட்சையை நிறுத்தி எட்டாம் ஆண்டுக்குக் கொண்டு செல்வது தொடர்பாக ஆதரவான கருத்தாடல்களை பேட்டி மூலமாகத்திரட்டிப் பிரசுரிப்பதற்கு ஆவன செய்வது உதயனுக்கு வாழ்வளிக்கும் என்பதில் ஐயமில்லை. உதயன் நிச்சயம் செய்வான் மற்றும் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமும் இது பற்றிச் சுதந்திரமாகப் பேட்டியெடுப்பது. பிள் ளைகளுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றக் கொடுக்கும்.

### 2015

இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் எழுபது(70) புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற மாணவர்கள்2,54,690 (இரண்டுலட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து அறுநூற்று தொண்ணூறு) ஆகும். எழுபது புள்ளிகளுக்கும் கீழ் எடுத்தவர்கள் நிலைபற்றி யாம்கருணைகொள்ளுதல் மிக மிக அவசியமானதாகும். கிட்டத்தட்ட ஒருலட்சம் மாணவர்களின் உளத் தாக்கம் வருடம் தோறும் சீர் செய்யப்பட வேண்டும். இஃது கவனிக்கப்படாத பட்சத்தில் எம் நாடு எந்த விதத்திலும் மீட்சி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. மீட்சிக்கு ஒரேயொரு வழி எட்டாம் ஆண்டில் அப்புலமைப்பரீட்சையை நடத்தி பிள்ளைகளுக்கு வாழ்வளிப்பதேயாகும். கிடைக்குமா வாழ்வு?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## வரலாற்றில் இன்றைய தினம்

1607 – பிலிப்பைன்ஸின் மிகப் பழைமையான சென் அகஸ்ரீன் தேவாலயம் மணிலாவில் அதிகாரபூர்வமாகப் பூர்த்தியாக்கப்பட்டது.
1903 – ரூர் டி பிரான்ஸ் – சைக்கிள் ஓட்டப் போட்டி அறிவிக்கப்பட்டது.
1927 – சீனாவுக்குப் படைகளை அனுப்ப பிரிட்டன் அரசு தீர்மானம்.
1942 – ஜப்பானிய துருப்புக்கள் பர்மாவினுள் நுழைந்தன.
1949 – கியூபா, இஸ்ரேலை அங்கீகரித்தது.
1950 – கனடாவின் அவ்றோ கனடா. இராணுவ விமானம் கன்னிப் பறப்பு.
1970 – குருமார் திருமணம் செய்து கொள்வதை தாம் ஆதரிப்பதாக ஒல்லாந்து ஆயர் தெரிவிப்பு.
1997 – உலகின் மிகப்பெரிய மக்கள் ஒன்று கூடலான இந்து கும்பமேளா வில் 15 மில்லியன் மக்கள் ஒன்று கூடிச் சாதனை.
1981 – 52 அமெரிக்க பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான அமெரிக்கா – ஈரான் ஒப்பந்தம் கைச்சாத்து.
1986 – இஸ்ரேலை ஸ்பெயின் அங்கீகரித்தது.
1994 – சூரியகந்தவைத் தொடர்ந்து மற்றும் இரண்டு புதை குழிகள் செவனகல முகாம் மற்றும் தெந்தக்கல பகுதிகளில் புதிதாகக் கண்டுபிடிப்பு.
1994 – ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை நேற்று ஆரம்பம். அரச தரப்பு காட்சிகள் 1114 பேர்: 10 ஆயிரம் பக்க ஆவணம்.
1994 – பலாலியிலிருந்து ஏவப்பட்ட எறிகணை வீச்சில் மயிலணியில் 6 பேர் காயம்.
1995 – பாப்பரசர் வருகையையொட்டி கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு.
1995 –நிரந்த சமாதானமே யாழ். மக்களின் அபிலாசை என கொழும்பில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவிப்பு.
1995 – சிட்னியில் பாப்பரசரின் 11 நாள் பயணத்தின் 3ஆவது கட்டத்தில் 2 லட்சம் மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.
1995 – கடற்கொந்தளிப்பால் காணாமற் போன மீனவர் 8பேர் கடற் புலிகளால் மீட்கப்பட்டனர்.
2004 – இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் யாழ்.ஆஸ்பத்திரியில் செயற்படத் தொடங்கியது.
2004 – காணாமற் போனோர் குறித்த வழக்கில் பதில் மனுக்கள் சமர்ப்பிக்க அரசு தரப்புக்கு அவகாசம்.
2004 – 25 வருட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி மனித உரிமைக்கும் அபிவிருத்திகுமான நிலையம் வடக்கு – கிழக்கு மக்களிடையே கையெழுத்து வேட்டை.
2008 – அதிகாரப் பகிர்வு யோசனையை நிறைவேற்ற அரசு திட சங்கற்பம் என ஜனாதிபதி பி.ரி.ஜி.க்குத் தெரிவிப்பு.
2008 – 600 விக்கெட்டுக்களை வீழ்திய முதல் இந்திய வீரர் ஆனார் கும்ளே.
2008 – வன்னி மீதான போர் நடவடிக்கை எக்காரணம் கொண்டு கைவிடப்படாது என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு.
2009 – காஸாவிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ் 3 வாரத் தாக்குதல் ஞாயிறன்று நிறுத்தம்.
2009 – எம்.ரி.வி. மீதான தாக்குதலைத் திசை திருப்ப முயற்சியென பொலிஸார் மீது நீதிமன்றம் காட்டம்.
2013 – சிங்களவருக்குச் சமமாக தமிழர்களுக்கு அதிகாரம் வேண்டும் என சம்பந்தர் தமது இல்லத்தில் வைத்துத் தெரிவித்தார்.
2013 – மொஹான் பீரிஸால் நீதிமன்றில் நியாயம் பெறும் கதவுகள் அடைக்கப்பட்டுவிடுமெனத் தெரிவிக்கின்றது காணாமற் போனோருக்காகக் குரல் கொடுக்கும் அமைப்பு.
2013 – பாதுகாப்பை உறுதிப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை வலியுறுத்துவேண்டுமென மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கோரிக்கை.


## பலா

பலாப்பழம் பாருங்க
பக்கம் வந்து பாருங்க
சொர சொரப்பாய் இருக்கும்க
சுளையும் உள்ளே உண்டுங்க!

தேன் போலே இனிக்குமே
தித்திப்பாய் இருக்குமே
திரண்டு நீங்க வாருங்க
தின்று பார்த்துச் சொல்லுங்க!



## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## காளமேகப் புலவரின் அறிவாற்றல்

காளமேகம் சிறந்த கவிஞர். காளியின் அருளினால் கவி பாடும் ஆற்றல் பெற்றவர். அவர் ஒரே ஊரில் தங்குவதில்லை. கால்நடையாக ஒவ்வொரு ஊராகச் செல்வார்.

அப்படிக் கால்நடையாகவே ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். ஸ்ரீரங்கத்தில் அவருக்கு உணவளிக்க எவரும் முன்வரவில்லை. பசிக் களைப்பினால் ஒரு மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது அந்த வழியாக ஒரு பெண் தலையில் தயிர்க் கூடையுடன் தயிர்! தயிர் என்று சத்தமிட்டவாறு வந்துகொண்டிருந்தாள்.

காளமேகம் தயிர்க் காரியை அழைத்து, 'தாயே, நான் கவி காளமேகம். எனக்குப் பசியாக இருக்கிறது. பணமும் கையில் இல்லை. பசியாறுவதற்காக கொஞ்சம் தயிர் கொடுத்தால் உனக்குப் புண்ணியம் கிடைக்கும்' – என்றார். 'காசில்லாமல் தயிர் கேட்டால் எப்படி? சரி, பசி என்கிறாய், தயிர் தருகிறேன். அதற்குக் காசுக்குப் பதிலாக என்மீது ஒரு கவி பாடுகிறாயா?' என்றாள்.

'பசியைப் போக்கத்தானே நான் கவிபாடுகிறேன். உனக்கும் ஒரு கவிபாடி விடுகிறேன். ஏற்கனவே ஒரு கவிபாடப் போய்த்தான் இப்போது பசியால் துடிக்கிறேன்" என்றார் கவி காளமேகம்.

"கவி பாடியதால் பசி வந்ததா? அது என்ன?" என்று கேட்டவாறு தயிரைக் கிண்ணத்தில் ஊற்றிக்கொடுத்தாள் தயிர்க்காரி.

தயிரைக்குடித்தவாறு காளமேகம் நடந்த கதையைக் கூறினார்.

"இங்கு நான் வந்து சேர்ந்தபோது பெருமாள் கருட வாகனத்தில் உலா வந்து கொண்டிருந்தார். அதைக் கண்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. நான் 'அருகே நின்றவர்களிடம் "என்ன இது? இப்படி ஆகிவிட்டது? பார்ப்பானைப் பார்ப்பான் சுமக்கப் பெருமாளைப் பருந்து தூக்கிப் போகிறதே" என்றேன். அதைக் கேட்டவர்கள் என்மீது கோபம்கொண்டு எனக்கு எவரும் உணவளிக்கக்கூடாது எனத் தடை விதித்து விட்டனர்" என்றார் கவி காளமேகம். இதைக் கேட்டுவிட்டு 'சரி! போகட்டும் தயிரைக் குடித்தாகி விட்டதல்லவா? என்மீது ஒரு கவிபாடுங்கள் எனக்கு நேரமாகிறது என்றாள் தயிர்க்காரி.

"உன்மீது பாடட்டுமா? நீகொடுத்த தயிர் மீது பாடட்டுமா ? என்றார் கவிகாளமேகம்.

'ஏதோ ஒன்றைப்பாடுங்கள்" என்றாள் தயிர்க்காரி.

'சரி உன் தயிர் மீது பாடுகிறேன்"என்று காளமேகம் கவி பாடினார்.

ககனத்தில் இருக்கும் போது கார் என்று பேர்! நீங்கி நிலத்தினில் வந்ததால் நீர் என்று பேர்! குண்டுச் சட்டிக் கோமகளே! உன் கூடையில் வந்ததால் மோர் என்ற பெயர் என்று காளமேகம் பாடி முடித்ததும் தயிர்க்காரிக்கு கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது."பசிக்குத் தயிர்கொடுத்தால் பழிக்கவா செய்கிறாய்? நான் யார் தெரியுமா? என்றபடி காளியாகக் காட்சி அளித்தாள்.

அப்போது காளமேகம், 'நான் பாடிய கவி கடியது தான் விளக்கம் புரிந்துகொள்ளாமல் நீ கோபம் கொள்ளலாமா? [illegible]

"ககனம் என்றால் வானம். கார் என்றால் மேகம். வானத்தில் நீ மேகத்தைப் போன்றவள். நிலம் என்றால் பூமி நீர் என்றால் தண்ணீர். பூமியிலுள்ளவர்களுக்குத் தாகத்தைத் தணிக்கும் தண்ணீர் போன்றவள்.

குண்டிச் சட்டி என்றால் உலகம். கோமகளே என்றால் அன்னை பராசத்தியே என்று பொருள். உன் கூடையில் வந்ததால் மோர் என்ற பேர்.

வானத்தில்மேகமாக இருந்து அருள் மழை பொழிபவளே! பூமியில் தாகத்தைத் தீர்க்கும் நீராக அமைந்தவளே! உலகத்தின் தலைவியே நீ தயிர்க்காரி வடிவில் காட்சி தரும் போது, உன் கூடையில் இருந்தால் மோராக இருக்குமா? அது அமிர்தமாகவல்லவா இருக்கும்? என்று உன் பெருமைகளைத் தானே புகழ்ந்து பாடினேன்" என்று கவி விளக்கம் கூறியதைக் கேட்டதும், காளி ஆனந்த மிகுதியால் காளமேகத்துக்கு ஆசி வழங்கினாள்.

அளவில்லாத் துன்பத்தையும் அறிவாற்றலால் வெல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறுவார்களா?

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக ஐ.தே.க, மற்றும் சு.க இணைந்த வலுவான கூட்டாட்சி அரசொன்று அமையப் பெற்று தேவையான பலத்தை அது கொண்டிருக்கின்றபோதிலும் கடும்போக்காளர்களின் எதிர்ப்புகள், அவர்கள் மக்களைத் தூண்டிவிடும் போக்குகள் காரணமாக ஒருவித அச்ச உணர்வுடன் இந்த அரசு செயற்படுவதாகவே பலரும் கருதுகின்றனர்.

நாட்டில் இனவாத, மதவாதச் சிந்தனைகள் தொடர்ந்தும் அரங்கேறி வருகின்றன. இனங்களுக்கிடையே புரிந்துணர்வையோ ஐக்கியத்தையோ ஏற்படுத்த முடியாத நிலைமைகளே தொடர்கின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக சமீபகாலத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சிங்ஹலே நடவடிக்கையைக் குறிப்பிடலாம்.

நல்லாட்சி என்று சொன்னாலும் கொள்கைகள், திட்டங்களைச் சீரான நிலையில் முன்னெடுக்க முடியாத ஒருவித தளம்பல் நிலையில் அரசு சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அண்மைய வரவு-செலவுத் திட்டத்தில் கூட சில புதிய நடைமுறைகளை அறிவித்துவிட்டு பின்னர் எதிர்ப்புகளை யடுத்து அரசு அவற்றை திரும்பப் பெற்றுக்கொண்டமை இந்தத் தளம்பல் நிலையைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

தமிழர் விடயங்களைப் பொறுத்தவரையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் மற்றும் உயர் பாதுகாப்பு வலய காணிகள் விடுவிப்பு போன்றவற்றில்கூட ஒரு நிலையான தீர்மானத்தை எடுக்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருந்ததை காணமுடிந்தது. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்த நல்லாட்சியில் தீர்வு கிட்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர். இந்த ஆட்சியில் விடிவு கிட்டாது போனால் அது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கிட்டாது என்றவகையிலேயே அவர்கள் தமது கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. தைப் பிறப்புகள் பல தடவைகள் வந்து போயின ஆயினும் அவை தமிழ் மக்களுக்கு விடிவைத் தரவில்லை.

இம்முறை நல்லாட்சி அரசில் தை பிறந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக தேசிய தைப்பொங்கல் திருநாள் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை போரின் காரணமாக முதலாவது இடப்பெயர்வு என்பது பலாலியில் இருந்தே ஆரம்பமாகியது. பலாலியை உள்ளடக்கிய வலி வடக்கில் ஏற்பட்ட இடப்பெயர்வே தமிழ் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட முதலாவது பெரும் இடப்பெயர்வாகும். பலாலியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து சுமார் முப்பது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அந்தப் பிரதேசத்தில் தைப்பொங்கல் திருநாளை தேசிய தைப்பொங்கல் விழாவாகக் கொண்டாடுவது ஒரு வித்தியாசமான அணுகுமுறை எனலாம்.

இவை ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில், வடக்கின் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆகியோர் தை பிறக்கின்ற வேளையில் ஒன்றாகக் கூடிநிற்பதும் நல்லதோர் அறிகுறியாகும்.

எனினும், இங்கு பிரதமர் முன்வைத்துள்ள கருத்துகளைச் சற்று பார்ப்போமானால், "காணாமற் செய்யப்பட்டோரில் பெருமளவானோர் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதவேண்டியுள்ளது என்பதை மிகவும் கவலையுடன் கூறுகிறேன். வடக்கிலிருந்து இராணுவத்தினர் படிப்படியாகக் குறைக்கப்படுவார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் என்பது காலாவதியான சட்டமாகும். அதனை அகற்ற எதிர்பார்த்துள்ளதுடன் சர்வதேச ரீதியில் தற்போது பயங்கரவாத பிரச்சினை இருப்பதன் காரணமாக தேவைப்பட்டால் அதற்கு தேவையான சட்டங்களைப் பொதுநலவாய நாடுகளின் சட்டத்துக்கு அமைவாக எதிர்காலத்தில் நாம் நிறை வேற்றிக்கொள்ள முடியும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கருத்துகள் சற்று உற்றுநோக்கவேண்டிய கருத்துகளாக இருக்கின்றன. நீண்ட காலமாகத் தமது உறவுகள் உயிருடன் இருப்பதாக எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் பலரின் நம்பிக்கை இங்கே கேள்விக்குரியதாக மாறி இடிவிழுந்த நிலைக்கு இட்டு சென்றுள்ளது.




கைது செய்யப்பட்டுக் காணாமற் செய்யப்பட்டோர், சரணடைந்து காணமற் செய்யப்பட்டோர் என்ற வகைப்படுத்தலின் கீழ், இதற்கான தீர்க்கமான முடிவை தேடித் தர வேண்டிய பொறுப்பும் ஆட்சியாளர்களுடையதாக இருக் கிறது. இதற்கான பொறுப்பை அவர்கள் கூறியே ஆக வேண்டும்.

பிரதமர் கூறுவதுபோன்று அவர்களில் பெருமளவானோர் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பில் எனின், அவர்களுக்கு என்ன நடந்தது. அவர்கள் உயிருடன் இல்லாமல் போனதற்குக் காரணமானவர்கள் யார் ? இதற்கான உத்தரவுகளை பிறப்பித்தவர்கள் யார்? அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை என்ன? இதுபோன்றகேள்விகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய பொறுப்பும் அரசுக்குரியது என்பதையும் மறந்து விடலாகாது. எனவே, தமிழ் அரசியல் தரப்புகள் இது விடயத்தில் ஆழ்ந்த அக்கறைக்கொண்டு செயற்பட்டு இதற்கான தீர்வைக் கண்டடைய வேண்டும் என்பதை தைபிறந்த இவ்வேளை வலியுறுத்த விரும்புகிறோம்.

# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

(நேற்றைய தொடர்ச்சி)

எம் முடைய விருப்பத்தை ஒரு முகமாகக் குவித்து நினைத்த மாதிரி செயற்பட்டு முன்னேறிப் பணத்தைப் பெற வேண்டும். உலகத்தின் அசைவுகள், இயக்கங்கள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் ஆசை தான். இந்த ஆசையே அரிய படைப்புகளை உருவாக்கி இருக்கின்றது. ஆகையால் ஆசையுள்ளவர்கள் செவிடர்களுக்குக் காது கேட்கும் கருவிகளை செய்து தந்திருக்கிறார்கள். குருடர்களுக்கு படிக்கும் நூலை வெளியிட்டு இருக்கிறார்கள். இவை யாவும் எம்மைப் போன்ற ஒருவரின் கண்டுபிடிப்புத்தான். அந்தக் கண்டுபிடிப்பின் மூலம் கோடி மக்களுக்கு உதவி செய்தது மட்டும் இல்லாமல், கோடி கோடியாகச் செல்வத்தைப் பெற்றார்கள். குருடனுக்கு கண் எதற்கு, செவிடனுக்குக் கேட்கும் கருவி எதற்கு என்று எண்ணாமல் தேவையைப் பூர்த்தி செய்து செல்வத்தைப் பெற்றார்கள். மீண்டும் மீண்டும் ஒன்றைச் சொல்லுவதால், நினைப்பதால், செய்வதால் நாம் உயர்ந்து கொண்டே போக முடியும். தனக்குத்தானே நினைவூட்டிக் கொண்டிருப்பது தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதன் மூலமே பணத்தைப் பெறமுடியும். இதனை எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் தெரியுமா?



எம்முடைய வாழ்க்கையில் நாம் எண்ணுகிறது கட்டாயம் நடக்கும். வெற்றியடையும் வரை முயற்சியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும்.

நாம் அழிந்து விட்டோம் என்று நினைத்தால் அழிவின் பாதை தெரியும். வாழப் போகிறோம் என்று எண்ணினால் வாழ்வுப்பாதை தெரியும். இழந்து விட்டோம் என்று நினைத்தால் இழப்பின் வழி புலனாகும். தாழ்ந்து விட்டோம் என்று எண்ணினால் தாழ்வான பாதைதெரியும். எந்த எண்ணமாக இருந்தாலும், ஏனோ தானோ என்று நினைத்துப்பயனில்லை. அழுத்தம் திருத்தமாக எண்ண வேண்டும். கைக்கு வந்து விட்டதைப்போல உணர வேண்டும். எம்மைச் சுற்றியே நலமான நல்ல தடையான வேலியை அமைத்துக் கொள்வது கெட்டிக்காரத்தனம்.

மனிதனாகப் பிறந்த நாம் பணம் சம்பாதித்தே தீர வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையிலே நிம்மதி காண முடியும். எவ்வளவு பணம் சம்பாதிக்க வேண்டுமென்பது அவரவர் குறிக்கோளைப் பொறுத்தது; சம்பாதிக்காமல் இருக்க முடியாது.

பொருளை அடைய வேண்டும், பணத்தைப் பெற வேண்டும் என்னும் அறிவு, உருவர்க்கும் தன்மையாலும் வாணிப முறையாலும் எழ முடியும். எப்படியாவது பிறருக்குப் பயன்படும் தொழிலைச் செய்து பணத்தைப் பெறவேண்டும். உட்கார்ந்த பிறகுதான் படுக்கமுடியும். உட்காராமலே படுக்க முடியாது. எதையும் திட்டம் போடாமலே செயலைச் செய்து பணத்தை சம்பாதிக்க முடியாது. பணத்தைப் பெற அடித்தளமாக இருப்பது திட்டமே! எமது திட்டத்தின் தரமும் செயலின் பெருக்கமும்தான் நம்மை வாழவைக்கும். ஆயினும் நம்மிடமுள்ள திறமையும் மன எழுச்சியும் தான் பொருளையும், புகழையும் கொண்டு வந்து தரும். திட்டம் எமக்குள்ளாகப் புதைபொருளாக, சுனை ஊற்றாக பீறிட்டுக்கிளம்ப வேண்டும்.

மக்களுடைய வாழ்க்கையில் அவர்களுடைய திட்டங்களிலும் முயற்சிகளிலும் நிறைவேறாமையைக் காண்பதற்குக் காரணம் திட்டத்திலுள்ள குறைதான். ஏதோ ஒன்று எங்கோ குறை இருக்கிறது என்பது மட்டும் உறுதி என்கிறார் எமர்சன். எம் முடைய யோசனைகள் எல்லாம் உருவம் பெறுவது மனதில் தான். அதுவே சிந்தனையாக மாறுகிறது. சிந்தனைப் பயனே நாம் உபயோகப் படுத்தும் பொருள்கள் எல்லாம் சிந்தனை இல்லாவிட்டால் பொருள்களை உருவாக்க முடியாது. ஆசை, பற்று, வேட்கை, யோசனை, இலட்சியம் இவையெல்லாம் செயல்களாக மாற்றப்படுவது எங்கே என்றால் அந்த இடம் சிந்தனையாகிய பட்டறையில்தான். சிந்தனைதான் எதனையும் உருவாக்க முடியும்.

இதனால்தான் ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார், மனிதன் என் பவன் ஓர் அளவுக்கு உட்பட்டவன். ஆனால் அவனுடைய சிந்தனா சக்தியை அளந்தவர்கள் இல்லை. அதற்கு அளவு கிடையாது. நீளமும் அகலமும் இல்லை ஓய்ந்த மூளையைக் கொண்டு என்ன செய்யமுடியும்?

வளர்பிறை என்பது வாழ்நாளில் தோன்றவே செய்யாது. உன்சிந்தனையிலே பணத்தைப் பார்க்காவிட்டால் வாழ்க்கையின் இந்தச் செல்வத்தைக் காண முடியாது என்கிறார் எமர்சன். சிந்தனையிலே செல்வத்தைத்தேடு என்று கட்டளையிடுகிறார்களே. ஆசை முதன்மையானது என்றாலும் பற்று இரண்டாவதாகும். உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுள் உயர்ந்தது பற்று. இது அதிக சக்திஉடையது. ஆசை தோன்றி மறையும் தன்மையுடையது. பற்று சாதாரணமாகத் தோன்றாது; தோன்றினால் நீங்காது. எத்தகைய நிலை ஏற்படினும் பற்று நிலை மாறாது. தண்டு எப்படி வளைந்திருக்கிறதோ அப்படித்தான் செடியும் வளைந்து இருக்கும். காலம் வந்தால்தான் பணக்காரனாக மாற முடியும் என்று சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால் என்றுமே பணக்காரனாக முடியாது. எம்முடைய சிந்தனையின் மதிப்பு எவ்வளவு என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பணத்தை விரும்புவது பெரிதல்ல! எவ்வளவு பணத்துக்கு எம்முடைய சிந்தனை பொருத்தமானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

> "தனக்குத்தானே நினைவூட்டிக் கொண்டிருப்பது தன்னம்பிக் கையை வளர்த்துக்கொள்வதன் மூலமே பணத்தைப் பெற முடியும். இதனை எப்படி வளர்த் துக்கொள்ள வேண்டும் தெரியுமா? எம் முடைய வாழ்க்கையில் நாம் எண்ணுகிறது கட்டாயம் நடக்கும்."

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்தியுடன் ஜோடி சேரும் நயன்தாரா



"பிரியாணி", "மெட்ராஸ்", "கொம்பன்" என வரிசையாக வெற்றிப் படங்களை தந்த கார்த்தி அடுத்து நடிக்கு படம் "காஷ்மோரா". "இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா" படப் புகழ் கோகுல் இயக்கும் இந்தப் படத்தில், கார்த்திக்கு ஜோடியாக நயன்தாரா, சிறிதிவ்யா என இரண்டு நாயகிகள் நடிக்கிறார்கள். விவேக் முக்கியமான ஒரு பாத்திரத்தில் நடிக்கிறார். "ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ்" நிறுவனம் சார்பில் எஸ்.ஆர். பிரகாஷ் பாபு, எஸ்.ஆர்.பிரபு இணைந்து தயாரிக்கும் இந்தப் படத்துக்கு ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு செய்கிறார். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார். இந்தப் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஏற்கெனவே நடந்து முடிந்தது. இதனைத் தொடர்ந்து ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு "காஷ்மோரா" வின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இந்த படப்பிடிப்பில் கார்த்தியுடன் நயன்தாரவும் இணைந்துள்ளார். வித்தியாசமான கதை அமைப்புடன், பிரம்மாண்ட படமாக உருவாகி வருகிறது கார்த்தியின் காஷ்மோரா!

## புரிதல்

அநாதை விடுதியில் ஒரு பிச்சைக்காரி அழுது கொண்டிருந்தாள். "ஏன் அழுகிறாய்?" என்று அங்கே இருந்த பார்வையற்ற மூன்று பெண்கள் கேட்டனர். "என் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். திடீரென அந்தக் குழந்தை இறந்து விட்டது." என்றாள் பிச்சைக்காரி. "பால் எப்படியிருக்கும்?" எனக் கேட்டாள் ஒரு பார்வையற்ற பெண். "வெள்ளையாக இருக்கும்." என்றார் அங்கிருந்த ஒருவர். வெள்ளை எப்படி இருக்கும் என அடுத்த பார்வையற்ற பெண் கேட்டாள். கொக்கு மாதிரி இருக்குமென இன்னொருவர் சொன்னார். கொக்கு எப்படி இருக்குமென மூன்றாவது பார்வையற்ற பெண் கேட்டாள். உடனே ஒரு கொக்கைப் பிடித்து கொண்டு வந்து அந்தப் பெண்களின் கைகளில் கொடுத்தார்கள். அதைத் தொட்டுப் பார்த்த அந்த பார்வையற்ற பெண்கள் "இவ்வளவு பெரிய ஒரு பொருளை குழந்தையின் வாயில் திணித்தால் குழந்தை சாகாமல் என்ன செய்யும்?" இதைப் போலத் தான் பல சமயங்களில் பல விடயங்களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் நமது கருத்துக்களை அள்ளி வீசுகிறோம்.



படித்ததில் பிடித்தது

WhatsApp

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 3 | | | 4 | 2 | |
| | | | | | | 1 | | |
| 3 | | | | 2 | | | 8 | 6 |
| | | 1 | | | 2 | | | |
| 4 | 5 | | | | | | 6 | 8 |
| | | | 4 | | | 5 | | |
| 9 | 6 | | | 7 | | | | 4 |
| | | 3 | | | | | | |
| | 8 | 7 | | | 9 | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 1 | 9 | 8 | 7 | 4 | 5 | 3 |
| 8 | 5 | 7 | 6 | 4 | 3 | 2 | 1 | 9 |
| 9 | 4 | 3 | 1 | 5 | 2 | 8 | 6 | 7 |
| 7 | 1 | 9 | 8 | 3 | 4 | 6 | 2 | 5 |
| 3 | 6 | 4 | 5 | 2 | 1 | 9 | 7 | 8 |
| 5 | 8 | 2 | 7 | 9 | 6 | 1 | 3 | 4 |
| 1 | 3 | 6 | 4 | 7 | 8 | 5 | 9 | 2 |
| 2 | 9 | 8 | 3 | 6 | 5 | 7 | 4 | 1 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 3 | 8 | 6 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணச் சேர்க்கை பெறுவார்கள்.

**இடபம்:** எவரிடமும் சொந்த விடயம் தொடர்பாக பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**மிதுனம்:** உறவினர்கள் நல்லெண்ணத்துடன் அன்பு பாராட்டுவர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** எதிரியின் தொல்லை மறையும். தொழில் வளர்ச்சிக்காக ஆர்வமுடன் பணியாற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பார்கள்.

**சிங்கம்:** உதவுவதுபோல சிலர் பாசாங்கு செய்வார்கள். தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். பணியாளர்கள் நேரம் தவறாமையை பின்பற்றுவார்கள். சொத்து, முக்கிய ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**கன்னி:** ஆடம்பரத்துக்காக கடன் வாங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். உறவினர்களிடம் கருத்து வேறுபாடு உண்டாகும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**துலாம்:** மனதிலும், செயலிலும் புத்துணர்வு பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அரசு வகையில் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள்களை வாங்குவீர்கள்.

**தனுசு:** அவசரப் பணியால் வெளியூர் செல்ல நேரிடும். நம்பிக்கையுடன் செயற்படுவது அவசியம். சகதொழில் சார்ந்தவர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். மாணவர்கள் வகுப்பில் முன்னிலை வகிப்பார்கள்.

**மகரம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். சகோதரர்களால் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** சமூக நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். பணியில் குளறுபடி வரலாம். தொழிலில் சுமாரான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு கூடும். மாணவர்கள் சீராகப் படிப்பார்கள்.

**மதுரக்காரி** @hanitha312 · Jan 2

ட்ராஃபிக்கில் சிக்கியிருக்கும் போது கூட நினைவுக்கு வந்தால் பொது இடமென்றும் பாராமல் களுக்கென்று சிரிக்குமளவு வாழ்வில் ஒரு சம்பவம் வேண்டும்.

(:ஊதா:/ மூங்கில்:) Retweeted

**மொக்க கீச்சுகள்©™** @mo

தோல்வியின் போது சிரித்தவர்களின் அளவுக்கு...! வெற்றியின்? போது பாராட்டியவர்களின் ஞாபகம் இருக்க வேண்டும்...!



**மனைவி:**
இன்னைக்கு வெயில் ரொம்ப அதிகமாக இருக்கு, நீங்க ஆபீஸ் போக வேண்டாங்க!

**கணவன்:**
என்னை நம்பு செல்லே... [illegible] ...வத்தில் போகத் தெரியாது!






அம்மாவுக்கு என்று தனியாக கவிதை வேண்டாம்.... அன்பாக பழகிப் பார் அம்மாவே கவிதை தான்.

பேஸ் புக்கில் பிடித்தவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 400 | 150 | – |
| கணவாய் | 600 | 600 | 600 | 400 | 600 | 500 | – |
| பாரை | 450 | 600 | 600 | 600 | 500 | 450 | 450 |
| சுறா | 300 | 600 | 600 | 800 | 450 | 600 | – |
| சீலா | 250 | 400 | 500 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 300 | 600 | 400 | – | 400 |
| முரல் | 250 | 400 | 400 | 400 | 350 | 500 | – |
| கும்பிளா | 300 | 350 | 400 | 500 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 300 | 400 | 300 | – | 250 | 200 | 350 |
| திரளி | 200 | 350 | 200 | 300 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 250 | – | 250 | 300 | 200 | 300 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 400 | 250 | 200 | 150 |
| மதனம் | 250 | 200 | 220 | 300 | 300 | 250 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 100 | 150 | 300 | 400 | 400 | 300 | – |
| வாழை | 150 | 150 | – | 300 | 250 | 300 | 200 |




## சிறிய மேசை விசிறி

மணிக்கூடாகவும், விசிறியாகவும் தொழிற்படும் சிறிய மேசை விசிறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2 சிறிய இறக்கைகளைக் கொண்ட விசிறி, சுழலும்போது மணிக்கூடு போன்று தோற்றம் அழிக்கிறது. எந்த யு.எஸ்.பி போர்ட்டிலும் இதனைச் செலுத்தி உபயோகிக்க முடியும். இதன் விலை 2000 ரூபா ஆகும்.

## நாளை

தை-06
புதன்கிழமை 20.01.2016
திதி: ஏகாதசி மு.ப.11.34
நட்சத்திரம்: ரோகிணி மு.இ.09.48
ராகுகாலம்: 12.35-02.05 வரை
சுபநேரம்: 05.05-06.35 வரை
ஏகாதசி விரதம்



# சமைப்போம் வாங்க

# கார போளி

**தேவையானவை:**

**மேல் மாவுக்கு:**
மைதா மா – 1 கப்
வெள்ளை ரவா – 1 கரண்டி
வெண்ணெய் – 1 கரண்டி
உப்பு – சிறிது
மஞ்சள் தூள் – 1 சிட்டிகை
எண்ணெய் – 1 கரண்டி

**பூரணத்துக்கு:**
உருளைக்கிழங்கு – 1
பச்சை மிளகாய் – 1
உப்பு – தேவைக்கு
கரட் துருவல் – 2 கரண்டி
மிளகாய்த்தூள் – 1 கரண்டி
மஞ்சள் தூள் – 1 சிட்டிகை
எண்ணெய் – 4 கரண்டி

## செய்முறை:

மேல் மாவுக்குக் கொடுத்தவற்றைத் தண்ணீர் சேர்த்து ரொட்டி மாவை விட சற்றுத் தளர்வாக போளி மா பதத்துக்குப் பிசைந்து அரை மணி நேரம் ஊற விடவும். உப்பு, மஞ்சள் தூள் சிறிதளவு பிசிறி 10 நிமிடம் வைத்திருந்து எடுக்கவும். பிறகு ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து வேகவிடவும். வெந்ததும் சட்டியில் எண்ணெய் விட்டு நறுக்கிய பச்சை மிளகாய், கரட் துருவல், மிளகாய்த்தூள், உருளை சேர்த்து வதக்க வேண்டும்.
இறக்கி ஆறியதும் சிறு உருண்டையாக உருட்டவும். ஒரு பொலித்தீன் பையில் எண்ணெய் தடவி மைதா பிசைந்ததில் இருந்து ஒரு சிறு உருண்டை எடுத்து தட்டி மேலே பூரணத்தை வைத்து மூடி கவிழ்த்துப் போட்டு போளியாகத் தட்டி தட்டில் போட்டு ஓரங்களில் எண்ணெய் விட்டு ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டு எடுக்கவும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 100 | 60–80 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 140 | 160–180 | 150 | 120 | 120 | 100 | 160 |
| கரட் | 180 | 200 | 300 | 180 | 300 | 320 | 180 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 30 | 30 |
| பயிற்றை | 160 | 160 | 150 | 160 | 160 | 140 | 100 | 200 |
| பாகல் | 180 | 140 | 160 | 160 | 160 | 160 | 150 | 250 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 60–80 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80–90 | 90 | 70 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 150 | 120–160 | 140 | 110 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 60 | 50–60 | 60 | 40 | 50 |
| தக்காளி | 70 | 50 | 70 | 80 | 60–70 | 60 | 55 | 40–50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 20–30 | 40 | 35 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 50 | 20–30 | 30 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 500 | 350 | 350 | 350 | 300–320 | 600 | 270 | 400 |
| புடோல் | 120 | 120 | 100 | 80 | 80–100 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 160 | 140 | 120 | 100–120 | 160 | 80 | 80 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 120 | 120 | 90 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 280 | 200 | 260 | – | 200 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 | 120 | 120 | 120 | 130 | 120 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 40–50 | 40–45 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 | 70–80 | 60 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 | 100–120 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 280 | 300 | 230 | 280–300 | 400 | 230 | 300 |
| இராசவள்ளி | 130 | 140 | 160 | 100 | 140–160 | 120 | 110 | 100 |



# சமையலறை இரகசியங்கள்

- இட்லிக்கு வாசனை தூக்கலாக வேண்டுமானால் குக்கர் தண்ணீரில், எலுமிச்சம்பழத் தோல் போடலாம்.
- கீரை வெந்ததும் மசித்து, எலுமிச்சம் பழம் பிழிந்தால் ரொட்டிக்கு சூப்பராக இருக்கும்.
- சமைக்கும் போது காய்கறிகள் நிறத்தையும், மணத்தையும் இழக்காமல் இருக்க திறந்து வைத்து சமைக்கவும்.
- சப்பாத்திகள் மென்மையாக இருக்க அதன் மாவை வெந்நீரில் பிசையவும்.
- முட்டையை உடைத்து ஊற்றியவுடன் சிறிது பாலையும் உளுத்தம் மாவையும் சேர்த்து ஆம்லேட் தயாரித்துப் பாருங்கள். சுவையாக இருக்கும்.
- கோழிக் கறியில் மஞ்சள் பொடி தடவி 10 நிமிடம் கழித்து நறுக்கினால் மாமிசத்திலிருந்து வரும் துர்நாற்றம் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## பேஸ்புக் நிறுவனத்தின் புதிய இணைய உலாவி

பேஸ்புக்நிறுவனம் இணையப்பயன்பாட்டாளர்களைத் தன்னுடன் 24 மணி நேரமும் இணைத்திருக்கும் விதத்தில் புதிய இணைய உலாவி (புரவுசர்) ஒன்றை உருவாக்க உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



தற்போது பேஸ்புக் நிறுவனம் வெளியிட்டிருக்கும் பேஸ்புக் செயலியில் நாம் பேஸ்புக் பக்கத்தை மாத்திரமே பார்க்க முடியும். வேறு தகவல்கள் தேவைப்படும் போது அந்தப் பக்கத்திலிருந்து வெளியேறியே அவற்றைப் பார்க்க முடியும்.

இந்தக் குறையைப் போக்கும் விதத்தில் புதிய இணைய உலாவிச் செயலி ஒன்றை உருவாக்க பேஸ்புக் நிறுவனம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இணையம் சார்ந்த அனைத்துத் தேடல்களும் இந்தப் புதிய செயலியில் இணைந்திருக்கும் வகையில் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மிகப் பெரிய எஸ்எஸ்டி

மொபைல் சாதனங்கள் மற்றும் டிஜிட்டல் கமெராக்களில். தரவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தும் சாதனங்களுள் ஒன்றே எஸ்எஸ்டி (சொலிட் ஸ்டேட் டிஸ்க்) ஆகும்.



இவை பொதுவாக இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய வகையில்பாரம்குறைந்தனவாகவும் சிறியனவாகவும் இருக்கும்.

ஆனால் முதன் முறையாக சாதாரண அளவை விடவும் பெரியதும், 13ரிபி சேமிப்பு நினைவகத்தித்தைப் கொண்டதுமான எஸ்எஸ்டி உருவாக்கப்பட்டுள்ளது.

செக்கனுக்கு 540எம்பி வேகத்தில் தரவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் இச்சாதனத்தின் அளவு 2.5 அங்குலமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சாதனை படைத்த ஜூனோ

வியாழன் கிரகத்தை ஆய்வு செய்யும் நோக்கில் நாசா விண்வெளி ஆய்வு மையத்தால் அனுப்பப்பட்ட ஜூனோ எனும் சோலர் விண்கலம் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.

இதுவரை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சோலர் மின்சக்தியில் இயங்கும் விண்கலங்களிலேயே அதிக தூரம் பயணம் செய்த விண்கலம் என்ற சாதனையே அதுவாகும்.

சூரியனிலிருந்து சுமார் 793 கிலோமீற்றர் தூரத்தைத் தாண்டிப் பயணம் செய்ததன் மூலம் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரத்தைப் போன்று 5 மடங்கு தூரத்தில் உள்ள வியாழக் கிரகத்தை அடைவதற்கு குறித்த விண்கலத்தில் 500 வோற்ஸ் மின்சக்தியை வெளிவிடக்கூடிய சோலார் பேனல் பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# வலுச்சேர்க்கும் ஹொல்சிம் லங்கா




LafargeHolcim குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக ஹொல்சிம் (லங்கா) லிமிட்டெட், சீமெந்து துறையில் முன்னோடியாக திகழ்வதுடன், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒப்பந்தக்காரர்களுக்கான பாதுகாப்பு செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது. 2015 டிசெம்பர் 11ஆம் திகதி சினமன் லேக்சைட் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஒப்பந்தக்காரர் பாதுகாப்பு செயலமர்வு என்பது, ஹொல்சிம் (லங்கா) நிறுவனத்தின் பங்குபற்றலுடன், சகல ஒப்பந்த நிறுவனங்களின் உயர் முகாமைத்துவ அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. ஆழமான அறிவுப் பகிர்வு, சிறந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் தலைப்புகள் பற்றிய உள்ளம்சங்களை பகிர்ந்து கொள்வது போன்ற விடயங்களை அறிமுகம் செய்யும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

80 வெவ்வேறு நிறுவனங்களின் 175க்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

ஹொல்சிம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஃபிலிப்பே ரிச்சார்ட் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பதன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், “சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்றன தொடர்பில் ஹொல்சிம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து அதிகளவு கவனம் செலுத்துகிறோம். இது போன்ற அறிவுப் பகிர்வு செயற்பாடுகள் மூலமாக, சகல துறைகளிலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பதை உறுதி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எவ்வித சந்தேகங்களுமின்றி மக்கள், உலகம் மற்றும் இலாபம் ஆகிய மூன்று அடிப்படை விடயங்களுக்கு அமைய அமைந்துள்ளன” என்றார்.

ஹொல்சிம் சுகாதார மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி கயான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது ஒரு தனி நபரினால் மேற்கொள்ள முடியாது. ஆனாலும் இன்றைய நிகழ்வில், இந்தளவு உயர் பங்குபற்றலை காணும் போது, மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. பெருமளவான பங்காளர்கள் தம்மை உண்மையில் அர்ப்பணித்துள்ளதுடன், மாற்றம் ஒன்றை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளனர்” என்றார்.

பாதுகாப்பு என்பதை ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருக்கு பெறுமதி எனும் வகையில் LafargeHolcimபின்பற்றி வருகிறது. தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலமாக பாதுகாப்பு என்பதை ஹொல்சிம், தலைமைத்துவத்தின் மூலமாகவும் பொறுப்புணர்வு ஊடாகவும் முன்னெடுத்துச் செல்கிறது.

# அமானா வங்கியில் டெபிட் அட்டை உரிமையாளர்களுக்கு வெகுமதிகள்



வட்டி சாராத இலங்கையின் முன்னணி உத்தரவுபெற்ற வர்த்தக வங்கியான அமானா வங்கி தனது டெபிட் அட்டை பாவனையாளர்களுக்கு, நாளாந்தம் அவர்கள் அட்டை மூலம் மேற்கொள்ளும் கட்டணங்களை மீள வழங்கும் ஓர் ஊக்குவிப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

2016 ஜனவரி 15ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் இந்த ஊக்குவிப்புக்காக நாளாந்தம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் (அதிகபட்ச மீளச்செலுத்தும் தொகை ரூபா 5,000). குறிப்பாக, பொருள் கொள்வனவு, உணவு, எரிபொருள், மருத்துவம், பயணம் போன்ற தேவைகளுக்காக டெபிட் அட்டையை பயன்படுத்துபவர்கள் இதற்காக தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

இந்த ஊக்குவிப்புப் பற்றி கருத்து வெளியிட்ட வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் மூலோபாய சந்தைப்படுத்தல் பிரிவுக்கான துணைத் தலைவர் சித்தீக் அக்பர், “இந்த பண்டிகைக்கால ஊக்குவிப்பின் ஊடாக எமது பண்டிகைக்கால கழிவு வழங்கல் திட்டங்களுக்கு மேலதிகமாக எமது டெபிட் அட்டை வாடிக்கையாளர்களுக்கு வெகுமதியளிப்பதற்காக நாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றோம்” எனக் குறிப்பிட்டார்.

அமானா வங்கியின் விசா டெபிட் அட்டை என்பது ஸ்மார்ட் சிப் தொழில்நுட்பத்துடன் தகவல்களை சேமித்து செயன்முறைப்படுத்துவதனால் வாடிக்கையாளர்கள் உபயோகிக்கும்போது அவர்கள் நிதியின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படுகின்றது. டெபிட் கார்ட் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் SMS அலாட்ஸ் சேவையினூடாக டெபிட் கார்ட் கொடுக்கல்வாங்கல்களை உடனடியாக அறியும் வசதியும் பெற்றுக் [illegible] கியியல் துறையுடன் முற்றிலும் இணங்கி செயற்பட்டுவரும் இலங்கையின் முதலாவது உத்தரவு பெற்ற வர்த்தக வங்கியான அமானா வங்கி கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் திரிசவி சபையில் பட்டியலிடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட பிட்ச் தரவரிசைக்கு அமைய வங்கியின் நீண்டகால தேசிய தரப்படுத்தலை உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டுக்கு இணைவாக 2014ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வொசிங்டன் நகரில் நடைபெற்ற 18ஆவது வருடாந்த உலகின் மிகச் சிறந்த வங்கிகளைத் தெரிவு செய்யும் விருது விழாவில் குளோபல் பைனான்ஸ் சஞ்சிகையினால் உலகில் முன்னேறி வரும் மிகச் சிறந்த இஸ்லாமிய வங்கியாக அமானா வங்கி அங்கீகரிக்கப்பட்டது. தனது மூலோபாய பங்காளிகளான மலேசியா பேர்ஹாட் இஸ்லாமிய வங்கி, சவுதி அரேபியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, பங்களதேஷின் ஏ.பீ. வங்கி ஆகியவற்றின் மூலம் ஊக்குவிக்கப்பட்டுள்ள அமானா வங்கி இலங்கையின் வங்கித் துறைக்குள் ஒரு புதிய பாதையை உருவாக்கி வருவதோடு நாடு பூராகவும் வளர்ந்து வரும் ஒரு பிரத்தியேக வங்கி முறைக்கான சந்தை வாய்ப்பில் தமது மூலதனத்தை மையப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றது.

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய**

பொது அமர்வுகளை நடத்தவுள்ளது.

இதற்காக அக்குழுவினர் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளனர்.

இதன்படி, பெப்ரவரி 5ஆம் , 6ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்திலும், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலும், 10 ஆம்,11 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்திலும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் அமர்வு நடத்தப்பட்டு பொதுமக்களிடம் கருத்துக்கோரப்படும்.

அத்துடன், பெப்ரவரி 23ஆம் திகதி முதல் கிழக்கு மாகாணத்துக்கும் குறித்த குழு செல்லவுள்ளது.

அந்தவகையில் 23ஆம், 24 ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்திலும், 25ஆம், 26 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், 27ஆம் , 29 ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்திலும் அமர்வு நடத்தப்படும்.

கொழும்பு மாவட்டத்தில் பணிகள் நேற்று ஆரம்பமாகின. எதிர்வரும் 22ஆம் திகதி முதல் விசும்பாய அலுவலகத்துக்கு வந்து கொழும்பு மாவட்ட மக்கள் புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும்.

(த-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனபாக்கியம் கந்தையா



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் கந்தையா 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - முத்துப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - சின்னாச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், தவமணி, நாக ராசா, பூலோகநாதன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராச துரை, ஜெயபூபதி, இராஜேஸ்வரி (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னமுத்து, சிவக்கொழுந்து, தங்கச்சியம்மா ஆகியோரின் மைத்துனியும், சுதாஜினி - மனோகரன் (கனடா), சுகந்தன் - தேவகி (பிரான்ஸ்), சிவாஜினி - பிரபாகரன், அனுராதா - விவேகானந்தன் (ஜேர்மனி), கவிதா - திருக்குமரன், ஜெயமோகன், ஜெயரூபி - சுபேசன் (டோகா), சுகந்தினி - சுபாஸ்கரன் (லண்டன்), ஜெயப்பிரியா, தேன்மொழி - தர்மசீலன், பொன்மொழி - சிறி, கீர்த்தனா - லஸ்மன் (கொலன்ட்) ஆகியோரின் பேர்த்தியும், மனோயன், நவீனா, வைதேகி, யசிகா, தாரணி, கௌதமன், அஸ்வினி, அபிதா, சாதனா, ஜானகி, வினோதினி,திவ்விகன், டிலக்சன்,கிருஷயன், கீர்த்தா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2016) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு.

தகவல்:
நா.ஜெயமோகன்
(பேரப்பிள்ளை)

(67640)(11,17,18)

## கபிரியல் ஜோஜ்

(முன்னாள் உத்தியோகத்தர் - Royal Ceylon Airforce - Kattunayaka)



மலர்வு 01 . 09 . 1937

உதிர்வு 18 . 01 . 2016

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இல.60 டேவிட் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியல் ஜோஜ் நேற்று (18.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கபிரியல் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி பேதுருப் பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், றீற்றா லூட்ஸ்மேரியின் (லங்காதேவி) பாசமிகு கணவரும், ஜோஜ் செல்வராஜ், ஜோஜ் ரட்ணராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், தீபிகா, டிலக்ஷி ஆகியோரின் மாமனாரும், நற்றாணியா, டெவினியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை, கொலின், பெர்னபேற் மற்றும் றோசா, மரியதாஸ், கிறேஸ் ஆகியோரின் சகோதர னும், லோறன்ஸ், ராஜசூரியர், அருளானந்தம், திரேசாபுஸ்பம் (புஸ்பம்), யோன்பிள்ளை, ஜெயசூரியர், விஜயசூரியர், இருதய மேரி (பாப்பா), பெனடிக்ட் தர்மசூரியர் ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2016) செவ்வாய்க் கிழமை மாலை 3 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா கோயிலில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.

(67779)(11,17,18)

## மரண அறிவித்தல்கள்



### செல்வி ஸ்ரீரம்மியா ஜெயராமசர்மா

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி ஸ்ரீரம்மியா ஜெயராமசர்மா 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜெயராமசர்மா-சுஜீவா தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீராம் இன் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01. 2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டுடை பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 296 7291,
077 147 9521.

தகவல்:
குடும்பத்தினர்

## முத்து நவரட்ணம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து நவரட்ணம் நேற்று முன்தினம் (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நவமணி, காலஞ்சென்றவர்களான பூமணி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஸ்ரீஸ்கந்தராசா - ரஞ்சினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.01. 2016) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவமணி (சகோதரி), ஸ்ரீஸ்கந்தராசா (மருமகன்)

## முருகேசு இரத்தினம்

பிறப்பு: 17.04.1940

இறப்பு: 18.01.2016



அரசடி நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இரத்தினம் நேற்று (18.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-கதிராச்சி தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், சசிக்குமார், யஸ்மின், ஆர்த்திகா, துவாரகா, பத்மினி, ஜோன்சன் ஆகியோரின் மாமனும், ஜொலின், ஜெவ்ரின் ஆகியோரின் பேரனும், இராசு, மார்க்கண்டு, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான யேசுராசா (ராசா) மரியதாஸ் (மனோ) மற்றும் இராசமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விமலாதேவி சிதம்பரநாதன்

வட்டு தெற்கைப்பிறப்பிடமாகவும் வட்டு வடக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி சிதம்பரநாதன் நேற்று (2016.01.18) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களாகிய பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் சண்முகம் சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் குமரன், அகிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச்செயலகம் - முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2016.01.19) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் றோட், வட்டு
வடக்கு, சித்தன் கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## நல்லையா பத்மநாதன்



சுதுமலை வடக்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நல்லையா பத்மநாதன் (பொபி)16.01.2016 சனிக்கிழமை ஜேர்மனியில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - தங்கம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - மல்லிகாதேவி தம்பதியினரின் மருமகனும் லோகேஸ்வரியின் (குணமணி) கணவரும் பத்மறஜி, றம்மியா ஆகியோரின் தந்தையும் துஷ்யந்தனின் மாமனாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, சிவசுப்பிரமணியம், ஆனந்தராசா, இராச மலர், கமலாசனி, ஜெகநாதன், சிவநாதன்(ஜேர்மனி), சுஜாத்தா (கனடா) ஆகியோரின் சகோதரனும் கனகேஸ்வரி (சோபனா - ஜேர்மனி), சிவனேஸ்வரி (சிவம் - ஜேர்மனி), சிவதாஸ் (தாஸ் - ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மனோரஞ்சிதம் அமிர்தலிங்கம்



கோப்பாய் தெற்கு, கிராமசபை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதம் அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று (18.01.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இந்திரன் மற்றும் கருணேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கிருபாசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கௌசிகனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சுந்தரலிங்கம், யோகேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2016) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு மயானத்தில் மு.ப. 10.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராமசபை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
இ.கருணேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 29ஆவது பிறந்தநாள் நினைவும்



பிறப்பு 19 . 01 . 1987

உதிர்வு 18 . 12 . 2015

கடந்த 18.12.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

### அமரர் கிருபராஜா மதுசூதனன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.01.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரது நண்பர்களுடன் தொடர்புகொள்ள முடியாதிருப்பதால் இதனை அவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவவாசம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 67ஆவது பிறந்தநாள் நினைவும்

மலர்வு 21 . 01 . 1949



உதிர்வு 29 . 01 . 2015

### அமரர் சோதிமணி நவரட்ணம்

வாழ்க்கை எனும் ஓடத்தில்
எமைச்சுமந்த அன்புப் பெட்டகமே
அன்பாக அரவணைத்த உம் கணவர்,
பண்பாய் நீர்வளர்த்த பிள்ளைகள்
பாசமாய் பார்த்திருந்த உம் மருமக்கள்
உடன் பிறப்புக்கள்
செல்லமாய் T.P இல் கதை சொல்லும் பேரன், பேர்த்திகளின்
கொஞ்சும் மொழி கேட்பீர்கள்
இத்தனையும் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்
எம் கண்ணில் நீர் சொரிய...

பருத்திக் கலட்டி,
சுன்னாகம்.

(67776)(II,17,18)

குடும்பத்தினர்.
மகன் – பிரகாஷ் (கண்ணன்)


## வலி. வடக்கு

விட்டது.

இவ்வாறு வலி.வடக்கு தலைவர் அ.குண பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வலி.வடக்கு காணி விடுவிப்புத்தொடர் பில் எதனையும் தெரிவிக்கவில்லை. அத்துடன் மயிலிட்டித் துறைமுகத்தை விடுவிக்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக, சில ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந் தது. இது தொடர்பில் கண்டனம் தெரிவித் து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, மீள்குடியேற்ற ம ற்றும் புனர்வாழ்வுச் சங் கத்தின் தலைவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

தேசிய நத்தார் விழாவில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வலி.வடக்கு மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்றிருந்தார். ஆறு மாத காலத்தில் அந்த மக்கள் அவர் களது சொந்த இடங்களில் குடியமர்த்தப் படுவார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தி ருந்தார். இதனால் எங்கள் மக்கள் மிகுந்த சந்தோசத்தில் இருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப் பாணத்துக்கு வந்து, இராணுவத்தினருடன் கலந்துரையாடி விட்டு மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் எதுவும் தெரிவிக் கவில்லை. இது எங்களது மக்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இதனால் காணி விடுவிப்புக்காக ஒன்றிணைந்து போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விமான நிலைய அபிவி ருத்தியோ, துறைமுக அபிவிருத்தியோ எங்களுக்குத் தேவையில்லை. முதலில் எங்கள் காணிகள் விடுவிக்கப்படவேண் டும்.

நல்லாட்சி அரசின் கரும் புள்ளியாக எங்களது போராட்டம் அமையக் கூடாது எனின் முதலில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்-என்றுள் ளது. (த-5)

## மாற்று இடங்கள்

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களின் 2ஆயிரத்து 149 ஏக்கர் காணிகள் அரசால் மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டுச் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக குறித்த காணிகளின் உரிமையாளர் களான தமிழ் மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படுவதாக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தங்களுக்கு மாற்றுக் காணி எதுவும் வேண்டாம். சொந்தக் காணியைத் தாருங்கள் என்று தெரிவித்தே குறித்த மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.15 மணியளவில் ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது. அங்கு மாவட்ட செயலருக்கான மனுக் கையளிப்புடன் நிறைவடைந்தது.

சிங்கள அரசே எமது பூர்வீகக்காணி களை மோசடி செய்யாதே, எமது நிலங் கள் எமக்கு வேண்டும், மாற்றுக் காணித் திட்டம் எமக்கு வேண்டாம், எங்களது பூமியை எங்களிடமிருந்து பறிக்காதே போன்ற பதாகைகளை ஏந்தியும், கோசங் களை எழுப்பியும் பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-21-ரி7)

## தமிழக

வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 4 பேரையும் மன்னார் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளது.

குறித்த 4 மீனவர்களின் விடுதலை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி நேற்றுத் திங் கட்கிழமை மன்னார் நீதிமன்றத்துக்குக் கிடைக்கப்பெற்ற நிலையில் குறித்த மீனவர்கள் 4 பேரை யும் மன்னார் நீதி வான் ஆசிர்வாதம் கிரேசியன் அலெக்ஸ் ராஜா விடுதலை செய் தார்.

குறித்த மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரக அதி காரிகள் பொறுப் பேற்றுக் கொண் டனர்.

இதேவேளை, தலைம ன்னார்க்கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன் றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு விளக் கமறியலில் வைக்கப் பட்டுள்ள மேலும் 15 இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற் கான அனுமதியும் கிடைக்கப்பெற்ற நிலையில் , குறித்த மீனவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத் துக்கு அழைத்து வரப் பட்டு விடுதலை செய்யப் படவுள்ளதா கவும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித் தார். (த-56)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
திரு. பசுபதி தர்மபூபதி
அவர்களின் தாயார்
திருமதி மேரி திரேசா பசுபதி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/ ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை
புத்துவெட்டுவான்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்

அன்னை மடியில் 08 . 07 . 1960



ஆண்டவன் அடியில் 21 . 12 . 2015

அமரர்
### தனபாலரட்ணம் பாலகுமரன் (அன்பு)
[மென்பொருள் பொறியியலாளர் – அமெரிக்கா]
(Software Engineer - America)

கடந்த 21.12.2015 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது அன்பு தனபாலரட்ணம் பாலகுமரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை [20.01.2016] புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 21.12.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்பின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களிற்கும், தொலை பேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களிற் கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களிற்கும் மற்றும் நேரடியாக வந்து சரீர உதவிகள், பிற உதவிகள் புரிந்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

25/15, அருளம்பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக்கையால்

இரண்டாம் எதிரியாக விக்னராஜா செல்வேந்திரனும், மூன்றாம் எதிரியாக சிவதாசன் நிசாந்தனும் அடையாளப்படுத்தப்பட்டனர். மூன்று பேருக்கும் எதிராகச் சட்டமா அதிபரினால் கொலை மற்றும் கொள்ளைக் குற்றச்சாட்டுக்கள் கொண்ட குற்றப் பகர்வுப் பத்திரம் யாழ் மேல் நீதிமன்றில் 2014 ஜூன் 28 ஆம் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான விசாரணையின்போது சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டன.

குறித்த குடும்பஸ்தரின் வீட்டுக்குச் சென்ற 3 பேரும், சத்தியநாதனுடன் நீண்டநேரம் தங்கிநின்று கலந்துரையாடியுள்ளனர். பின்னர் அவர் உலக்கையால் தாக்கப்பட்டுள்ளார். அதன்போது சத்தியநாதன் கட்டிலில் விழக் குறித்த 3 பேரும் சத்தியநாதனின் ஹைஏஸ் வாகனத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு உலக்கையுடன் வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர்குடமியன் இராணுவமுகாமை அண்மித்துள்ள வயல்கரையில் வாகனத்தை நிறுத்தி உலக்கையை வயலினுள் வீசியுள்ளனர். அதனை முகாமிலிருந்து தொலைநோக்கியொன்றின் மூலமாகச் சிப்பாய் ஒருவர் கண்டுள்ளார். குறித்த காலப்பகுதி போர்க் காலம் என்பதால் வாகனம் வந்து நின்றவுடன் சிப்பாய் சுறுசுறுப்படைந்திருக்கக்கூடும்.

உடனடியாக அந்தச் சிப்பாய் வீதிக்கு ஓடிவருவதற்கிடையில் வாகனத்தில் வந்திருந்த குறித்த 3 பேரும் அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டனர். அதனால் ஏனைய 2 சிப்பாய்களை குறித்த இடத்துக்கு அனுப்பி அந்த இடத்தில் என்ன போட்டுவிட்டுச் செல்கிறார்கள் என்று பார்க்க அனுப்பியுள்ளார் குறித்த சிப்பாய். அங்கு சென்ற சிப்பாய்கள், இரத்தம் தோய்ந்த நிலையில் இருந்த உலக்கையை எடுத்துச் சென்று உயரதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர். அது பற்றிச் சுட்டிபுரம் இராணுவ முகாமுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அப்போது ஹைஏஸ் வாகனம் வேகமாகச்சென்றுவிட்டதாகவும், ஆனால், மோட்டார் சைக்கிளைத் தடுத்து நிறுத்தி அதனைக் கைப்பற்றியதுடன். அதனை ஓட்டிச்சென்றவரைக் கைது செய்துள்ளதாகவும் குறித்த சிப்பாய் நீதிமன்றில் சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் தலைமறைவாகியுள்ளார். விசாரணைகளின்போது நீதிமன்றத்தில் சாட்சியமளித்த முதலாம் எதிரியும், மூன்றாம் எதிரியும், குற்றச் செயலை இரண்டாம் எதிரிதான் செய்ததாகவும், வாகனம் தொடர்பான பணம் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்டிருந்த வாக்குவாதம் காரணமாகவே, இரண்டாம் எதிரி உலக்கையால்தாக்கியதுடன், அனைத்துக் குற்றங்களையும் அவரே செய்ததாகவும், இரண்டாம் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், நீதிமன்றத்தை ஏமாற்றும் வகையில் தெரிவித்தனர் என்று மன்று சுட்டிக் காட்டியது.

மூன்று எதிரிகளும் பொது எண்ணத்துடன் கொலையொன்றைச் செய்தமை, கொலை செய்ததன் பின்னர் இறந்தவரின் வீட்டுக் கதவை திட்டமிட்ட நோக்கத்துடன் பூட்டிவிட்டுச் சென்றமை, கொலைக்குப் பயன்படுத்திய உலக்கையை ஒளிப்பதற்கு மூவரும் சேர்ந்து நடவடிக்கை எடுத்தமை, இறந்தவரிடமிருந்துகொள்ளையடிக்கப்பட்ட வாகனம் இரண்டாம் எதிரியிடம் இருந்தமை ஆகிய அனைத்துச் செயற்பாடுகளும் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டன என்பது நிரூபணமாகியிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாது தலைமறைவாகியுள்ள இரண்டாம் எதிரியைச் சர்வதேசப் பொலிஸாரின் துணையுடன் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

குறித்த எதிரியைக் கண்டால் உடனடியாகக் கைது செய்யுமாறு கட்டுநாயக்க விமான நிலைய கட்டுப்பாட்டாளருக்கும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

பின்னர் நீதிமன்றத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன. அனைவரும் தலைகுனிந்த வண்ணம் எழுந்து நின்றனர். நீதிபதியும் எழுந்து நின்று குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் 3 பேருக்கும் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் குறித்த 3 பேருக்கும், வாகனத்தைக் கொள்ளையடித்த குற்றத்துக்காக 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. பின்னர் தீர்ப்பில் கையெழுத்திட்டுப் பேனாவை முறித்து எறிந்தார். அத்துடன் மன்று கலைந்தது.

சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டுஎதிரிகளையும்கண்டிபோகம்பரை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்குச் சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையாகி வந்த நிலையில் நேற்று திருமதி க.திருக்குமரன் முன்னிலையாகியிருந்தார். 2 ஆம் எதிரி சார்பில் சோ.தியாகேந்திரன் முன்னிலையாகி வந்த நிலையில் நேற்று ஏ.றஞ்சித்குமார் முன்னிலையானார். சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி முன்னிலையானார். (த-4)

## மீண்டுமொரு

கட்டியெழுப்புவதற்கு சட்டத்தால் மட்டும் முடியாது என்றும், அதனை சமய தத்துவங்களுக்கேற்பவே மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள சகல இனங்களுக்கு மத்தியிலும் அச்சம், சந்தேகத்தை இல்லாதொழித்து சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கு அரசு ஆரம்பித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முன்வருமாறு தாம் சகல சமயத் தலைவர்களிடமும் கேட்டுக்கொள்வதாகவும் ஜனாதிபதி கூறினார்.

களுத்துறை பயாகலை இந்துக் கல்லூரியில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றதைப்பொங்கல்பண்டிகை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதியை கல்லூரி மாணவர்கள் இந்து மத பாரம்பரியங்களுடன் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்புகின்ற போது இனம், சமயம் என்ற பேதங்கள் தடையாக அமையக்கூடாது என்றும், நாட்டிலுள்ள எல்லா இனத்தவர்களும்சமாதானத்துடனும்ஐக்கியத்துடனும் வாழ்வதைக் காண்பதே தனது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அரசியல்வாதிகளைப் பார்க்கிலும் சமயத்தலைவர்களுக்கு முக்கிய பங்குண்டு என்று இதன்போது குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தி மீண்டும் நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படாதவகையில் அடித்தளத்தை அமைக்க ஒன்றிணையுமாறு மகா சங்கத்தினர் உள்ளிட்ட இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் சமயங்களின் சமயத் தலைவர்களிடம் கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மகிந்த சமரசிங்க, இராஜாங்க அமைச் சர் ஏ.எச்.எம் பௌசி, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-4-5)

## யாழ். – கொழும்பு

கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து, வவுனியா இரட்டைப் பெரிய குளம் பகுதியில் நேற்று முன்தினமிரவு 9.30 அளவில் இடம்பெற்றது.

நெல் ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகனம் காற்றுப்போன நிலையில் வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டு ரயர் மாற்றிக்கொண்டிருந்தவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு ரக பஸ்வண்டியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் ரக வாகனத்துடன் மோதியுள்ளது.

இதனால் ரயர் மாற்றிக் கொண்டிருந்தவர், சொகுசு பஸ்சில் பயணம் செய்த சாரதி உட்பட 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில்தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மரதங்கடவை பகுதியைச் சேர்ந்த எம். முகமட் நசீம் (வயது 44) என்பவரே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜி. செந்தூரன் (வயது 35), மரதங்கடவையைச் சேர்ந்தவர்களான பௌசி (வயது 34), எம்.எம். பைஸ்மிர் (வயது 20), கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த எம். சுகந்தன் (வயது 34) ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று அதிகாலை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

விபத்து தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

அவ்விடத்தில் வெளிச்சம் இன்மை காரணமாகவே தரித்து நின்ற வாகனம் பஸ்ஸின் சாரதிக்குத் தெரியவில்லை என்று ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரிய வருகி றது.

குறித்த சொகுசு பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி நொருங்கியதோடு முன்பக்கம் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. கன்ரர் வாகனத்தில் இருந்த நெல் மூடைகள் சிலவும் சேதமடைந்து நெல்மணிகள் சிதறுண்டன. மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-4-402)

## ஈரானிடமிருந்து

இதனால் எரிபொருள்களின் விலை குறைவடையக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சந்திம வீரக்கொடி, ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகள் அகற்றப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஈரான் மீதான தடைகள் காரணமாக அண்மைக்காலமாக மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்படும் விலைக்கு அமைவாக ஈரானிலிருந்து எண்ணெயை பெற்றுக் கொள்ளமுடியுமாயின் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் மசகு எண்ணெய்க்கான விலைச்சுட்டெண் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். குறைந்த விலையில் எண்ணெய் இறக்குமதி செய்வதால், அதன்மூலம் கிடைக்கும் இலாபத்தை நாட்டு மக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொர்ணமலர் சந்திரபோஸ்



15ஆம் கட்டையடி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணமலர் சந்திரபோஸ் கடந்த (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் சந்திரபோஸின் அன்பு மனைவியும், பிரதீபன் (கனடா), மேனகா (தாவடி), பிரசாத் (தாவடி), பிரகாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யாழினி (கனடா), சதீஸ்குமார் (தாவடி), நதியா (தாவடி) ஆகியோரின் மாமியும், நிலா (கனடா), சாத்விகன், மதுஷா, பிரவீனன் ஆகியோரின் பேர்த்தியும், நடேஸ்வரன் (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்), கந்தையா காலஞ்சென்றவர்களான நேசமணி, தங்கமணி மற்றும் நாகலிங்கம், வேலானந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

075 6423508 தகவல்: பிள்ளைகள்.

## திருமதி மேரிதிரேசா பசுபதி

(ஓய்வுபெற்ற அதிபர்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.17/1, மாட்டீன் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மேரிதிரேசா பசுபதி அவர்கள் நேற்று (18.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிராம உத்தியோகத்தர் பசுபதி (லோறன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரகுபதி (SLAS) சகுந்தலா மற்றும் தர்மபூபதி (அதிபர் - யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) காலஞ்சென்றவர்களான நிர்மலா, ஜெயபதி மற்றும் பிரகலா (கனடா), ராஜபதி (ஆசிரியர் பாண்டியன் குளம் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் றொஜனி (ஆசிரியை - சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்) புண்ணியலிங்கம் (கனடா), ஜெனற்பபியுலா (கிராம உத்தியோகத்தர் - யோகபுரம் கிழக்கு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வேதநாயகம் மேரி மாக்கிறட், மேரி ஞானப்பூ, மேரி அந்தோனியாப்பிள்ளை (பிரான்ஸ்), பற்றிக்தோமஸ் காலஞ்சென்ற மேரி அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தூயனா, டிலக்சனா, கவின், ஆன்ரூ (கனடா), அலன் (கனடா), சௌமியா (கனடா), ஸ்ரெபனி (கனடா), தருண், றினோஜன், யூலின், மெலானி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், நடராசா மற்றும் பேரம்பலம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 4189 469 தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருக்கடியில் சிம்பாப்வே; மூன்றாவது ரி-20 நாளை

சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
தொடரில் மொத்தமாக நான்கு ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் பங்களாதேஷ் வெற்றிபெற்றுள் ளது. இதனால் தொடரை இழக் கும் நிலைமை அந்த அணிக்கு ஏற்படாது. ஆனால் குறைந்த பட்சம் தொடரைச் சமன்செய்ய வேண்டுமாயின், எஞ்சிய இரண்டு ஆட்டங்களையும் வெல்ல வேண்டிய நிலைமை சிம்பாப்வேக்கு ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் நாளைய ஆட்டத் தில் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கு கிறது சிம்பாப்வே. (ம)

# விடைபெறும் எண்ணமில்லை பேச்சை மாற்றும் வில்லியர்ஸ்




டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறப்போவதில்லை என்று தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.
டெஸ்ட்டில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படா விட்டால் முன்னணி வீரர்கள் விலகிவிடு வார்கள் என்று எச்சரித்திருந்த வில்லியர்ஸ், தனது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது என்றும் தெரிவித்தி ருந்தார். ஆனால் தற்பொழுது முரண்பா டான நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத் தியுள்ளார். அத்தோடு, டெஸ்ட் அணிக்கு தொடர்ந்தும் தலைமைப் பதவி வகிக்கவும் தயார் என்றவாறான கருத்தை, அவர் வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் - ஓய்வு தொடர்பாக நான் சிந்தித்தது உண்மை தான். அது நிரந்தர ஓய்வை அல்ல. மாறாக என்னை புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ள சிறிது காலம் ஓய்வு பெற விரும் பினேன். தென்னாபிரிக்காவுக்கு சில மாதங் கள் மோசமாக அமைந்துள்ளன. அதற்காக வீரர்களின் திறமையில் தவறேதும் இருப்ப தாகத் தெரியவில்லை. தென்னாபிரிக்கா அணி தோல்வி முகத்தில் இருந்து மீண்டு எழும். இழந்த முதலிட அந்தஸ்தை மீண்டும் பெறுவோம் என்றார். (ம)

## இந்தியா– ஆஸ்திரேலியா நான்காவது ஆட்டம் நாளை

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடை யிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் கான் பெரா மைதானத்தில் நாளை நடைபெற வுள்ளது.
ஏற்கனவே முடிவடைந்த முதல் மூன்று ஆட் டங்களிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ள காரணத்தினால் எஞ்சிய இரண்டு ஆட்டங் களிலும் வெற்றிபெற்றாலும் இந்தியாவால் தொடரைக் கைப்பற்ற முடியாது. ஆனால் தரப்படுத்தலில் இரண்டாமிடம் என்ற தனது இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாயின் ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெறவேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஆட்டம் காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகும். (ம)





## செரீனாவுக்கு முதல் வெற்றி

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வரு கிறது. இதில் தனது முதலாவது சுற்றில் செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.
நடப்பு சம்பியனும், உலகின் முதல் நிலை வீராங்கனையுமான அமெ ரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தனது முதல் சுற்றில் இத்தாலியை சேர்ந்த கேமிலாவை எதிர்கொண்டார். இதில் செரீனா வில்லியம்ஸ் 6:4, 7:5 என்ற நேர்செற் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். அவர் இரண்டாவது சுற்றில் சீனாவின் சூட்வெய அல்லது இத்தாலியின் ஜெல்னாவை எதிர்கொள்ளலாம். (ம)

## "உன்னையெல்லாம் எவளவோ அடிச்சாச்சு" பல்க்நெருக்கு பதிலடி கொடுத்த கோக்லி

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே யான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் கோக்லியும் பல்க்நெரும் வார்த்தை மோதலில் ஈடுபட்டமை இலக்கு களின் இடையே பொருத்தப்பட்ட ஒலி வாங்கியின் மூலம் தெளிவாகத் தெரியவந்துள்ளது.
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதிய 3 ஆவது ஒருநாள் ஆட்டம் மெல்பேர்னில் நடைபெற்றது. இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. கோக்லி இந் திய அணியின் ஓட்டங்களை உயர்த்த ஆக்ரோசமாக விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது 35ஆவது பந்துப்பரிமாற்றத்தை பல்க்நெர் கோக்லிக்கு வீசினார். அந்த பந்துப்பரிமாற்றத்தில் முதல் 4 பந்துகளை கோக்லியால் அடிக்க முடியவில்லை. பின்னர் 5ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். அப்போது பால்க்நெர், 'எனது பந்துவீச்சை அடித்து நொறுக்க முயற்சி செய்கிறாயா? என்று கோக்லியை சீண்டி னார். இதற்கு கோக்லி, 'எனது வாழ்கையில் உன்னை போதுமான அளவு அடித்து நொறுக்கி விட்டேன். உனது நேரத்தை வீணாக்காமல் பந்து வீசு' என்று பதி லடியாக பதிலளித்தார். நடுவர் இருவரையும் உடன டியாகச் சமாதானம் செய்ய இருவரும் சிரித்துக் கொண்டே சென்றனர். (ம)



## ஞானமுருகன் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 19
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல் லூரி மைதானத்தில இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.லூட்ஸ் அணி மோதிக் கொண் டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)

## சண்டிலாவுக்குத் தடை





ஐ.பி.எல்.தொட ரின் பொழுது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணிக்காக விளையாடிய சண்டிலா, கீகென்சா ஆகி யோர் மீது குற் றம் சாட்டப்பட் டது. இதனால் அவர்கள் இருவருக்கும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வாழ்நாள் தடை விதித்தது.
இவர்கள் மீதான நடவடிக்கை குறித்து இறுதி முடிவு எடுக்க கடந்த மாதம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மனோகர் தலைமையிலான ஒழுங்கு நடவடிக்கை குழு கூடியது. அப்போது சண்டிலால் மற்றும் கீகென் இருவரும் இந்த குழுவின்முன் முன்னிலை யாகினார்கள். இந்த ஆலோசனையின் முடி வில், அஜித் சண்டிலாவுக்கு வாழ்நாள் தடை யும், கீகென் சாவுக்கு 5 ஆண்டுகள் தடையும் விதிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ரி-20 உலகக் கிண்ணத் தொடர் கடினமானது - ரெய்னா

ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய அணிக்கோ அல்லது ஏனைய அணிகளுக்கோ எளிதானதாக இருக்காது என்று அதிரடி துடுப்பாட்ட வீரரான ரெய்னா தெரிவித்துள்ளார்.
மோசமான திறன் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரெய்னா இடம் பெற வில்லை. தற்போது உள்ளூர் தொடரில் உத்திர பிரதேச அணியை வழி நடத்தி வருகிறார். இந்த நிலையில் சொந்த மண்ணில் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்றாலும் இந்திய அணிக்கு அது எளிதாக அமையாது என்று ரெய்னா தெரிவித்துள்ளார். ஏனைய அணிகளும் இலகுவில் கிண்ணம் வெல்ல முடியாது என்றும் எச்சரித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'உலகக்கிண்ணத் தொடரில் வீரர்கள் கடினமாக உழைக்க வேண்டியது அவசியமான ஒன்று. முக்கியமாக பந்துப்பரிமாற்றங்களில் சிறப்பாக துடுப்பெடுத்தாட முயற்சி செய்ய வேண்டும். ரி-20 ஆட்டங்களில் எந்தவொரு அணியையும் சிறப் பாகச் செயற்படும் என்று சொல்லிவிட முடியாது. எனவே கிண்ணம் இந்த அணிக்குத்தான் என்று சொல்லிவிட முடியாது. போட்டி பெரிதாகவுள்ளது என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பமிலியன்ஸ், ஜொலிஸ்ரார் அணிகளுக்கு இலகுவெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 19
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டபிளை அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் பமிலியன்ஸ் அணி 37:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்; அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார் அணி 71:51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# குறோஸ்ரார், சென்.அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 19
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மன்னார் லீக்கில் பதிவுசெய்துள்ள அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் சில நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆயர் இரயாப்பு ஜோசப் மைதானத்தில் இடம்பெற்றன. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சாந்திபுரம் குறோஸ் ஸ்ரார் அணி மோதியது. இதில் சாந்திபுரம் குறோஸ்ரார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணிக்கும் விடத்தற்தீவு ஐக்கிய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## முல்லைத்தீவு கழகங்களின் காலிறுதியாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 19
முல்லைத்தீவு கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் சில நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு பிரதேசசபை மைதானத்தில் இடம்பெற்றன. முதலாவதாக இடம்பெற்ற சென்.அன்ரனிஸ் அணிக்கும் செம்மலை உதயசூரியன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற இளந்தென்றல் அணிக்கும் பாரதிதாசன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளந் தென்றல் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது. சென்.யூட் அணிக்கும் சுப்பாறாங் அணிக்கும் இடையில் இடம்பெற்றமூன்றாவது காலிறுதியாட்டத்தில் சென்.யூட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அலை ஒசை அணிக்கும் சந்திரன் அணிக்கும் இடையிலான நான்காவது காலிறுதியாட்டத்தில் சந்திரன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (ம-23)





## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
யாழ்ப்பாணம், ஜன. 19
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து யங்ஸ்ரார் 'பி' அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**
ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி மோதவுள்ளது. (ம-23)

# பற்றீசியன்ஸை வீழ்த்தியது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம், ஜன. 19
ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார் அணி 52:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஸ்ரார், சென்.ஜோன்ஸ் அணிகள் சம்பியனாகின நெடுந்தீவு கழகங்களின் கரப்பந்தாட்டத் தொடரில்

யாழ்ப்பாணம், ஜன. 19
நெடுந்தீவு பிரதேச செயலகங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நெடுந்தீவு ஸ்ரார் அணியும், பெண்கள் பிரிவில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணியும் சம்பியனாகின.

நெடுந்தீவு மகா வித்திலாயல மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த இறுதி ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் நெடுந்தீவு ஸ்ரார் அணியை எதிர்த்து நெடுந்தீவு வளர்மதி அணி மோதிக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் நெடுந்தீவு ஸ்ரார் அணி 25:20, 26:24 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து நெடுந்தீவு அன்ரனிஸ் அணி மோர்திக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணி 25:20 20:18 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-23)

# மன்னார் பிராந்தியம் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 19
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளம் நடத்தும் பிராந்தியங்களுக்கு இடையிலான 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது. அதில் மன்னார் பிராந்திய அணியை எதிர்த்து புத்தளம் பிராந்திய அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் பிராந்திய அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)






வவுனியா கோவில்குளம் இந்துக்கல்லூரியின் வைர விழாவை முன்னிட்டு குறித்த கல்லூரியின் அதிபர் ஜி.நடராசா தலைமையில் கடந்த சனிக்கிழமை மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 பந்துகளில் 50 ஓட்டங்கள் யுவியுடன் இணைந்த கெயில்



ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் கழகங்களுக்கு இடையிலான தொடரில் அதிரடி வீரர் கிறிஸ்கெயில் 12 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து யுவராஜ் சிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார்.

மெல்போர்னில் நடைபெற்ற அடிலெய்ட் ஸ்டிரைக்கர் அணிக்கும் மெல்போர்ன் ரெனிகெட்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிறிஸ் கெயில் 12 பந்துகளில் அரைசதம் விளாசினார். அவர் 17 பந்துகளில் 7 சிக்சர்கள், 2 பவுண்ரிகளுடன் 56 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். (ம)



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டில் வில்யோனின் பந்துவீச்சை எதிர்கொண்டபொழுது உடைந்து தெறிக்கும் மொயின் அலியின் துடுப்பு மட்டை. (ம)

## கிவித்தோவா நேர்செற் வெற்றி



நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், தான் எதிர் கொண்ட முதற் சுற்றில் வெற்றிபெற்றுள்ளார் கிவித்தோவா.

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் 6ஆம் இடத்தில் உள்ள வீராங்கனையான பெட்ரா கிவித்தோவா தனது முதல் சுற்றில் தாய்லாந்தை சேர்ந்த லுக்சிகாவைச் சந்தித்தார். இதில் கிவித்தோவா முதல் செற்றை 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தினார். இரண்டாவது செற்றிலும் கிவித்தோவாவின் ஆதிக்கம் நிலை பெற்றிருந்தது. 6:1 என்ற நேர் செற் கணக்கில் இரண்டாவது செற்றையும் எளிதில் வென்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார். (ம)



கடந்த வருடத்தின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக பார்சிலோனாவின் மெஸ்ஸி தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் பார்சிலோனா களமிறங்கிய ஓர் ஆட்டத்தில் மெஸ்ஸியின் படம் பொறித்த மிகப்பெரும் பதாகையை ஏந்தியுள்ள ரசிகர்கள். (ம)

## ஜியோனை பந்தாடியது மட்ரிட்

லா லிகா கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ரியல் டி ஜியோனை 5:1 என்ற கோல் கணக்கில் அபாரமாக வீழ்த்தியது ரியல் மட்ரிட்.

ஆட்டத்தின் 9ஆவது, 21ஆவது நிமிடங்களில் ரியல் மட்ரிட் சார்பாக ரொனால்டோ அடுத்தடுத்து இரு கோல்களை அடித்தார். 38 ஆவது நிமிடத்தில் பலே மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய 3:0 என்ற மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. இர்ண்டாம் பாதியின் 3ஆவது நிமிடத்தில் ஜியோன் சார்பாக இஸ்மா ஓர் கோலை விளாசினார். இதுவே அந்த அணியின் சார்பாக பதிவான ஒரே கோலுமாகும். 68 ஆவது, 81 ஆவது நிமிடங்களில் மட்ரிட் மேலும் இரண்டு கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். இரண்டாம் பாதியில் மட்ரிட்டின் சார்பாக பதிவான இரு கோல்களையும் பென்சிமா அடித்திருந்தார். (ம)



வேலைவாய்ப்பு
✦ அச்சு இயந்திரம் இயக்குநர்
✦ உதவியாளர்
(ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்)
077 990 7880
தொடர்பு: ES Printers 159, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

A/L Personal Class
Biology, Chemistry
Theory & 37 வருட Past Papers
கற்பிக்கப்படும்
T.P.No: 076 654 1292

வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்திற்கு நிர்வாகம் சம்பந்தமான வேலை வெற்றிடங்கள் உள்ளன.
O/L, A/L
படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
077 077 1377, 077 966 0885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.